https://tamileelamarchive.com/

ஏப்ரல் - 2008

# எரிமலை
# ERIMALAI



# மக்கள் போரின்
# இராணுவப் பரிமாணம்

சிறப்புப்பார்வை

## விடுதலைப் போரின் நலன்களும் மனிதஉரிமை மீறல் விவாதங்களின் எல்லைகளும்

https://tamileelamarchive.com/

# அன்னை பூபதி

அவர்களின்

## 21 ஆம் ஆண்டு

## அழியாத நினைவுகள்



பொங்கிய துயரின் பெருக்கிடை
சுங்குல் கழியவே எங்கள்
தாய்க் குலம்
கலங்கள் தூக்கவே
விளங்கும் ஒளியானாள்
வீரப் பூபதித்தாய்!

சுதந்திரத்தின் சுடரான
அன்னை இவள்
பதந்தனைத் தொடர்ந்த
புதிய பூபதிகள்
நிதம் எழுந்து நிலமிசை,
புலமிடை விரியவே,
கதிர்த்தெழுந்த கதிரவனாய்
முன்னை மூண்ட தீ
அன்னை பூபதி !

நினைவு நாள்:

ஏப்ரல் 19

https://tamileelamarchive.com/


# எரிமலை




## 04
விடுதலைப்போரின் நலன்களும்
மனிதஉரிமை மீறல் விவாதங்களின் எல்லைகளும்



## 16
மக்கள் போரின்
இராணுவப் பரிமாணம்



## 46
வளர்ச்சியுறும்
சீனாவின்
பொருளாதார எழுச்சி



## 40
கியூபா
கல்விக்கு
கலங்கரை விளக்கு

# உள்ளே...

### கட்டுரைகள்


| | |
|---|---|
| நாதன் | 04 |
| பொன்.பூலோகசிங்கம் | 08,52 |
| கலாநிதி.க.சோமாஸ்கந்தன் | 16 |
| த.ரமணன் | 20,58 |
| இராசகிளி | 22 |
| ச.பாலா | 25 |
| நா.யோகேந்திரநாதன் | 28 |
| திருமதி பு.தயாநிதி | 32 |
| இ.சாகித்தியன் | 40 |
| புவ.கிள்ளிவளவன் | 42 |
| கலி | 46 |
| யோ.சே.யோகி | 54 |




### கவிதைகள்


| | |
|---|---|
| ந.கிருஷ்ணசிங்கம் | 11 |
| ராதேயன் | 12 |
| வெற்றிச்செல்வி | 24 |
| யாத்ரிகன் | 45 |


### வரலாற்று நவீனம்


| | |
|---|---|
| தமிழ்க்கவி | 49 |


### சிறுகதை


| | |
|---|---|
| எஸ்.ராஜரத்தினம் | 60 |

https://tamileelamarchive.com/



«

உலக நாடுகள் தமது சொந்தப் பொருளாதாரக் கேந்திர நலன்களை முன்னெடுக்கின்ற போதும் மனித உரிமைகளுக்கும் ஜனநாயக விழுமி யங்களுக்கும் மதிப்புக்கொடுக்கத் தவறுவதில்லை. இந்தப் பிரபஞ்சமும் சரி, மனித வாழ்வியக்கமும் சரி, உலக உறவுகளும் சரி தர்மத்தின் சக்கரத்திலேயே இன்னமும் சுழல்கின்றன. இதனால்தான், விடுதலைக் காகப் போராடிய கிழக்குத்தீமோர், மொன்ரி நீக்ரோ போன்ற தேசங்கள் சர்வதேசத்தின் ஆதரவோடும் அனுசரணையோடும் புதிய தேசங்களாக அடிமை விலங்கை உடைத்தெறிந்துகொண்டு விடுதலை பெற்றன. கொசோவோ போன்ற தேசங்களின் விடுதலைக்காகவும் சர்வதேசம் தொடர்ந்தும் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது.

»

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்
மாவீரர் நாள் - 2007 உரையில் இருந்து...

https://tamileelamarchive.com/



# தலைவாசல்

## பின்னோக்கிச் செல்லும் காலக்கெடு

வழமையாகப் போரை நடத்தும் உயர்மட்ட அதிகாரிகள் பகிரங்கமாகக் காலக்கெடுக்களை வெளிப்படுத்துவதில்லை. எந்த மட்டில் போரை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்ற மதிப்பீட்டை வைத்திருப்பார்கள். இந்தவருடம், இந்த மாதம், இந்த நாள் என்று அவர்கள் அடித்துச்சொல்வதில்லை. பல எதிர்பாராத திருப்பங்களையும் நகர்வுகளையும் போர் நடவடிக்கைகள் தம்முடன் கொண்டுள்ளன. இவற்றை முன்கூட்டியே கணக்கில் எடுப்பது கடினம். விரைவில் போரை வெற்றிச் செய்தியோடு முடிவுக்குக் கொண்டுவர எல்லாத் தளபதிகளும் பொதுவாக முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் நினைத்தது போல் திட்டங்கள் நிறைவேறுவதில்லை. எதிர்பாராத நிகழ்வுகள் நன்கு வடிவமைக்கப்பட்ட போரியல் திட்டங்களைத் தலைகீழாக்கி விடுகின்றன. இதனால் அனுபவசாலிகள், இந்த நாளுக்கிடையில் போரை முடிவுக்குக் கொண்டுவருகிறேன், வெற்றிக் கனியைக் கையில் தருகிறேன் என்று சொல்வதை தவிர்த்து வருகிறார்கள்.

சிறிலங்காவின் சிங்களப் படைத்தலைமை ஒரு முற்றிலும் வித்தியாசமான போரியல் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கிறது. 1983ஆம் ஆண்டிற்குப்பின் தமிழ் - சிங்களப் போர் சூடுபிடித்த போது இப்புதிய பாரம்பரியம் தோற்றம் பெற்றது. புதிய பாரம்பரியத்தின் சாராம்சம் பின்வருமாறு. இதோ இன்ன மாதத்திற்கு முன் போரை முடிவுக்குக் கொண்டுவருகிறேன். அத்தோடு புலிகளின் கதையையும் முடித்து விடுகிறேன். இந்த இரட்டை இலக்கு ஒரே நாணயத்தின் இருபக்கங்கள் என்பது வெளிப்படை, போரை முடிவுக்குக் கொண்டுவருவது, புலிகளை அழிப்பது என்ற நெடுங்கால இலக்கோடு சிங்களத் தலைமை தமிழர்களுக்கு எதிரான போரை நடத்துகிறது. இது சாத்தியமற்ற விடயம் என்று தெரிந்தும், தெரியாதவர்கள்போல் சவால் விட்டபடியே இருக்கிறார்கள்.

இந்தப் புதிய பாரம்பரியத்தை ஆரம்பித்தவர் சிறிலங்காவின் தேசியபாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி. அவருடைய தளபதி சிறில் றணதுங்க இதற்கான ஒத்தாசையை வழங்கினார். ஒப்பரேஷன் வடமராட்சியை இருவரும் கூட்டாக நடத்தினார்கள். முழுவெற்றி நெருங்கிவிட்டது என்று கனவுகண்டபோது நெல்லியடியில் கப்டன் மில்லரின் மரணஅடி வீழ்ந்தது. இதைத்தான் போரின் எதிர்பாராத அம்சம் என்பார்கள். சிங்களப் படையின் வரலாறும் இலங்கைத் தீவின் வரலாறும் அதன்பின் முற்றாக மாறியது. 72 மணிநேரத்தில் புலிகளை நிராயுதபாணிகளாக்குவோம் என்ற உறுதிமொழியோடு இந்தியப்படை வந்து சேர்ந்தது. 3 நாள் 3 வருடமாகியது காலக்கெடு நிறைவேறவில்லை. காலக்கெடு விதிப்பது மிகப்பெரிய தவறு என்பதை மறுக்கமுடியாது.

சிங்களப்படை வரலாற்றில் மிகப்பெரிய சவடால் மன்னன் என்று வர்ணிக்கப்படும் றத்வத்தை காலக்கெடு விதிப்பதிலும், அர்த்தமற்ற உறுதி மொழிகளை வழங்குவதிலும் சாதனை படைத்தவர். அவர் தனித்துவமானவர், அவர் வாய்வீச்சில் நிகரற்றவர். ஆனால் தோல்விக்குமேல் தோல்வியைச் சந்தித்தபோது மனிதன் ஆடிப்போனார். இப்போது அஞ்ஞாதவாசம் செய்வதாகக் கேள்வி. இதே சவடால் பரம்பரையில் தோன்றியவர் இன்றைய தரைப் படைத்தளபதி ஜெனரல் சரத்பொன்சேகா, புலிகளின் தந்திரோபாய நகர்வுகளை அவர் தோல்வியின் அடையாளம் என்று தப்பு கணக்குப்போட்டார். இதன்காரணமாக 2008 நடுப்பகுதிக்கு முன் புலிகளை அழித்துவிடுகிறேன் என்று சில மாதங்களுக்கு முன் சவடால் விட்டார். இப்போது மன்னார்க் களமுனையில் சிங்களப் படை புலிகளிடம் அடிக்குமேல் அடிவாங்கிய பின் 2009 டிசெம்பர் வரை போர் தொடரும் என்கிறார். அதற்குப் பின் போருக்கான அவசியம் இருக்காது, ஏனென்றால் தமிழீழம் அப்போது பிறந்துவிடும் என்பது உறுதி.

எரிமலை
கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு

ஏப்ரல் 2008
இருபத்தேழாம் ஆண்டு
தாய்மண் வெளியீடு,
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்ஸ்

https://tamileelamarchive.com/

நாதன்

# விடுதலைப்போரின் நலன்களும்



# மனிதஉரிமை மீறல் விவாதங்களின்

இலங்கைத் தீவின் மனிதவதைகள் தொடர்பான கரிசனைகளை சர்வதேசத்திடம் இரக்கும் விடயமாக தமிழ் சமூகம் கருதாமல் விடுதலைப் போரின் நலன்களை முன்னெடுக்கும் கருவியாக பிரயோகிக்க வேண்டும் என்று இந்தப் பத்தி விவாதிக்கின்றது.

ஐ.நா மனிதஉரிமைகள் கவுன்சிலின் 7வது கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு சில வாரங்கள் முன்பு ஜெனீவாவில் எவ்வாறு இந்தக் கூட்டத்தொடரைக் கையாள்வது என்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம அனைத்துலக தமிழர் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. இன்றுள்ள சர்வதேச சூழலில் சிறீலங்காவிற்கு எதிராக வலுவான மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் நிலவிவருகின்ற போதும் ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் சிறீலங்காவினைக் கண்டிப்பதற்கு அல்லது தண்டிப்பதற்குரிய வாய்ப்புக்கள் காணப்படவில்லை என்கின்ற உண்மை அக்கூட்டத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் புரிந்திருந்தது. ஜெனீவாவினை மையப்படுத்தி அல்லது மனிதஉரிமைகளை மையப்படுத்தி ஆசிய - ஆபிரிக்க - இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே காணப்படும் தோழமையுணர்வானது சிறீலங்காவிற்கு எதிரான ஐ.நா மன்ற நடவடிக்கைகளுக்கு வாய்ப்புக்களை கொடுக்காது என்பது வெளிப்படையாக தெரிந்திருந்தது. மேலும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் லுயிஸ் ஆர்பர் அம்மையார் சிறீலங்கா உட்பட்ட சில நாடுகளின் கடும் அழுத்ததிற்குட்படுத்தப்பட்டு தனது பதவிக்காலத்தினை நீடிக்க விரும்பமால் ஒய்வுபெறும் சூழல் நிலவுவதால் எந்தளவு தாக்கத்துடன் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் பணிமனை சிறீலங்காவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விவாதிக்க முற்படும் என்கின்ற கேள்வி நிலவியது. இந்தப் புறச்சூழலில், சிறீலங்காவின் மனிதவதை நடவடிக்கைகள் பற்றிய விடயம் அடங்கிப் போகாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதே தமிழர் தரப்பு வியூகம் என்று அன்று முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்குடன் ஐ.நா ஆணையாளர் பணிமனை மற்றும் மேற்குலகினை மையப்படுத்திய அரசசார்பற்ற நிறுவனங்

https://tamileelamarchive.com/



# எல்லைகளும்

களை தொடர்பு கொண்ட போது வரவேற்பும், உற்சாகப்படுத்தலையும் தமிழர் தரப்புக்குக் கிட்டியது. ஆனால் அந்த தொடர்பாடல்களின் போது ஒரு பொது நிபந்தனை நிலவியமையை கவனிக்க முடிந்தது. சிறிலங்காவில் ஐ.நாவின் நிரந்தர மனித உரிமைகள் கண்காணிப்பு பணிமனையை நிறுவுவது என்கின்ற கோரிக்கை தமிழர் நிலைப்பாட்டுடன் வலுவாக இணைக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்கின்ற நாகரீகமான ஆனால் வலுவான நிபந்தனை தமிழர் தரப்பின் முன்பாக வைக்கப்பட்டது.

தொடர்ச்சியாக, மார்ச் - 3ல் ஆரம்பமான கவுன்சிலின் 7வது கூட்டத்தொடரின் முதல் நாள் தொடக்கம் இரண்டாம் வாரம் வரை சிறிலங்காவின் மனிதஉரிமை மீறல்கள் தொடர்பாக பிரித்தானியா, பிரான்சு, ஜேர்மனி, சுவிடன், டென்மார்க், நெதர்லாந்து, சுவிஸ், கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்றன கோடிட்டுக் காட்டின. மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch), மன்னிப்புச்சபை, சர்வதேச யூரிகள் சபை, பட்டினிக்கு எதிரான அமைப்பு (ACF) உட்பட பல அமைப்புக்கள் தாக்கமான மனிதஉரிமைகள் மீறல் அறிக்கைகளை வெளியிட்டு சிறீலங்காவிற்கு நெருக்கடிக்களைக் கொடுத்தன. மறுபுறம், புலம்பெயர்ந்த தமிழர்கள் சமகாலத்தில் ஆங்காங்கே நடத்திய கவன ஈர்ப்பு நிகழ்வுகள் மற்றும் தொடர்பாடல்கள் சிலவற்றில் சர்வதேச சமூகம் தமிழர்களின் மனிதஉரிமைகளைப் 'பாதுகாத்திட வேண்டும் - பாதுகாத்திட தவறிவிட்டது' என்கின்ற கருத்துப்பட கோரிக்கைகள் வெளியிடப்பட்டன. சர்வதேச உறவுகளின் முக்கிய அரங்குகளில் ஒன்றான ஐக்கிய நாடுகள் சபையினுள்ளே சர்வதேச சமூகம் எனப்படும் மேற்குலகம் சிறீலங்காவின் மனித உரிமைகள் நிலவரத்தினை மையப்படுத்திகடும் பரப்புரைகளை நிகழ்த்திட, வெளியே இதே மேற்குலகம் தமிழ் மக்களை 'காத்திடல் வேண்டும் - காத்திடத் தவறிவிட்டது' என்ற குரல் கேட்பது ஒரு புரிதல் இடைவெளியினை வெளிக்காட்டியது. மனித உரிமைகள் என்கின்ற தளத்தில் தமிழர்கள் கேட்பதும் சர்வதேச சமூகம் சொல்வதும் வேறுவேறு தளத்தில் இயங்குகின்றது என்கின்ற முரண்பாடு வெளிப்பட்டது.

* * * * *

இலங்கை சிக்கலில் இன்று மையமாகப் பேசப்படும் பொருளாக மனிதஉரிமை மீறல்கள் மாற்றம் கண்டுள்ளது. தமிழ் - சிங்கள தேசிய இனச்சிக்கல், அதுசார்ந்த அரசியல் சொல்லாடல்களை அண்மைக் காலங்களாக இந்த மனிதஉரிமைகள் சொல்லாடல்கள் ஆக்கிரமித்து வருகின்றன. சிறீலங்காவின் மனிதஉரிமைகள் மீறல்களும் - அதனை கட்டுப்படுத்தலும் என்கின்ற அளவீட்டுடன் வெளியில் தெரியும் முரண்பாடு மேற்குலகிற்கும், சிறீலங்காவிற்கும் இடையே நிகழ்கின்றது. இலங்கைத் தீவில் இடம்பெறும் மனிதவதை நடவடிக்கைகளை சிறீலங்காவின் இன்றைய தப்பான ஆளுகையின் (bad governance) வெளிப்பாடு என்று மேற்குலகம் சொல்கின்றது. இந்த தவறினை சீர்செய்வதற்கு ஒரு நிரந்தர ஐ.நா மனித உரிமைகள் கண்காணிப்பு பணிமனையை கொழும்பில் நிறுவவேண்டும் என்று மேற்குலகம் கேட்கின்றது. இந்த கண்காணிப்பு மூலம் தவறான ஆளுகையின் கீழ் இடம்பெறும் மீறல்கள் கட்டுப்படுத்தப்படும் என்று அது சொல்கின்றது. இந்த மனித உரிமைகள் நிகழ்ச்சித்திட்டத்தினை கொழும்பினை மையப்படுத்தி இயங்கும் சிவில் சமூகக் குழுக்கள் எனப்படும் மாற்றுக்கொள்கைக்கான மையம் (centre for policy alternative ) போன்றன தீவிரமாக ஆதரிக்கின்றன. எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த மனிதஉரிமை மீறல்கள் பற்றிய கவலையுடன் உள்ளதாகவும் - அவர் இந்த மேற்குலக ஏற்பாட்டினை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்கின்ற சமிக்ஞைகள் வெளியாகின்றன. மறுபுறம், தமிழ் மக்கள் தம்மீது சிறீலங்கா நிகழ்த்தும் கொடிய இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் சர்வதேச சமூகம் மனிதஉரிமைகள் பற்றிப் பேசிட வேண்டும் என்று கேட்கின்றனர்.

> இலங்கை சிக்கலில் இன்று மையமாகப் பேசப்படும் பொருளாக மனிதஉரிமை மீறல்கள் மாற்றம் கண்டுள்ளது. தமிழ் - சிங்கள தேசிய இனச்சிக்கல், அதுசார்ந்த அரசியல் சொல்லாடல்களை அண்மைக் காலங்களாக இந்த மனிதஉரிமைகள் சொல்லாடல்கள் ஆக்கிரமித்து வருகின்றன. சிறீலங்காவின் மனிதஉரிமைகள் மீறல்களும் - அதனை கட்டுப்படுத்தலும் என்கின்ற அளவீட்டுடன் வெளியில் தெரியும் முரண்பாடு மேற்குலகிற்கும், சிறீலங்காவிற்கும் இடையே நிகழ்கின்றது.

சிறீலங்காவின் இன்றைய அரசு தலைமை இந்தக் கோரிக்கைகளை எதிர்க்கின்றது. மனிதஉரிமைகள் பற்றிய மேற்குலகின் கரிசனைக்கு மதிப்புக்கொடுப்பதாகக் கூறும் அதேவேளை கொழும்பில் ஐ.நா நிரந்தர மையம் அமைவது சிறீலங்காவின் இறைமைக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்கின்றது. மேற்குலகினை ஆதரிக்கும் சிவில் சமூகக் குழுக்கள் மீது கடும் அழுத்தங்களை கொடுக்கின்றது. சீனா, இந்தியா போன்ற ஆசிய நாடுகளையும், பாகிஸ்தான் உதவியுடன் இஸ்லாமியநாடுகள் குழுவினையும், ஆபிரிக்க நாடுகள் மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் சிறீலங்கா இந்த விடயத்தில்

https://tamileelamarchive.com/

"வெறுமனே மனிதஉரிமை மீறல்கள் என்கின்ற வட்டத்தில் சிறீலங்கா புரியும் மனிதவதை நடவடிக்கைகளை விபரிக்க முற்படுவது முக்கியமானதொரு அரசியல் நிலைப்பாடு சார்ந்த கேள்வியை எழுப்புகின்றது. அந்த நிலைப்பாடு நாங்கள் இன் னமும் சிறீலங்காவின் இறையாண்மையையும், அதன் அரசமைப்பு முறைகளை யும் ஏற்று அந்த வட்டத்திற்குள் நின்று இடம்பெறும் மனிதவதை விடயங்களை பார்க்கின்றோம் என்கின்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது."

தொடர்ச்சியாக திருப்திப்படுத்த முனைகின்றது.

மேற்குலகம் தனக்குப் வேறுபல விவகாரங்களில் பழக்கப்பட்ட இத்தகைய சர்வதேச அரசியலை புரிந்து கொண்டு தனது பொருளாதார கருவிகளை சிறீலங்கா மீது படிப்படியாக பிரயோகித்து வருகின்றது. ஐரோப்பிய யூனியன் தனது உதவிகளை குறைத்தும், நிறுத்தியும் வருவதுடன் சிறீலங்காவின் பொருளாதாரத்திற்கு தாக்கம் ஏற்படுத்தக் கூடிய புடவை ஏற்றுமதிக்கான அளவீட்டுக்கு நிபந்தனைகளை விதிக்கின்றது. அமெரிக்கா மில்லினியம் கணக்கு என்கின்ற வழியூடாக வழங்கப்பட்ட நிதி உதவிகளை கட்டுப்படுத்தியவாறு சிறீலங்காவின் மீது அழுத்தங்களைக் கொடுக்கின்றது.

சிறீலங்கா அந்தப் பொருளாதார அழுத்தங்களை வெல்வதற்கு சீனா, இந்தியா மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் உதவிகளைப் பயன்படுத்துகின்றது. சீன இன்று சிறீலங்காவின் பிரதான பொருளாதார பங்குதாரராக உள்ளது. என்பதை சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு பகிரங்கமாகவே சொல்கின்றது. இவ்வாறு இலங்கையில் ஐ.நா மனிதஉரிமைகள் கண்காணிப்பு பணிமனையை அமைப்பதற்கான வேண்டுதல் விரிவுபட்டு வருகின்றது. இது மற்றுமொரு கேள்வியினை எழுப்புகின்றது. ஏன் மேற்குலகு கொழும்பில் ஐ.நா நிரந்தர மனிதஉரிமைகள் கண்காணிப்பு மையத்தினை அமைக்க முற்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

* * * * *

தமிழீழ மக்களிற்கு எதிராக சிறீலங்கா புரிகின்ற மனிதவதைகள் வெறுமனே தவறான ஆளுகையினால் தமிழ் மக்களிற்கு எதிராகப் புரியப்படும் மனிதஉரிமைகள் மீறல்கள் அல்ல. வடக்குக்கிழக்கில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் குவிக்கப்பட்ட படைகள் வகைதொகையின்றி தினசரி நடத்தும் வதை நடவடிக்கைகளை வெறுமனே மனித உரிமை மீறல்கள் என்று வகைப்படுத்தி (காணமல் போதல், சட்டவிரோத படுகொலைகள், துன்புறுத்தல், சட்டவிரோத கைது போன்ற ஐ.நா மனிதஉரிமைகள் சாசனங்களின் வகைப்பட்ட பட்டியல்களில்) விபரிப்பது சாத்தியமற்றது. குண்டுவீச்சுக்கள் - எறிகணைகள் போன்ற கடும் போர் நடவடிக்கைகள் மூலம் பொதுமக்கள் கொல்லப்படுவதும், அன்னியப்படைகளின் ஊடுருவல்கள் மூலம் இடம்பெறும் கிளைமோர் வகைப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளையும் மனிதஉரிமை மீறல்கள் என்று கணிப்பது தாக்கமற்றது. தென்தமிழீழத்தில் இடம்பெறும் மிக மோசமான இனசுத்திகரிப்பு நோக்குக்கொண்ட நிலவரங்களை விபரிப்பதற்கு இந்த மனிதஉரிமை மீறல்கள் மொழி கனமற்றதாக உள்ளது. மாறாக, இதனை இருவகையாக விபரிக்க முற்படலாம்.

ஒன்று, இது ஒரு திட்டமிடப்பட்ட இன அழிப்பு (genocide) நடவடிக்கையாகும். சுமார் 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திட்டமிடப்பட்ட இன அழிப்பு வரலாறு இலங்கைத்தீவில் உண்டு. இந்த இனஅழிப்பு முயற்சிகளை விபரணப்படுத்துவதற்கும், தண்டிப்பதற்குமான சிறப்பு சர்வதேச ஏற்பாடுகள் உள்ளன. இரண்டாவதாக இதனை தற்போது தமிழீழத்திற்கும் சிறீலங்காவிற்கும் இடையே இடம்பெறும் ஆயுதப் போரின் பின்னணியில் புரியப்பட வேண்டியதும் - வெளிப்படுத்த வேண்டியதுமான விவகாரமும் ஆகும். அதாவது, சர்வதேச மனிதாபிமானச்சட்டங்கள் எனப்படும் போரிற்கான ஜெனீவா உடன்பாடுகளின் கீழ் இதனைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும். போர் என்கின்ற காரணத்தினைப் பயன்படுத்தி மக்கள் மீது நிகழ்த்தும் குற்றங்கள் போர்க்குற்றங்கள் என வகைப்படுத்தப்படுவது தாக்கமுள்ளதாக இருக்கும்.

வெறுமனே மனிதஉரிமை மீறல்கள் என்கின்ற வட்டத்தில் சிறீலங்கா புரியும் மனிதவதை நடவடிக்கைகளை விபரிக்க முற்படுவது முக்கியமானதொரு அரசியல் நிலைப்பாடு சார்ந்த கேள்வியை எழுப்புகின்றது. அந்த நிலைப்பாடு நாங்கள் இன்னமும் சிறீலங்காவின் இறையாண்மையையும், அதன் அரசமைப்பு முறைகளையும் ஏற்று அந்த வட்டத்திற்குள் நின்று இடம்பெறும் மனிதவதை விடயங்களை பார்க்கின்றோம் என்கின்ற தோற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் சிங்கள அரசு திட்டமிட்டு தமிழ் இளைஞர்களை எண்ணுக்கணக்கற்று கடத்திச்சென்று கொன்று புதைப்பதை வெறுமனே காணமல் போதலாக, சட்டவிரோத படுகொலைகளாக, சட்டவிரோத தடுப்புக்காவலாக விபரிக்க வேண்டிய தளத்திற்குள் சென்று விடுகின்றோம். ஏனெனில் மனிதஉரிமை மீறல்கள் பற்றிய விபரிப்புக்களும், விசாரிப்புக்களும் அவ்வாறான அச்சிலேயே இயங்குகின்றது.

ஆனால், தமிழர்கள் நடத்துவது விடுதலைப் போர். சிறீலங்காவின் இறைமையாண்மையையும், அதனைத் தாங்கிநிற்கும் அரசு அமைப்பினையும் நிராகரித்து தமிழீழ மக்கள் போரினை நிகழ்த்துகின்றனர். இந்த போரிற்கான நியாயங்கள் சுயநிர்ண உரிமை, முடிவுபெறாக காலனித்துவ விவகாரம், பறிக்கப்பட்ட இறைமை, இனஅழிப்பு என்பனவற்றிலிருந்து பிறக்கின்றது. சிங்களத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக தோற்றம்பெற்ற தமிழர்களின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் இன்று முற்றுமுழுதான போரினை எதிர்கொள்கின்றது - நிகழ்த்துகின்றது. இந்தப் போர் சர்வதேச போர்ச்சட்டங்களின் கீழ் பார்க்கப்பட வேண்டிய விடயமாகும். போர் சட்டங்களின் கீழ் சிறீலங்காப் படைகளும், தமிழர் படைகளும் பொதுமக்களை கொலைசெய்வதும், குறிவைத்து செயற்படுவதும் போர்க்குற்றங்களாகும்.

இந்த விடயத்தினை எவ்வாறு விபரிப்பது சிறீலங்காவிற்கு சாதகமானதாக அமையும் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. தனது படைகள் இன்று வடக்குக்கிழக்கிலும், பிறபகுதிகளிலும் நிகழ்த்தும் வன்முறைகளை மனிதஉரிமைகள் மீறல்கள் என்று விபரிப்பது சர்வதேச சட்டம் மற்றும் பரப்புரை நோக்கில் சிறீலங்காவிற்கு ஏற்புடையதாகும். அவ்வாறு விபரிப்பது சிறீலங்கா என்ற வட்டத்திற்குள் வைத்து விவகாரத்தினைப் பேசும் வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. மேலும், அது புலிகள் நிகழ்த்தும் போரியல் நடவடிக்கைகளை பயங்கரவாதம் என்று கூறுவ

https://tamileelamarchive.com/

தற்கு வழிவகுகின்றது. மாறாக, சர்வதேச போர்ச்சட்டங்களின் கீழ் விபரிப்பது புலிகளின் போர்நடவடிக்கைகளை சிறீலங்காவின் போர்நடவடிக்கைகளுக்கு ஒப்பான நடவடிக்கையாக கருத வேண்டிய கட்டாயம் ஏற்படும். போர்க்குற்றம் என்ற அளவில் சிறீலங்காவின் அரசியல் தலைமைகளும் குற்றங்களுக்குப் பொறுப்பேற்கின்ற நிலைமை உருவாகும்.

* * * * *

இந்த இருவேறுபட்ட மனிதவதை தொடர்புபட்ட நிலைகளில் சர்வதேச சமூகம் எதனை எடுத்துக் கையாள்கின்றது.

சர்வதேச சமூகம் இன்றுவரை சிறீலங்காவில் தமிழர்களுக்கு எதிராக புரியப்படும் மனிதவதை நடவடிக்கைகளை 'திட்டமிடப்பட்டது' என்றோ, நீண்டகாலமாக 'பரவலாக' இடம்பெறுகின்றது என்றோ வகைப்படுத்தவில்லை. மாறாக மோசமான மனிதஉரிமைகள் மீறல்கள் புரியப்படுகின்றன. அவற்றினை அரசபடைகளும், அரச எதிர்ப்பு அரசு அல்லாத ஆயுதக் குழுவான புலிகளும் புரிகின்றனர் என்கின்ற நிலைப்பாடே வெளிப்படுகின்றது. மோசமான ஆட்சிமுறை காரணமாக இந்த மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தும் ஆற்றலை சிறீலங்கா இழந்துள்ளதால் ஒரு நிரந்தர ஐ.நா கண்காணிப்புப் பணிமனை நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் வாய்ப்புக்களைக் கொண்டது எனறு சர்வதேச சமூகம் எனப்படும் மேற்குலகம் விவாதிக்கின்றது. மறுபுறம், போர் இடம்பெறுகின்ற பகுதிகளில் சர்வதேச மனிதமானச்சட்டங்கள் மதிக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை சில நாடுகளும், அமைப்புக்களும் வலியுறுத்துகின்றன.

1987ல் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை இலங்கையில் போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் கடைப்பிடித்தல் வேண்டும் என்றும், மனிதஉரிமைகளும் - அடிப்படை உரிமைகளும் மதிக்கப்படல் வேண்டும் என்றும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் உள்நுழைய அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும் கோரியது. அன்று நிலவிய உலகச்சூழலில் இந்திய ஆதரவுடனும் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், பிற்காலத்தில் ஏற்பட்ட உலக மாற்றங்கள் மற்றும் பயங்கரவாதம் என விடுதலைப் போர்களை விபரிக்கும் எதிர்மறையான போக்குக் காரணமாக மேற்குலகின் அணுகுமுறை மாற்றம் கண்டது. அரசும் - இறைமையும் மையப்படுத்தப்பட மனித உரிமை விவகாரங்களும் இந்த மாறுதலுக்கு ஏற்ப மீள ஒழுங்குசெய்யப்பட்டன. ஒருபுறம், அரசினை மையத்தில் கொண்ட



இலங்கைத் தீவில் இடம்பெறும் மனிதவதைகளையும் மேற்குலகின் அணுகுமுறைகளையும் நோக்குவது முக்கியமானது. மேற்குலகம் இன்று இலங்கை தீவில் இடம்பெறும் மனிதவதைகளை மோசமான மனிதஉரிமை மீறல்களாக கருதி - சிறீலங்கா அரசு மற்றும் அரசமைப்புக்குட்பட்ட தீர்வுக்கு வலியுறுத்துகின்றது. இதனை உறுதிப்படுத்த ஐ.நா கண்காணிப்பினைக் கோருகின்றது. இந்த ஐ.நா கண்காணிப்புப் பணிமனையானது இலங்கை விவகாரத்தில் 'தேவைப்பட்டால்' நேரிடையான சர்வதேச தலையீட்டினை உருவாக்கும் சூட்சமம் கொண்டது என்று சிறீலங்கா கருதுகின்றது.

தாகவே அனைத்து மனிதவதை நடவடிக்கைகளையும் கையாள முற்பட்ட சர்வதேச சமூகம், மறுபுறம், மோசமான மனிதாபிமான - மனிதவதை சூழலில் பிறநாடுகள் தலையிடும் நடைமுறைகளை உருவாக்கியது.

இந்தப் பின்னணியில் இலங்கைத் தீவில் இடம்பெறும் மனிதவதைகளையும் மேற்குலகின் அணுகுமுறைகளையும் நோக்குவது முக்கியமானது. மேற்குலகம் இன்று இலங்கை தீவில் இடம்பெறும் மனிதவதைகளை மோசமான மனிதஉரிமை மீறல்களாக கருதி - சிறீலங்கா அரசு மற்றும் அரசமைப்புக்குட்பட்ட தீர்வுக்கு வலியுறுத்துகின்றது. இதனை உறுதிப்படுத்த ஐ.நா கண்காணிப்பினைக் கோருகின்றது. இந்த ஐ.நா கண்காணிப்புப் பணிமனையானது இலங்கை விவகாரத்தில் 'தேவைப்பட்டால்' நேரிடையான சர்வதேச தலையீட்டினை உருவாக்கும் சூட்சுமம் கொண்டது என்று சிறீலங்கா கருதுகின்றது. 'தேவை ஏற்படுவது' என்பதை வெறுமனே மனிதஉரிமைகள் அர்த்தத்தில் பார்க்காது இலங்கை சார்ந்த வியூக நலன்களின் அச்சில் பார்க்க மேற்குலகு முற்படுவதாக சிறீலங்கா கூறுகின்றது.

* * * * *

தமிழீழ விடுதலைப் போரினைப் பொறுத்தவரை மேற்கூறப்பட்ட மனித உரிமை விவகாரத்தினை சுற்றி நிகழும் இராஜதந்திரம் தமிழர்களால் புரியப்படுவதும் - கையாளப்படுவதும் முக்கியமானதாகும். ஒருபுறம், சிறீலங்காவின் மனிதவதை தொடர்பான சர்வதேச வெளிச்சத்தினை பயன்படுத்தி அந்த மனிதவதையின் இனஅழிப்புப் பரிமாணத்தினைப் பேசுவதும், விடுதலையின் தேவையைப் பேசுவதும் முக்கியமானதாக அமைகின்றது. மறுபுறம், அந்த மனிதவதை பற்றிய விவாதங்கள் குறித்த எல்லைகளுக்குள் அடங்கிவிடாது விடுதலையை நோக்கிய காய்கள் நகர்த்தப்படுவதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதாவது மனிதவதை என்பதை சர்வதேச சமூகத்திடம் இரப்பதற்கான புள்ளியாக கருதாமல் அடுத்தகட்டமான விடுதலைக்கான இராஜதந்திரத்தினை முன்னெடுக்கும் விவகாரமாக மாற்றிட திட்டமிட்டு உழைக்க வேண்டும். மாறாக, மனித உரிமைகளை எமது கோரிக்கைளின் இறுதிப்புள்ளியாக நினைத்து தலையிடுமாறும், காப்பாற்றுமாறும் கோருவது எமது நலன்களுக்கு புறம்பதாக அமைந்துவிடும். எமது விடுதலைப் போரின் இன்றைய காலகட்டத்தில் புலத்தமிழ் சமூகம் இந்த சூட்சுமத்தினை சரியாகப் புரிந்து கொள்ளும் அவசியத்தேவை நிலவுகின்றது.

https://tamileelamarchive.com/

பொன்.பூலோகசிங்கம்

# பிள்ளையான் குழுவின் அரசியலும்



# பிணந்தின்னும் பேய்களின்



# காட்டு தர்பாரும்

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் ஆரம்பம் முதல் கைக்கூலிகளை அரசியல் பிரமுகர்களாக்கி அவர்களையே தமிழ் அரசியல் தலைவர்களாக்கி தமது அரசியல் வியாபாரத்தை கடந்தகாலங்களில் பேரினவாதசக்திகள் முன்னெடுத்துவந்தன. 1920 களில் சிங்களத் தலைவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த ஈ.ஆர்.தம்பிமுத்து என்பவரை ஒரு கைக்கூலியாக்கி அவருக்கூடாக இந்த அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

அக்காலத்தில் சிங்கள மக்களிற்கு தலைமைதாங்கிய ஜேம்ஸ் பீரிஸ் என்பவர் முன்னணியில் நின்றார். அவரோடு ஈ.டபிள்யூ.டபிள்யூ.பெரேரா என்பவர் ஒத்தாசை புரிந்தார். இவர்கள் ஊட்டி வளர்த்த பேரினவாத தீயை இவர்களது மறைவிற்குப் பின்னர் அணைந்துவிடாதபடி ஏ.ஈ.குணசிங்க முன்னெடுத்துவந்தார். இதன்பின்னர் சிங்கள மக்களிற்கு தலைமைத்துவம் வழங்கிய டி.எஸ்.சேனநாயக்கா என்பவர் இராஜகுலேந்திரன், ஜெகநாதன் தியாகராஜா, பேராசிரியர் சுந்தரலிங்கம், அருணாசலம் மகாதேவா, சுப்பையா நடேசன் போன்றவர்களை வைத்து தமிழின விரோத செயற்பாடுகளை செயற்படுத்திவந்தார்.

சிறிலங்கா சுதந்திரம் அடைந்த பிற்பாடும் தமிழ்க்கைக்கூலிகள் பலர் சிங்களப் பேரினவாதத்திற்கு தொடர்ந்து உறுதுணையாகவே இருந்து செயற்பட்டார்கள் காலஞ்சென்ற ஜோன்கொத்தலாவல என்ற பிரதமருக்கு சிற்றம்பலம், நல்லையா என்பவர்களும் டட்லி சேனநாயக்கா என்பவருக்கு கே.டபிள்யூ.தேவநாயகம் என்பவரும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிற்கு இராஜதுரை என்பவரும் இதன்பின்னர் சிறிமாவோ அம்மையாருக்கு குமாரசூரியர் என்பவரும் இதன்பின்னர் சிறிமாவோ அம்மையாரின் மகள் சந்திரிக்காவிற்கு லக்ஸ்மன் கதிர்காமர் என்பவரும் டக்கிளஸ் தேவானந்தா என்பவரும் பேரினவாத அரசுகளின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்குப் பெரும் துணையாக இருந்து வந்தார்கள்.

https://tamileelamarchive.com/

2005ம் ஆண்டு நவம்பர் மாதம் இடம் பெற்ற ஜனாதிபதித்தேர்தலில் சிங்கள மக்களால் சிறிலங்காவிற்கான ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மகிந்த ராஜபக்ச தமிழின அழிப்பு என்ற நோக்கோடு பெரும் படையணியொன்றை உருவாக்கினார். இதில் அவரது சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ச, பசில்ராஜபக்ச, சமல்ராஜபக்ச என்பவர்களோடு கடும் கோட்பாட்டாளரான இராணுவ அதிகாரி சரத்பொன்சேகாவும் இராணுவத்தளபதியாக இணைக்கப்பட்டார். இவர்கள் யாவரும் இணைந்து தமிழர் தாயகப்பகுதிகளில் இரண்டு ஒட்டுக்குழுக்களை உருவாக்கினார்கள். வடக்கே டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈ.பி.டி.பி என்ற ஒட்டுக்குழுவும், கிழக்கே கருணா, பிள்ளையான் போன்றவர்களுடைய தலைமையில் இன்னொரு ஒட்டுக்குழுவும் உருவாக்கப்பட்டது.

தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் கூர்மைபெற்று முனைப்படைந்தவேளையில் தனிமனிதர்களை கைக்கூலிகளாகக் கொண்டு தமிழின அழிப்பை தீவிரப்படுத்துவதைவிட ஒட்டுக்குழுக்களை உருவாக்கி அவர்களின் ஊடாக தமிழர் தாயகப்பிரதேசம் எங்கிலும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கப்பம்கோருதல், காணாமல் போகச்செய்தல் போன்ற மனிதவிரோத செயற்பாடுகளில் இத்தகைய ஒட்டுக்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்த ஒட்டுக்குழுக்களுக்கு எந்தவிதமான அரசியல் நோக்கமும் கிடையாது அவர்கள் தமது சொந்த நலனிற்காக பேரினவாதிகள் எவற்றையெல்லம் செய்யலாம் என நினைக்கிறார்களோ அவற்றை செயற்படுத்துவதே அவர்களது இலக்காக இருந்துவருகிறது. இவர்களிற்குத் தேவையான ஆயுதவசதிகள், பணவசதிகள், பொருளாதாரவசதிகள் இவையாவும் பேரினவாத அரசாங்கத்தினால் மிகச்சிறப்பாக வழங்கப்பட்டுவருகிறது. போராட்டம் நடைபெறும் நாடுகள் எல்லாமே இத்தகைய ஒட்டுக்குழுக்களை ஏகாதிபத்திய விஸ்தரிப்புவாதிகள் கைக்கூலிகளாக அமர்த்தி செயற்பட்டுவந்தார்கள். அமெரிக்கா வியட்நாமிற்குள் தலையிட்டபோது வியட்நாம் இளைஞர்களையே கொண்டு எல்.ஆர்.ஆர்.பி என்ற ஒட்டுக்குழு உருவாக்கப்பட்டது. பிலிப்பைன்சில் மின்தனோ போராளிகளிற்கு எதிராகவும், சூடானில் விடுதலைப்போராளிகளிற்கு எதிராகவும் இத்தகைய ஒட்டுக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. கிழக்கு தீமோர் விடுதலைப் போராட்டத்தின்போதும் இந்தோனேசியா அரசாங்கத்தினால் இத்தகைய ஒட்டுக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரையில் சிங்களப் பேரினவாதிகளால் உருவாக்கப்பட்ட இரண்டு ஒட்டுக்குழுக்களும் மிக மோசமான மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டதோடு தமது எசமானர்களின் குரலாகவும் செயற்பட்டுவருகின்றார்கள். இந்த வகையில் கிழக்கிலங்கை அரசியலை எடுத்துக்கொண்டால் முதலில் கருணாகுழு என்றபெயரிலும் பின்னர் பிள்ளையான்குழு என்றபெயரிலும் உருவாக்கப்பட்ட ஒட்டுக்குழு இப்போது அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் மகிந்தராஜபக்சவின் உத்தரவின்பேரில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவினர் கடந்த மார்ச் மாதம் 10 ஆம்திகதி மட்டக்களப்பில் இடம்பெற்ற ஒன்பது உள்ளூராட்சிசபைத்தேர்தலில் போட்டிக்கு நிறுத்தப்பட்டார்கள். ஜனநாயகத் தேர்தல் என்ற பெயரில் அங்கு ஆயுதரீதியாக இராணுவத்தின் பூரண ஆசீர்வாதத்தோடு தேர்தல் இடம்பெற்றது. அந்த தேர்தலில் பிள்ளையான் குழுவினர் சட்ட

> தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டம் கூர்மைபெற்று முனைப்படைந்த வேளையில் தனிமனிதர்களை கைக்கூலிகளாகக்கொண்டு தமிழின அழிப்பை தீவிரப்படுத்துவதைவிட ஒட்டுக்குழுக்களை உருவாக்கி அவர்களின் ஊடாக தமிழர் தாயகப்பிரதேசம் எங்கிலும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், கப்பம்கோருதல், காணமல் போகச்செய்தல் போன்ற மனிதவிரோத செயற்பாடுகளில் இத்தகைய ஒட்டுக்குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்த ஒட்டுக்குழுக்களுக்கு எந்தவிதமான அரசியல் நோக்கமும் கிடையாது அவர்கள் தமது சொந்த நலனிற்காக பேரினவாதிகள் எவற்றையெல்லம் செய்யலாம் என நினைக்கிறார்களோ அவற்றை செயற்படுத்துவதே அவர்களது இலக்காக இருந்துவருகிறது.

விரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்ட தே[illegible] தமது வேட்பாளர்களாக ஆயுத மு[illegible]யில் பலபொதுமக்களை தேர்தலில் போட்டியிடச் செய்தார்கள். அவ்வாறு போட்டியிட மறுத்தவர்கள் இரண்டுபேர் பிள்ளையான் குழுவினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்கள். 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07ஆம் திகதி மட்டக்களப்பில் தொண்டராசிரியர் சங்கத் தலைவர் 31 வயதான பரசுராமன் நந்தகுமார் அவர்கள் முதலில் சுட்டுக்கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதி மட்டக்களப்பு கொம்மாந்துறையில் வைத்து ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளரான 58 வயதான மாரிமுத்து ஆறுமுகம் என்பவர் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட மறுத்தமைக்காக சுட்டுக்கொல்லப்பட்டார். இதேவேளையில் மட்டக்களப்பில் சண்டோ சங்கரதாஸ் வீதியில் வசித்து வந்த சங்கரதாஸ் அவர்களுடைய மகன் சிவானந்தம் அவர்கள் போட்டியிட மறுத்தபோது அவர் கடத்தப்பட்டு மிகமோசமாகத் தாக்கப்பட்டார்.

இதைவிட மேலும் பலவேட்பாளர்கள் நிர்ப்பந்தத்தின்பேரில் ஆயுதமுனையில் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டார்கள். ரவி என்ற மீன்வியாபாரி இவ்வாறு தேர்தல் களத்தில் ஆயுதமுனையில் இறக்கப்பட்ட ஒருவராவார். அவர் மீன்சந்தையில் இரண்டு பொலிஸ்காரரின் பாதுகாப்போடு தமது தொழிலை மேற்கொண்டார். இன்னுமொருவர் கசிப்பு உற்பத்தியாளராவார் அவருக்கும் இரு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது அவரும் பொலிஸ் பாதுகாப்போடு தனது வழமையான தொழிலைச் செய்தார். இன்னுமொருவர் தினமும் கசிப்பு அருந்துபவர் ஆவார் அவருக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. அவர் தனக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டமையால் தாம் தினமும் கசிப்பு அருந்துவதற்கு இடையூறாக இருப்பதாகவும் தமக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை வாபஸ் பெறுமாறும் இல்லாவிட்டால் தாம் நஞ்சருந்தி தற்கொலை செய்யப்போவதாகவும் பொலிஸ்நிலையத்திற்குள் நுழைந்து அங்கிருந்த பொலிஸ் அதிகாரியை மிரட்டினார். இப்படியாகப் பல கெடுபிடிகளிற்கு மத்தியில்தான் பிள்ளையான் குழுவினரால் வேட்பாளர்கள் தேர்தலில் நிறுத்தப்பட்டார்கள் தேர்தல் தினத்தன்று மட்டக்களப்பில் பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் கட்டுக்கட்டாக கள்ளவாக்குகள் போடப்பட்டன. இந்த தேர்தலில் போட்டியிட்ட ஏனைய கட்சிக்காரர்கள் பிள்ளையான் குழுவினர் கள்ளவாக்குப்போடுவதை தேர்தல் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்த போதும் பிள்ளையான் குழுவினர் மீது எத்தகைய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதில் விசித்திரமான விடயம் என்னவென்றால் தேர்தல் முடிந்தபின்னர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்பவன் விடுத்த பத்திரிகை அறிக்கையாகும். தமது தேர்தல் வெற்றி ஜனநாயக மரபுகளிற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என அவர் கொழும்பு நாளிதழ் ஒன்றிற்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இந்த உள்ளூராட்சித் தேர்தலிற்கும் ஜனநாயக மரபுகளிற்கும் எந்த சம்பந்தமுமே இல்லாததொன்றாகும் முழுக்க முழுக்க ஆயுதமுனையில் மோசடி

https://tamileelamarchive.com/

கள் செய்யப்பட்டு பிள்ளையான் குழுவினர் ராஜபக்ச கம்பனியால் வெற்றிபெறச்செய்யப்பட்டார்கள். இந்தக்குழுவினரின் வெற்றிக்காக பின்னால் நின்று செயற்பட்டவர் மகிந்தராஜபக்சவின் சகோதரரான பசில் ரோகண ராஜபக்ச ஆகும். உண்மையில் பிள்ளையான் குழுவினரின் தேர்தல் யாத்திரை 2007ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம்திகதி மனிதஉரிமைகள் தினத்தன்றுதான் ஆரம்பமானது. அதற்கு முதல்நாள் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களை கடத்திச்சென்ற பிள்ளையான் குழுவினர் அவர்களை தமது முகாம்களிற்குள் அடைத்துவைத்து குறிப்பிட்ட மனித உரிமைகள் தினத்தன்று குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களது பெற்றோர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினால்தான் அவர்களது பிள்ளைகள் விடுதலைசெய்யப்படுவார்கள் என்றும் அல்லது அவர்களது பிள்ளைகள் யாவரும் கொலை செய்யப்படுவார்கள் என்றும் எச்சரிகையொன்றை விடுத்தான் இதேபோல உள்ளூராட்சி தேர்தல் தினத்தன்றும் பிள்ளையான் குழுவினர் மட்டக்களப்பில் விநியோகித்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டதேர்தலில் தமது கட்சிக்கு வாக்களிக்க வேண்டுமென்றும் இல்லாவிட்டால் தம்மால் கடத்திச்செல்லப்பட்ட சிறுவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்றும் எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தார்.

இப்பொழுது ஜனநாயகத்தேர்தல் என்பது கொலைகார கலாச்சாரம் ஒன்றினால் முன்னெடுக்கப்படுகிறது. இப்பொழுது அடுத்தகட்டமாக கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடாத்துவதற்கான தீவிர செயற்பாடுகளில் மகிந்த ராஜபக்ச அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. கிழக்கின் வெற்றி என்று கூறிக்கொண்டு கிழக்குமாகாணத்தை வெகுதுரிதமாக சிங்கள மயமாக்குவதே மகிந்த அரசின் திட்டமாகும். ஏற்கனவே கிழக்கின் உதயம் என்றபெயரில் தமிழ் மக்களுடைய நிலங்களும் முஸ்லீம் மக்களுடைய நிலங்களும் பெருமளவில் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தநிலைச் சூறையாடலில் பௌத்தகுருமாரும், இராணுவ அதிகாரிகளும், பேரினவாதிகளும் ஒன்றாக கைகோர்த்து நிற்கின்றார்கள் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கப்பட்ட பசில் ராஜபக்ச இந்தத் திட்டத்தின் இயங்குவிசையாக செயற்படுகின்றார்.

தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தாயக பூமியிலிருந்து ஆயுத முனையில் விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அகதிமுகாம்களில் அவல வாழ்விற்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். எதுவிதமான சுகாதார வசதிகளுமற்ற கூடாரங்களில் குழந்தைகள் மழைவெள்ளத்திற்குள் சிக்குப்பட்டு நோய்வாய்ப்பட்டு சிதைந்துகொண்டிருக்கின்றார்கள். இந்தப் பேரவலத்திற்குப் பின்னால் நின்று பசில் ராஜபக்சதான் பிள்ளையான்குழுவை வழி நடத்திக்கொண்டிருக்கிறார். அவரே பிள்ளையான் குழுவினருடைய இயங்குதிசையையும் தீர்மானிக்கின்றார். பிள்ளையான் குழுவினர் மகிந்தராஜபக்சவின் கட்சியில் அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இத்தோடு இன்னொரு விடயமும் வெளிக்கொணரப்பட்டிருக்கிறது. மட்டக்களப்பு, அம்பாறையிலிருந்து அதிரடிப்படையினர் வாபஸ் பெறப்பட்டு சிறிலங்கா இராணுவம் அதிரடிப்படையினர் நின்ற இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். பிள்ளையான் குழுவின் உறுப்பினர்கள் பொலிஸ் சீருடை தரித்து காவல்துறைச் சின்னங்களை அணிந்து மட்டக்களப்பில் தேர்தல் செயற்பாடுகளிற்காக தயார் பண்ணப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. மகிந்தராஜபக்ச ஒரு ஆயுதக்கும்பலை அரசியல் சாயம்பூசி போதியவசதிகளும் செய்துகொடுத்து அவர்களை ஒரு அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளர் மூலம் அங்கீகரிக்கவும் செய்து நடாத்திவருகின்ற இந்த ஆயுத அரசியலை எதிர்க்கட்சிகள் மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கின்றன. மாகாண சபைத்தேர்தல் முடிய அரசியல் கட்சியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள பிள்ளையான் குழுவினரை சர்வகட்சி மகாநாட்டுகுழுவில் இணைத்துவிடுவதற்கும் மகிந்தராஜபக்ச திட்டமிட்டிருக்கிறார். இதன்மூலம் தமிழர் தாயகத்தின் மீது தாம் விரும்புகின்ற ஒரு அரைகுறை அரசியல் தீர்வை திணித்துவிடலாம் என்பதையும் மகிந்தராஜபக்சவின் எண்ணமாக இருக்கின்றது. கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலின்போது வடக்குக் கிழக்கு தமிழர்தாயகத்தில் வாழ்கின்ற தமிழ்மக்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புப் பிரதிநிதிகளை தமது பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்தார்கள் எல்லாமாக 22பேர் பாராளுமன்ற உறுப்புரிமை பெற்றார்கள். இவர்களில் மூவர் படுகொலை செய்யப்பட்டுவிட்டார்கள். கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும் ஒட்டுக்குழுக்களால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுவிட்டார். இவ்வாறாக ஜனநாயக சக்திகளை ஒழித்துக்கட்டும் ஒரு கைங்கரியத்திலும் மறுபக்கம் தமிழ் மக்களால் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத பிள்ளையான் குழு போன்ற அநாமதேய ஆயுதக்குழுக்களை முன்நிறுத்தி அரசியல் நடத்துவது ஜனநாயக அரசியலில் வெறும் கேலிக்கூத்தாகுமென சர்வதேச சமூகத்தால் கண்டிக்கப்படுகிறது. தமிழ் மக்களிற்கு எதிரான மனித உரிமைமீறல்களை பிள்ளையான் குழு போன்ற ஆயுதக்குழுக்களுக்கு ஊடாக செயற்படுத்திவரும் மகிந்த ராஜபக்ச கொம்பனி மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்ளவே இத்தகைய யுக்திகளை கையாள்கின்றது. ஆனால் சர்வதேச சமூகம் மகிந்தராஜபக்சவின் ஒட்டுக்குழுக்கள் ஊடான ஆயுதக் கலாச்சாசாரத்தை சரியாகவே இனம்கண்டுகொண்டுள்ளது. ஐக்கியநாடுகள் சபையினுடைய மனிதஉரிமைகள் விவகார ஆணையாளர் லூயிஸ் ஆபர் அம்மையார் அவர்கள் போர்நிறுத்தத்திலிருந்து விலகி சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவருகின்ற மனிதஉரிமைகள் யாவும் போர்க் காலக் குற்றங்களாகவே கருதப்படுமெனவும் அவர்கள் எதிர்காலத்தில் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் போர்க்கால குற்றங்களுக்காக குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவார்கள் என்றும் ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளமையையும் இங்கு கவனத்தில்கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேசம் பூராகவும் ஒட்டுக்குழுவை வைத்து அரசியல் நடத்தியவர்கள் அவர்களது நோக்கத்தில் ஒருபோதும் வெற்றி பெற்றதில்லை. வியட்நாம் போரின்போது காலஞ்சென்ற ஜனாதிபதி நிக்சன் இந்த முயற்சியில் ஈடுபட்டுத்தோற்றுப்போனார். இந்தோனேசியாவில் சுகர்நோவும் பின்னர் சுகாட்டோவோம் இந்த முயற்சியில் ஈடுபட்டு தோற்றுப்போக கிழக்குத்தீமோர் உருவாகியது. அணுவாயுதங்களைக் கண்டுபிடிக்கப் போவதாக ஈராக்குள் நுழைந்த அமெரிக்கப் படைகள் வரலாற்றில் என்றுமில்லாதளவு பெரும் இடர்பாடுகளைச் சந்தித்திருந்தார்கள் இலத்தீன் அமெரிக்கநாடுகள் பலவற்றிலும் ஒட்டுக்குழுக்களை உருவாக்கி ஜனநாயக சக்திகளைதோற்கடிக்க முற்பட்டவர்கள் இறுதியில்தாமே தோற்றுப்போனார்கள். இதற்கு நிக்ரகோவாப்போராட்டம் ஒரு சிறந்த உதாரணமாகும். இன்னும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஆதிக்க வெறியர்கள் உருவாக்கிய ஒட்டுக்குழுக்கள் எவையும் அரசியலுக்குப் பொருத்தமானதாக அமைந்ததில்லை ஏனெனில் ஒட்டுக்குழுக்கள் தேசப்பற்றுள்ளவர்கள் அல்ல அவர்கள் தத்தமது எசமானர்களது கூலிப்படைகளேயாகும். தமிழர்தாயகத்தில் கருணா குழுவிற்குத் தலைமைதாங்கிய ஒட்டுப் படைத்தலைவன் கருணா இன்று பிரித்தானிய சிறையில் போர்க்கால குற்றங்களுக்காக சிறைக்கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கிறான். இந்தநிலமை எதிர்காலத்தில் பிள்ளையான் குழுவிற்கும் இன்னும் தமிழர்தாயகத்தில் செயற்படும் ஏனைய ஒட்டுக்குழுக்களிற்கும் என்றோ ஒருநாள் ஏற்பட்டே தீரும் என்பதுதான் இயங்கியல் நியதியாக உள்ளது. ■

https://tamileelamarchive.com/

ந.கிருஷ்ணசிங்கம்

# முன்னை மூண்ட தீ

அன்னை பூபதியின் உதிரத்தில்
முன்னை மூண்ட தீயானது,
என்னை விளக்காகி
எங்களுள் எரிந்தது.
அது இன்றோ
கதிர்த்து முதிர்ந்த
சுதந்திரப் பிழம்பாகி
அன்றாடம் பெருகி
மாற்றாரும்
விதந்திடும் வண்ணம்
கண்டங்கள் தாண்டியும்
சென்று பரவி
வென்றிட வேண்டும் எம்
தேசத்தை என்ற
வேக ஜாகத்தை எம்முள்
மூட்டியுள்ளது.

தம்பி திலீபன்
தாங்கிய வேள்வியில்
தம்முடல் காய்ந்து
வெந்துடல் சோர்ந்து
உயிர் ஓய்ந்தது கண்டு நாம்
கண்ணீர் விட்டோம்!
குவிகரம் சேர்த்துக்
கும்பிட்டோம்
கவிதைகளும் பாடிப்பின்
வெம்பல் அடங்கி எம்
வேலைகளில் மூழ்கினோம்!

ஆனால், பாரும்!
அன்னை பூபதி அத்தாய்
தன்னையும்
பசித் தணலிலே திணித்து
எண்ணிறைந்த துன்பதில்
பொன் உதிரம் துடிக்க
போராடிக் கிடந்து,
முப்பது தினங்களைக் கடந்து
மூப்பதின் உடல் சுருள
மன்னன் திலீபனின்
குன்றாத தியாகத்துள்
தானும் கலந்தாள்!

பகை உழுத பாதையில்
புகை நெருப்பாய்ப் பெருகிய
பாரதப் பெரும் தேசப்
பராக்கிரமம்
நேர்நின்று பார்த்து
இரசித்து சிரிக்கவே
எங்களின்
நெஞ்சங்கள் விம்மவே,
பெருத்ததோர் கூற்றின்
புலைத்தனமாய்
எங்களின் திருத்தாயை
வருத்தியே அது கொன்றதே!

தொட்டு வந்த பணி மறந்து
சொல்லரும் காம
வல் தொழில் புரிந்து,
எம் தமிழ் மக்களை
வெள் எலும்பாடி
வெட்டிப் புதைத்து,
வேட்டுவச் சிங்களத்தின்
வேலை ஆட்களாய்ச்
செயற்பட்டு,
நாளும் முட்டியே நின்ற
மூர்க்க இராணுவத்தை நோக்கி,
போற் தொழில் நிறுத்தி
புலிகள் எம்
பிள்ளைகளோடு பேசு
என்றுதானே எம்
பூபதித்தாய் புகன்றாள்!
மறுத்தே மண்ணின் தாயை
பசிப் போராட வைத்ததே
பாரதப் பாதகம்!

உள் நுழைந்த சினம்
உருப்பெருக்கம் எய்தியதால்
உதிரம் கருகவென
உணவு மறுத்து,
உட்திணிந்த பசி நெருப்பில்
உருகி ஆன்மா ஓடவென
கட்டங்கட்டமாய் தாயோ தன்
உயிரை விட்டாள்!

அன்னை ஓய்ந்த அக்கணத்தில்
திசைவெளி விருட்சங்கள்
தீப்பிடித்து எரிய
வேய்ந்த ஒரு இலட்சம்
வெகுளிப் படையிடை புகுந்து
தோய்ந்தே குருதியாடியே
பாய்ந்த புலியின் முன்
பாரதம் நிற்கமுடியாது
வேரறுந்தே வெளிப்பட்டு
பாராமுகச் சிங்களத்தின்
பாதகத்தை நொந்தபடி
வெந்தமனத்தோடு
விழுந்த தம் படையை விட்டு
அழுந்து வசை அவர் சுமந்தே
அகன்ற இந்த வரலாற்றின்
தோற்றுவாயாய்
அன்னை பூபதித்தாய்
அமைந்தார்!



இன்றோ,
நெடுந்துயர் காவி
நொந்தெரிந்து சுருண்டு கருகி
மாய்ந்து கிடக்கும் எம்
மண்ணைப் பார்த்து
மனம் பொறுக்காது,
உதிரம் தீயாக உருப்பட
அதரங்கள் நெரும,
ஆங்கே தாயகத்தில்
ஆயுதங்கள் தாங்கி
தாய்ச் சிகரங்கள் தோன்றிச்
சமராடும் காட்சி கண்டு
சிங்களம் அடங்கி
நடுங்கிக் கிடக்கின்றது!

பொங்கிய துயரின் பெருக்கிடை
கங்குல் கழியவே எங்கள்
தாய்க் குலம்
கலங்கள் துாக்கவே
விளங்கும் ஒளியானாள்
வீரப் பூபதித்தாய்!


சுதந்திரத்தின் சுடரான
அன்னை இவள்
பதந்தனைத் தொடர்ந்த
புதிய பூபதிகள்
நிதம் எழுந்து நிலமிசை...
புலமிடை விரியவே,
கதிர்த்தெழுந்த கதிரவனாய்
முன்னை மூண்ட தீ
அன்னை பூபதி
அமைந்தார்!

சிதைக்கப்பட்ட தாய்களின்,
சோதரிகளின், சோதரர்களின்
சொந்தங்களின்
சதைத் துண்டங்களை
திரட்டியெடுத்த தீரத்தின் உருவாய்
பகை விரட்டும் தீயாய்,
உவகைத் தாயகத்தை
மிகை வீரத்தால் மீட்க
பூ விரியும் நினைவுகளோடு
புதுயுகம் காணப் புறப்பட்ட
எமதீழ மா தலைவனின்
பராக்கிரமம் கண்டு,
அவனின் படைப் பிரிவுகளின்
ஆர்த்த ஆழிகளின்
அதிர்போர் ஒலி கண்டு
ஆங்கே
பொருதி நிற்கும் போற்
கீர்த்திகள் கண்டு
வேர்த்த அண்டமதில்

தமிழீழம்
கார்கழிந்த களிப்போடு
பிறவி கொள்ளும்
காலமிதில் வந்த எம்
முன்னைத் தீயான
அன்னை பூபதியின்
இந் நினைவு தினத்தை
எழுச்சி மிகவே
எழுந்தே எடுப்போம்!

https://tamileelamarchive.com/







# இனிய பாடல் சோகமுடையது



விடுதலையின் மொழி
சந்தோசம் மட்டுமல்ல
துயரமும் தான்.

மீட்பு என்பது
இழப்பினை வெல்வது மட்டுமல்ல
இழந்து வெல்வதும் கூட.

தியாகிகளின்
குருதியில் குளிக்காத
சுதந்திர பூமிகளே கிடையாது.

இரத்த வாடையும்
மரண ஓலமுமற்ற
வரலாறும் கிடையாது.

மண் என்பது மனிதனுக்கானதே
மனிதன் என்பவன் மண்ணுக்கானவன்
மண்ணிலே வாழ்வதும்
மண்ணிலே வீழ்வதும்
மனிதனின் மரபு
மானிட இயல்பு.

சோக கீதங்கள்
சொல்லிடும் சேதி
சுதந்திர கீத வரிகளில் பாதி
சுதந்திர மென்பதன் அர்த்தமே
துயரம் நிறைந்த
சந்தோசங்களே.

https://tamileelamarchive.com/

# புயல் கடந்த மண்ணில்

சுழித்து எழுந்து
சூறைகொள் நோக்குடன்
திசையைக் கிழித்து
தீவிரம் கொண்டு
வழித்தடமெங்கணும்
அழித்துச் சென்றது.

சூறாவளியின் தூண்டிலில் சிக்கிய
ஆழிக்கரையின்
அலைகள் குமுறிட
மூளியானதோ! கரையின் முற்றம்.


காற்றில் கலக்கும்
ஓலக்குரல்களில்
ஜாதியுமில்லை
பேதமுமில்லை.


வீதியின் குறுக்கே விழுந்து கிடந்த
பாரிய மரங்களின் வேர்கள் நிமிர்ந்தன.
கிளைகளில் கட்டிய கூடுகள் சிதறிட,
சோகம் சொட்டும்.

கூரை பறந்து வானம் மூடிய
ஓலைக் குடிசையுள்
ஒதுங்கிக் கிடக்கும் கூனற் கிழவன்
கூதலில் துடிப்பான்.

ஈரமண்ணின் இதயக்கசிவில்
தாயின் கனிவு,
கூரைமேலே கவிந்த வானின்
கருமை கூட,
துக்கம் கொட்டும்.

வாய்க்கால் மீறி ஓடும் நீரில்
சூழல் மறந்த சேரிச்சிறுவன்
கொட்டும் மழையில் குதூகலித்து
கப்பல் விட்டு கவலை மறப்பான்.





# முதலாயும் முடிவாயும்

காலம் விரைகிறது
கனவுகளை நனவாக்க
தோளின் -
சுமையைத் தூசாய் நினை
சுருண்டு கிடந்து,
சுதந்திரத்தை இழக்காதே!
காலம் உன் காலடியில்
கவனி!

நேரம் உதிர்கிறது.
நனவுகளில் உயிர்த்து எழ!
வாழ்வின் -
தாழ்வைத் தூர எறி.
தடம்புரண்டு
தனியனாய்த் தவிக்காதே
தேசம் உன் திசையாகும்
திருந்து!

விடியல் தெரிகிறது.
விடுதலையின் வழி ஒளிர
விழியின் -
சுடரின் கதிரைத் தூண்டிவிடு
சோர்ந்து துவண்டு,
சோற்றுக்காய் வாழாதே!
மாற்றான் சுடுபொறி உன்
நெஞ்சில்!

வேளை இதுதான்.
வேதனைத் துயர் மாள
மனதிலே -
மூளும் கனலை மூசி எரி!
முயற்சி தளர்ந்து,
முடங்கிக் கிடக்காதே.
நாளை உனதே தான்
நம்பு!



மாமனிதர் சிவனேசன்

# தமிழர் உரிமைக்காக குரல் கொடுத்தவரின் உயிரை சிங்கள இனவாத அரசு பறித்தெடுத்துள்ளது

மாமனிதர் சிவனேசன் அவர்களின் மறைவு சிறிலங்கா தேசத்தில் சனநாயக வழியில் தமிழ் மக்களிற்கு உரிமைகள் கிடைத்தவிடப் போவதில்லை. என்பதை தெளிவாக சொல்லி நிற்கின்றது. தமிழ் மக்களின் உரிமைகளிற்காகக் குரல் கொடுத்த அர்ப்பணிப்புடன் உழைத்த பல பாராளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களை சிங்கள இனவாத அரசு பறித்திருக்கிறது. இந்த நிலையில் சிங்கள அரசிடமிருந்து நாங்கள் எமது பிரச்சினைக்கான தீர்வு கிடைத்துவிடும் என்று நம்பியிருக்க முடியாது. அதனைத்தருவதற்கு அரசும் தயாராக இல்லை. நாங்கள் எமக்கான அனைத்து உரிமைகளையும் கொண்ட தமிழீழ தனி அரசை அமைப்பதைத் தவிர வேறு எந்த வழிமுறைகளும் இல்லை. இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நடை பெற்ற மாமனிதர் சிவனேசன் அவர்களின் இறுதி வணக்க நிகழ்வில் கலந்து வணக்க உரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

தமிழீழ தேசவிடுதலைக்காக மாமனிதர் கிட்டினன் சிவனேசன் அவர்கள் தன் உயிரைத் தியாகம் செய்துள்ளார். இவரின் இழப்பு என்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற தமிழ் மக்களுக்கும் அதனைத் தலைமை தாங்குகின்ற எமது இயக்கத்திற்கும் தலைமைக்கும் ஏற்பட்டுள்ள இழப்பு.

மாமனிதர் சிவனேசன் ஒரு சிறந்த



தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் சிவனேசன் அவர்களுக்கு இறுதிவணக்கம் செலுத்துகிறார்

கூட்டுறவாளன் வாழ்நாள் முழுவதையும் மக்களின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தார். சாதாரண, குடிமகனாக சிறந்த கூட்டுறவாளனாக இறுதிக் காலகட்டத்திலும் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்டு மக்களின் விடுதலைக்காக தன்னை முழுமையிலும் ஒப்பித்து உழைத்தார்.

மாமனிதர் சிவனேசன் இளமைக்காலத்தில் இருந்தே மக்களிற்காகத் தன்னை அர்ப்பணிக்கும் சிறந்த புரட்சிவாதியாகத் திகழ்ந்தார். யாழ். குடாநாட்டில் வாழ்ந்த காலங்களில் கூட்டுறவாளனாக இருந்தாலும் சமூகவிடுதலையுடன் கூடிய தேச விடுதலைக்காக உழைத்தார். இவர் இளமைக்காலத்தில் சமூகப் புரட்சியை விரும்பும் புரட்சிகரகோட்பாட்டைப் பின்பற்றினார்.

அனைத்து மக்களாலும் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் மதிக்கப்படும் ஒரு விடுதலைப்பற்றாளனாக இருந்தார். விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் தனது புரட்சிகர கோட்பாட்டால் ஆட்கொள்ளப்பட்டு தமிழீழ தலைமையை முழுமையாக ஏற்றுக்கொண்டார். அதன்பால் தமிழீழ விடுதலையே தனது முழுமையான இலட்சியமாக வரித்திருந்தார். இந்த நிலையில் அவர் எமது விடுதலைக்கு ஆற்றியிருந்த பங்கு வார்த்தைகளால் கூறிவிட முடியாது. சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்ற அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மக்களுடன் இணைந்து நின்று அவர்களின் துயர் துடைத்த மக்கள்தொண்டன் இவர். மக்கள் மத்தியில் மேற்கொண்ட புரட்சிகரப்பணி எப்போதும் நிலைத்திருக்கும்.

மாமனிதர் சிவனேசன் அவர்கள் கூட்டுறவுச் செயற்பாட்டின் மூலம் மக்களின் துயரங்களை மிகவும் நுட்பமாகப் போக்கியிருந்ததை எவரும் மறந்துவிட முடியாது. ஒரு விடுதலை வீரனாகவே இவர் வாழ்ந்திருக்கிறார். பாராளுமன்றத்தில் சென்று எங்களின் போராட்டத்தின் நியாயத்தையும் மக்களின் அபிலாசைகளையும் உரக்க ஒலிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்தப்பணியில் சிங்கள தேசத்திற்கு மாத்திரமல்லாமல் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளையும் விடுதலையின் அவசியத்தையும் உரக்க ஒலித்திருந்தார். தமிழ் மக்கள் மீது சிங்கள தேசம் மேற்கொண்டு வரும்



தமிழீழ அரசியல்துறைப்பொறுப்பாளர் பா. நடேசன்

பொருளாதார அடக்குமுறைகள் மற்றும் இனப்படுகொலைகள் அனைத்தையும் உலகிற்கு தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் எதனை எடுத்துச் சொன்னாலும் அதற்கு எந்தப் பயனும் கிடைத்து விடப் போவதில்லை. என்பதையும் சிங்களப் பாராளுமன்றத்தின் ஊடாகவோ அல்லது சிங்கள அரசினாலோ தமிழ் மக்களுக்கு எந்த நியாயங்களும் கிடைக்கப்போவதில்லை. என்பதையும் உணர்ந்து தனது விடுதலைப் பணியியை சர்வதேசத்தை நோக்கித் திருப்பினார்.

விடுதலைக்காகப் போராடும் மக்களினதும், தமிழ்த்தேசத்தினதும் நியாயங்களை மிகவும் தெளிவாக தேசிய ரீதியாக எடுத்துக் கூறியது மட்டுமல்ல சர்வதேச ரீதியாகவும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தவர் மாமனிதர் சிவனேசன் அவர்கள். இவரின் இந்தச் செயற்பாடு சிங்கள தேசத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்திருக்கிறது.

தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு மேற்கொண்டு வரும் கொடுமைகளை உலகிற்கு எடுத்துக் கூறும் தன்னைச் சிங்கள இனவாத அரசு குறிவைத்திருக்கிறது என்பதை நன்கு அறிந்திருந்தும் தனது பணியில் சிறிய தடங்கலும் இல்லாமல் செயற்பட்டிருந்தார். அவரின் சிந்தனைகள் எல்லாம் தமிழ் மக்களின் விடுதலை என்பதாய் இருந்தது இவரின் மரணம் ஒட்டு மொத்த தமிழ் இனத்திற்கும் ஈடுசெய்துவிட முடியாத பேரிழப்பு சிங்களவர்களிடம் இருந்து தமிழர்களிற்கான உரிமைகளை விரைந்து பெற்றுக்கொள்ளுங்கள் இல்லையேல் நாங்கள் இப்பிடி இன்னும் பலரை பறி கொடுக்க வேண்டி நேரிடும். என்ற செய்தியைச் சொல்லியபடி எங்களின் முன் புகழுடலாக வீழ்ந்திருக்கிறார் சிவனேசன் அவர்கள்.

இன்று சிங்கள அரசு மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது பேரினவாதக் கொள்கைகளிற்குள்ளும் கோட்பாடுகளிற்குள்ளும் மூழ்கிப்போய் இனத்துவேசத்திற்குள் புதைந்துபோய் இருக்கிறது. இந்த மாயைக்குள் நின்று கொண்டு தாங்கள் பலம் பொருந்தியவர்களாக இருக்கிறோம் என்பதற்காய் கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். முற்று முழுதான மக்கள் ஆதரவுடன் நடத்தப்படும் இந்தப்போராட்டத்தை அடக்குவதற்கு சிங்கள தேசம் பெரும் பிரயத்தனம் செய்து வருகிறது.

இதனை அடக்கிவிடுவோம் என்ற துடிப்பில் மக்கள் மீதும் மக்கள் உடமைகள் மீதும் பல்வேறு தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது சிங்கள தேசம். சிங்கள தேசத்தின் இத்தகைய குருட்டத்தனமான தீர்மானங்களால் தமிழ் மக்கள் தினமும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசத்துக்கு பலம் சேர்க்கும் பணியில் தீவிரமாகத் தன்னை அர்ப்பணித்து உழைத்த இந்த மாமனிதரின் விடுதலைக் கனவு விரைவில் மலரும். இதற்காக நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போம். விடுதலை விரைவில் மலரும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

https://tamileelamarchive.com/

கலாநிதி.க.சோமாஸ்கந்தன்

# மக்கள் போரின் இராணுவப் பரிமாணம்



மக்கள் பங்களிப்பு இல்லாமல் ஒரு விடுதலைப் போர் வெற்றியடைவது மிக மிகக் கடினம். விடுதலைப் போரின் பங்காளிகளாவும் அதை முன்னெடுப்பவர்களாகவும் மக்கள் இடம் பெறும் போது விடுதலைப் போர் தனது வெற்றி இலக்கை அடைந்தே தீரும். சீனா, வியற்நாம் ஆகிய நாட்டு மக்கள்; ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும் நடத்திய விடுதலைப் போர் மக்கள் போர் (PEOPLE'S WAR) எனப்படும். ஆசியாவின் மூன்றாவது மக்கள் போர் இப்போது தமிழீழத்தில் நடந்து கொண்டிருக்கிறது. புலிகள் தலைமையில் தமிழீழ மக்கள் நடத்தும் விடுதலைப் போர் பல வியப்பூட்டும் இராணுவ பரிமாணங்களைக்கொண்டது.

மக்கள் போரின் தாக்குப்பிடிக்கும் வலு அதன் வெற்றி இலக்கை அடைய உதவுகின்றது. பிடித்து வைத்திருக்கும் நிலப் பரப்பு பெரிதல்ல, கொன்று குவித்த எதிரிகளின் எண்ணிக்கை பெரிதல்ல, நெடுங் காலம் அணைய விடாது விடுதலைப் போரை முன்னெடுப்பது தான் முக்கியம். தமிழீழ விடுதலைப் போர் 30 வருடங்களை எட்டிவிட்டது. எமது தமிழீழ தாகம் தணியாமல் இருக்கிறது. எமது கட்டுக்கோப்பு உறுதியாக இருக்கிறது. எந்த இடரையும் எம்மால் எதிர் கொள்ள முடிகிறது. இவை எமது வெற்றியின் வெளிப்பாடாக அமைகின்றது. போரியல் விஞ்ஞானத்திற்கு நாங்கள் முக்கிய பங்களிப்புச் செய்து வருகிறோம். கெரில்லாப் படையணியாகவும், மரபுப் படையணியாகவும் எம்மைத் தேவைக்கேற்ற விதத்தில் மாற்றமடைய முடிகிறது. புலிகள் ஒரு இராணுவ அமைப்பு மாத்திரமல்ல. எம்மால் சர்வதேச மட்டத்தில் அரசியல் அமைப்பாகவும் செயற்பட முடிகிறது.

மக்கட் போரின் முக்கிய அம்சங்கள் தெட்டத்தெளிவாக தெரிகின்றன. நிலமைக்

https://tamileelamarchive.com/

கேற்ற விதத்தில் தந்திரோபாயங்களை மாற்றும் திறமை அதில் முதலிடம் வகிக்கிறது. சதா தாக்கிக் கொண்டிருந்து சோர்வைச் சந்திக்காமல் ஓய்வாக இருந்து எம்மைப் பலப்படுத்தவும் எம்மால் முடிகிறது. தரை அமைவு, இயற்கைச் சூழல், காத்திருக்கும் பொறுமை என்பன எம்மை வலுவூட்டுகின்றன. காத்திருக்கும் காலத்தில் எமது படையணிகளைப் பலப்படுத்தி, எமது பயிற்சிகளையும் முடுக்கி விட்டு தாக்குதல் நேரத்தை தெரிவு செய்யும் தந்திரோபாயத்தில் நாம் வல்லவர்களாக இருக்கிறோம். எதிரி தமது பிரசார வெளியீடுகளை நம்புவதற்குத் தயாராகி விட்டான். இதுதான் அவனுடைய மீள முடியாத பலவீனம் புலிகள் பற்றிய அவனது ஒவ்வொரு கணிப்பீடும் தவறானவை. இதுதான் எங்கள் பலம்.

தனது தற்காப்பு ஏற்பாடுகளை எதிரி தெரிந்து கொள்ளாமல் அமைக்கும் தளபதி தாக்குதல் நடத்துவதில் சமர்த்தனாவான். எங்கே தாக்குதல் நடக்கலாம் என்று எதிரியைத் திகைக்கவைக்கும் தளபதி கூடிய திறமைசாலி என்றும் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு மாவோவும் அவருடைய முதல் தளபதி சூதேயும் (CHU-THE) தங்கள் மக்கள் போரை நடத்தி வெற்றி கண்டனர். நீ வரமாட்டாய் என்று எதிரி எண்ணும் போது வேகமாகப் பாய்ந்து செல் என்பது காலத்தால் அழியாத இராணுவக் கோட்பாடு இதன் சூட்சுமத்தை நாம் நன்கு அறிவோம். விலகிச் செல்லவும், விரைந்து தாக்கவும், புதிய களமுனைகளைத் திறக்கவும், எம்மால் முடியுமென்றால். அதற்கு நாம் நடத்தும் மக்கட் போர் தான் காரணம்.

நாம் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், எமது பொருளாதார வளம் ஒப்பீட்டில் சிறியது, எமது நட்புச் சக்திகள் சில, நாம் நிமிர்ந்து நிற்கிறோம் என்றால் அதற்கு எமது மக்கட் பலம்தான் காரணம் 'நம்முடைய பலவீனங்களை பலமாக மாற்றிக் கொள்ள வகை செய்வது நீண்டகாலம் நடைபெறும் போர்தான். ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறிய வெற்றிகள் ஒன்றாக சேரும் போது ஒரு மகத்தான வெற்றி கிடைக்கின்றது' என்றார் வியற்நாமிய ஜெனரல் வோக் குவன் கியாப் (VO NGUYEN GIAP ) ஆயுத தளவாடங்களாலும், போர் வீரர் எண்ணிக்கையிலும் குறைந்ததொரு இனம் ஒரு உன்னதமான இலட்சியத்திற்காக சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலில் போரிடும் போது வெற்றி கிடைத்தே தீரும்.

போரியல் வல்லுனர்கள் தாக்குதல் நேரத்தெரிவிற்கு மிகப் பெரிய முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வெற்றியைத் தீர்மானிப்பது நேரத் தெரிவு. என்றும் சொல்கிறார்கள் வியற்நாம் போரில் சரியான தாக்குதல் தருணம் மிகப் பெரிய பங்களிப்புச் செய்தது. சிறந்த தாக்குதல் தருணத்தை வியற்நாமியர்கள் தொயிகோ (THOICO) என்றார்கள். அது நீண்ட காலம் கூட எடுக்கலாம் உடனடியாகவும் கூட நடக்கலாம். எதிரியின் நிலவரம், வேவுத்தரப்பு, தட்பவெப்பம், புறச்சூழல் தனது தனியார் நிலை போன்ற பல்வேறு தரவுகள் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அரசியல் மற்றும் இராசதந்திர உபாயங்கள் பயனற்ற நிலைக்கு வந்து விட்டனவா என்று பார்க்கப்படும். அரசியல் இராசதந்திர நகர்வுகளை முன்னோக்கிச் செல்வதற்கு போர் வெற்றி தேவை என்றால் அதற்கான ஒழுங்கமைப்புகளையும் செய்தல் வேண்டும்.


> மக்கள் போரின் தாக்குப்பிடிக்கும் வலு அதன் வெற்றி இலக்கை அடைய உதவுகின்றது. பிடித்து வைத்திருக்கும் நிலப்பரப்பு பெரிதல்ல, கொன்று குவித்த எதிரிகளின் எண்ணிக்கை பெரிதல்ல, நெடுங்காலம் அணைய விடாது விடுதலைப்போரை முன்னெடுப்பதுதான் முக்கியம்.

உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றிருந்தாலும் அதுவே எமது மேம்பாட்டின் அடித்தளமாக இருந்தாலும் தமிழீழ மக்களாகிய நாம் உண்மையில் ஒரு விவசாய சமூகம் தான். எதிரி எம[illegible] சுருக்குக் கயிறு போட்டு முற்றுகையிட்டு பொருளாதார தடை செய்யும் போதெல்லாம் எம்மை காப்பாற்றியது மண்ணின் உற்பத்திப் பொருட்கள் என்பதை மறுக்க இயலாது. மக்கள் போரின் அங்கமாக விவசாயம் இடம் பெறுகின்றது. மக்கள் போருக்கான தயார்ப்படுத்தலில் விளைவு பொருட்களின் கூடுதல் வெளியீட்டு விலைவாசியின் உயர்வைக்கட்டுப்படுத்தவதற்கும் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவுகின்றது. மக்கள் போருக்கான படையணிகளைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னோடியாக மத்தியில் எதிர்வரும் போர் பற்றிய விளக்கங்களைத் தரவேண்டிய பொறுப்பு இருக்கின்றது. எதிரியின் கொடூரமுகம் பற்றிய அறிவுறுத்தல்களை மக்கள் மத்தியில் இடைவிடாது பரப்பும் பங்கைச் செய்ய வேண்டும். விடுதலைப் போருக்கான போராளிகளை மக்கள் மத்தியில் இருந்துதான் திரட்ட வேண்டும். மக்கள் படையைத் திரட்டும் பணியை குறுகிய காலத்தில் நிறைவேற்ற இயலாது. மெதுவாக ஆனால் உறுதியாக செய்யும் பணியாக அது அமைகின்றது. இலட்சிய வேட்கையில் ஊறிய இனம் போருக்குத் தன்னைக் காலப்போக்கில் தயார்ப்படுத்தி விடும்.

வியட்நாம் போரின் முதன்மைத் தளபதி கியாப் தனது படையணிகள் திரட்டப்பட்ட விதம் பற்றித் தனது விரிவான கட்டுரையில் (PEOPLE'S WAR PEOPLE'S ARMY... HANOI.FOREING LANGS PUBLISHING HOUSE 1961) விளக்கியுள்ளார் கட்டுரையின் தலைப்பு மக்கட் போர், மக்கள் இராணுவம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்திரட்டல் தொடங்கிய காலத்திலேயே நீண்டகால போருக்கான திட்டம் தீட்டப்பட்டது. எதிரி பலம் வாய்ந்தவன் நவீன ஆயுதங்கள் வைத்திருப்பவன். என்ற விபரம் கருத்தில் எடுக்கப்பட்டது. மக்கள் படை மிகவும் மெதுவாக பிரமிட் எனப்படும் கூம்பு வடிவத்தில் கட்டியெழுப்பப்பட்டது. அதன் அடித்தளம் விவசாயப் பெருமக்களாகவும் அவர்களுக்குத் தற்காப்பு அணிகளாகவும் அமைந்தது. தற்காப்பு அணிகள் இருந்தும் கெரில்லா அணிகளும் வேகமாக இடத்திற்கு இடம் மாறி தாக்கும் அணிகளும் உருவாக்கப்பட்டன. இதில் திறமையையும், விசேட தகைமையையும் வெளிப்படுத்தியவர்கள் நாடு தழுவிய மரபுப் படையணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இந்த விதமாக ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் படை தனது ஆட்பற்றாக்குறையைத் தானாகவே நிரவிக் கொள்ளும் வலுவைப் பெற்றுவிடும் எப்போதும் விவசாயப் பெருமக்களின் அணிகளில் இருந்து கெரில்லாக்கள் தோன்றுவார்கள். கெரில்லாப் போர் முறையில் சிறந்தவர்கள் மரபுப் படையணியில் இணைவார்கள். இதனால் ஒரே நாளில் மக்கள் படையாகவும், கெரில்லாப் படையாகவும், மரபுப்படையாகவும் செயற்படும் திறமையுள்ளதாக அமையும். சுருக்கமாகக் கூறுவதால் ஒரே படையணி இராணுவப் பொருளாதார மற்றும் அரசியல் இலக்குகளைக் கொண்டதாக அமைகிறது. உள்ளூர் மற்றும் அனைத்துலக மட்ட அரசியல் கற்பித்தலை எமது படையணிகளுக்கு மேற்கொண்டோம். தனது கையாலேயே

https://tamileelamarchive.com/



மக்கள் படை

https://tamileelamarchive.com/



வியட் லாம் ( VIET LAP) என்ற கையெழுத்துப் பத்திரிகையை மாமா என்று செல்லமாக அழைக்கப்படும் ஹோசிமின் தயாரித்த வெளியிட்டார். கடதாசி, மை தட்டுப்பாடு காரணமாக அவருடைய கட்டுரைகளில் ஐம்பது சொற்கள் மாத்திரம் இருந்தன. இதை இலவசமாக விநியோகிக்க அவர் மறுத்து விட்டார். மிகவும் சிறிய தொகைக்கு விற்பனையாகியது. வேறு ஆர்வலர்களால் விடுதலைக் கவிதைகள் இயற்றப்பட்டு சொற்படிகள் மாத்திரம் வெளிவந்தன. பதனிடப்பட்ட மூங்கில் இலைகளில் கவிதைகளும் செய்திகளும் வெளியிடப்பட்டன.

1945 இல் தொடங்கிய ஆட்சேர்ப்பு 1950 முதலாவது டிவிசனை உருவாக்கும் அளவிற்கு வளர்ச்சியை அடைந்தது. வியற்நாமின் மக்கள் தொகை 30 மில்லியன், பரப்பளவு 330 ஆயிரம் சதுர மையில்கள், மலைகள், குகைகள், சமவெளிகள், காட்டாறுகள், அடர்காடுகள் நிறைந்த வடக்குத் தெற்காக நீண்ட நாடு மக்கள் படையின் தாக்குதல் திட்டங்களுக்கு மிகவும் பொருத்தமான தரை அமர்வு. வியட்நாம் மக்கள் நடத்திய போர் வரைபடத்தில் நன்கு அடையாளப்படுத்தக்கூடிய போர்க்களம் இல்லை எனலாம். எங்கு எதிரி அணிகள் காணப்படுகின்றனவோ அங்கு ஓர் போர்க்களம் திறக்கப்பட்டது. தாக்க வேண்டிய நேரம் தாக்குதல் நடத்தப்பட்டது. இழப்புகள் கணிசமானளவு ஏற்பட்டவுடன் பின்வாங்க நேரிட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலும் படையணிகளின் பலத்தைக் கட்டியெழுப்புவதிலும் தீவிர கவனம் எடுத்தோம் என்றார் கியாப்.

1949இல் நவ சீனா பிறந்ததோடு விடுதலைப்போர் புதிய பலம் பெற்றது. ஒரு விடுதலை பெற்ற நாட்டிற்கு அருகாமையில் புவியியல் ரீதியாக வியற்நாம் இடம் பெறும் வாய்ப்பை பெற்றது. 1950 சீனா, சோவியத் ஒன்றியம், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் என்பன வியற்நாம் விடுதலைப்போரை அங்கீகரித்தன. அத்தோடு ஆயுத வளங்களில் சீனாவுடன் ஆரம்பித்தன. நீண்ட காலமெடுக்கும் விடுதலைப்போர் அரசியல் அனுகூலங்களுக்கு வழிவகுக்கும் என்பது இப்போது மெய்யாகியது. மிகப் பெரியதொரு இராணுவ வெற்றி அரசியல் இராசதந்திர நகர்வுகளுக்கு இடமளிக்கும் ஆனையிறவு வெற்றியின் பின் புலிகளின் சர்வதேச அந்தஸ்து உயர்ந்தது. அடுத்துவரும் காலத்தில் எமக்காக காத்திருக்கும் வெற்றிகள் பல சாதகமான அரசியல் வெற்றிகளை ஈட்டித்தரும்.

வியட்நாம் வரலாற்றிலும் இதுதான் நடந்தது. 20 ஆம் நூற்றாண்டின் திருப்புமுனைப் போர்களின் ஒன்றான டியன் பியன் பூ (DIEN BIEN PHU) போர் வட வியற்நாம் விடுதலை பெறுவதற்கும் வகை செய்தது. இந்தச் சண்டை மார்ச்சு 13.1954 இல் தொடங்கி மே 07. 1954 இல் முடிவுற்றது. 55 பகலும் 55 இரவுமாக நடந்த இந்தப் போரில் 10,000 வியற்நாம் போர் வீரர்கள் களப்பலியாகினர். போர் தொடங்கியபோது 16,200 பிரஞ்சு வெள்ளையர்களும், ஆபிரிக்கக் கறுப்பர்களும் 11 மைல் நீளம் 5 மைல் அகலமுள்ள டியன் பியன் பூ முகாமில் இருந்தனர். உட்புறத்தில் மூன்று விமான ஓடு பாதைகளும் 12 விமானங்களும் இருந்தன. அதி உச்ச பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றை பார்வையிட்ட அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் அது வெல்லப்பட முடியாத கோட்டை என்று தீர்மானித்தனர். இதே அபிப்பிராயத்தை அமெரிக்கர்கள் ஆனையிறவு பற்றியும் கொண்டிருந்தனர்.

தேசிய விடுதலைப்போரில் மக்கள் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான உதாரணங்களை நாம் வியற்நாமியர்கள் நடத்திய போரில் பார்க்கலாம். டியன் பியன் பூபோரில் அத்தனை போராளிகளுக்கும் உணவு வழங்கும் பொறுப்பை பொதுமக்கள் ஏற்றனர். இது போன்ற மாபெரும் கோட்டைகளை சுற்றிய ஆழமான காப்பகழிகளை வெட்டுவதற்கு பொது மக்கள் உதவினர். இராணுவ வரலாற்றில் வியற்நாமின் சுரங்கப் பாதைகள் ஆழமான காப்பகழிகள், நிலத்தடியில் அமைக்கப்பட்ட மக்களின் வசிப்பிடங்கள் என்பன உலக அதிசயங்களில் ஒன்றாகி உள்ளன. விமான குண்டு வீச்சின் அகோரம் கூடிய போது அந்த மக்கள் நிலத்தின் கீழ் வாழக் கற்றுக் கொண்டனர். மகப்பேற்று நிலையங்கள் கூட நிலத்தடியில் அமைக்கப்பட்டன.

டியன் பியன் பூ போரில் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற பழமொழி நடைமுறைக்கு வந்தது. இரண்டாயிரத்திலும் கூடிய மிதி வண்டிகள், ஆயுதத் தளவாடங்கள், உணவுப் பொருட்கள், சமயற் பாத்திரங்கள் ஆகியவற்றை களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. வேகமாகப் பாயும் நதியை கடப்பதுக்கு மூங்கில் படகுகள் கட்டப்பட்டன. பல மைல் தூரம் செல்லும் மலைப்பாதைகளை ஆண்களோடு இணைந்த பெண்களும், சிறுவர்களும் வலுக்குறைந்த சிறு கருவிகளின் உதவியோடு அமைத்தனர். எதிரிவசம் அதிக சக்தி வாய்ந்த ஆட்லறி, குண்டு வீச்சு விமானங்கள் என்பன இருந்தன. வியற்நாம் மக்களிடம் மனோ பலம் சமயோசிதம் உயிரைக் கொடுத்தும் வெல்ல வேண்டும் என்ற உறுதி இருந்தது. மக்கள் படையின் வெற்றி ரகசியம் இதுதான். மக்கள் படை என்பது முழு நாடே ஒன்றிணைந்த படை என்பது பொருள்.

https://tamileelamarchive.com/

த.ரமணன்

சிறிலங்காவில் இன்று பிரஸ்தாபிக்கப்படும் முக்கிய விடயங்களில் ஒன்று அடுத்த ஆண்டிலும் யுத்தம் அதாவது 2009 ஆம் ஆண்டு யுத்த ஆண்டாக இருக்கின்றது என்பதேயாகும்.

சிறிலங்காவிலுள்ள பல ஆய்வாளர்களுக்கும் பொதுவில் இவ்யுத்தம் சிறிலங்கா அரசாங்கம் கூறிக்கொள்வது போன்று இலகுவிலோ அன்றி இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற முறையிலோ முடிவிற்கு கொண்டுவர முடியாது என்று தெரியும்.

ஆனால் மகிந்த ராஜபக்சவும் அவரது குடும்பத்தினர் ஒருபுறம் சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல். சரத் பொன்சேகாவும் அவரது சகாக்களும் செய்த பிரசாரங்களும், ஊட்டிய நம்பிக்கைகளும், இவ் வாண்டின் இறுதிக்குள் யுத்தம் முடிவிற்கு வந்துவிடும் என்ற நம்பிக்கையை பலர் மத்தியிலும் ஏற்படுத்தியது என்றே கூறலாம்.

இதன் காரணமாக யுத்தம் இவ்வாண்டிற்குள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவர்களின் மதிப்பீடுகளும், செயற்பாடுகளும், அமைந்தன எனின் மிகையாக மாட்டாது.

இவ்வாறு இவர்கள் தமது நம்பிக்கையை வளர்த்தெடுத்தமைக்கு கிழக்கில் இராணுவம் ஈட்டியதாகக் கூறிக் கொண்ட வெற்றிகள், கடலில் சிறிலங்காக் கடற்படை செய்ததாகக் கூறப்பட்ட சாதனைகள், புலிகளின் பல கப்பல்களை மூழ்கடித்த பிரசாரங்கள் போன்றவையும் காரணமாகின.

இந்த நிலையில் கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகளை முற்றாக வெளியேற்றிவிட்டதாக பிரகடனப்படுத்திய மகிந்த தரப்பும், இராணுவத் தரப்பும், வடக்கில் புலிகளை முறியடிப்பதற்கான தோற்கடிப்பதற்கான கால நிர்ணயமாக இவ்வாண்டின் மார்ச் மாதத்

# அடுத்த ஆண்டிலும் யுத்தம்



"இராணுவத்தீவே இனப்பிரச்சனைத் தீர்விற்கான வழியென மகிந்த அரசு யுத்தத்தை தொடருமானால், அடுத்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு அடுத்த ஆண்டிலும் யுத்தம் தொடரவே செய்யும், ஆனால் நிச்சயமாக அப்பொழுது மகிந்த ராஜபக்சவாலோ, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல்சரத் பொன்சேகாவாலோ நடத்தப்படுவதாக இருக்கமாட்டாது. விடுதலைப்புலிகளால் நடத்தப்படுவதாகவே இருக்கும்."

https://tamileelamarchive.com/

த்தினை முதலில் நிர்ணயம் செய்தது.

ஆனால், இது நடைமுறையில் சாத்தியமாக மாட்டாது. என்பது சிறிலங்கா அரசு தரப்பினாலும் உணரப்பட்டு இருந்தமையால் இவர்களின் இக்காலக்கெடுவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தும், அழுத்தம் கொடுத்தும் பிரசாரம் செய்யவில்லை என்றே கூறலாம்.

ஆயினும் இக்காலப்பகுதியில் மடுவை மீட்பதற்கான நடவடிக்கையை சிறிலங்கா இராணுவம் ஆரம்பித்திருந்தது. ஏற்கனவே மன்னார் மாவட்டத்தின் தென்பகுதியை (சிலாபத்தை உடப்பு பிரதேசத்தை) எதிர்ப்பின்றி ஆக்கிரமித்த நிலையில் மடுவை ஆக்கிரமிப்பதென்பதும் கடினமானதொரு நடவடிக்கையாக இருக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டுடன் மடு பிரதேசம் மீதான படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் எதிர்பார்த்த அளவில் எதிர்ப்பு வந்ததும், மடுப்பிரதேசத்தை ஓகஸ்ட் மாத பெருமளவுக்கு முன்னதாக அதாவது யூலை மாத இறுதிக்குள் மீட்கப்படும் - ஆக்கிரமிக்கப்படும் என்ற அறிவிப்பு சிறிலங்காத் தரப்பிலிருந்து வந்தது. அத்தோடு மும்முனைகளில் படை நடவடிக்கையும் முனைப்புப்படுத்தப்பட்டது.



குறிப்பாக மடுப்பிரதேசத்துக்கு மேற்கில் இருந்தும் தென் மேற்கிலிருந்தும், தென் கிழக்கிலிருந்தும் இப்படை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இதில் சில முனைகளில் சில கிலோ மீற்றர் தூரங்கள் முன்னேற முடிந்ததேயொளிய இதுவரையில் மடுவை ஆக்கிரமிக்க முடியவில்லை.

இந்நிலையில் மற்றொரு களமுனை அடம்பனை நோக்கியதாக கடந்த செப்ரெம்பர் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டின் இறுதிக்குள் அடம்பனை கைப்பற்றி விடத்தல்தீவு வரை முன்னேறுவதே இராணுவத்தரப்பின் நோக்கமாகும். ஆனால் ஆறுமாத காலம் உக்கிரச்சமர்களின் பின்பு சிறிலங்கா இராணுவத்தால் அடம்பனின் மையப் பகுதியை கைப்பற்ற முடியவில்லை.

சுருக்கமாகச் செல்லப்போனால் அறியப்படாத கிராமங்களின. பெயர்களும், வீதிகளின் பெயர்களும், ஊடகங்களில் இடம் பிடித்துக் கொண்டனவேயொளிய சிறிலங்கா அரசினதும். இராணுவத்தினரின் எதிர்ப்பார்க்கைகள் நிறைவேறவில்லை.

இந்நிலைக்கு விடுதலைப்புலிகள் காட்டியதான உக்கிர எதிர்ப்பும் சிறிலங்காப் படையணிக்கு ஏற்படுத்திய இழப்புக்களுமே காரணமாகும். அதாவது சிறிலங்கா அரசுகளை எட்ட முடியாது தடுத்திருக்கின்றன.

இதேசமயம் சிறிலங்காப் படைத்தரப்பு மன்னார் மாவட்டத்தில் மட்டும் இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டதாக இல்லை. யாழ்.குடா நாட்டிலும் அதாவது கிளாலியிலிருந்து நாகர் கோவில் வரையும் மணலாற்றிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டே இருந்தது. இதனை இராணுவத்தளபதி சரத்பொன்சேகா அடிக்கடி உறுதிப்படுத்தவும் தவறவில்லை.

இந்த வகையில் சிறிலங்கா அரச தரப்பின் எதிர்ப்புக்கள் நிறைவேறாத நிலையில் சிறிலங்கா அரசு முடிந்து விட்டதாக கூறிய அதாவது விடுதலைப்புலிகளை வெளியேற்றிவிட்டதாகவும் யுத்தம் முடிந்த விட்டதாகவும் கூறிய கிழக்கில் புதிய தாக்குதல்கள் இடம் பெறத்தொடங்கியுள்ளன. இத்தாக்குதல்கள் கிழக்கை மட்டுமல்ல, தெற்கையும் - குறிப்பாக அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கும் விரிவாக்கப்பட்டும் இருந்தது.

இவை ஒருபுறம் இருக்க, மேற்கிலும் இடம் பெற்றுவரும் குண்டு வெடிப்புக்களும் யுத்தம் மகிந்த ராஜபக்ச கூறுவது போல் ஒரு முனையில் மட்டுமானதாக இல்லை அதாவது யுத்தம் வடக்கிற்கும் சென்றும் அதற்கு அப்பால் இலங்கை பூராவதுக்குமானதாக உள்ளது என்ற யதார்த்தம் வெளிப்படுத்தப்பட்டது.

இத்தகையதொரு நிலையில் தான் யுத்தம் இவ்வருடத்துக்குள் முடிவடைந்த விடமாட்டாது என்பதை பலராலும் உணரப்பட்டது. வேறுவிதமாகக் கூறப்போனால் சிறிலங்கா அரசினால் யுத்தம் இவ்வாண்டிற்குள் முடியும் என நம்பிக்கை வைக்க முடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்தான் மகிந்த அரசின் பிரச்சாரத்தையும் இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் கூற்றுக்களை ஓரம் தள்ளி வைத்தவிட்டு ஆய்வாளர்களும். விமர்சகர்களும் அடுத்த ஆண்டிலும் யுத்தம் நீடித்துச்செல்லப் போவதைப்பற்றி பேச முற்பட்டுள்ளனர்.

இது சிறிலங்கா மக்களுக்கு ஏமாற்றத்தை மட்டுமல்ல, பெரும் சுமையையும் ஏற்படுத்தும் ஒன்றாகவே இருக்கும். ஏற்கனவே மகிந்த அரசின் யுத்தத்தினாலும், ஊதாரித்தனத்தினாலும் பெரும் பொருளாதார சுமைக்கு ஆளாகியுள்ள சிங்கள மக்கள் முடிவுதெரியாத யுத்தம் ஒன்றிற்காக முடிவில்லாத தொலைவிற்கு சுமைகளை சுமக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அதாவது இராணுவத்தீர்வே இனப்பிரச்சனைத் தீர்விற்கான வழியென மகிந்த அரசு யுத்தத்தை தொடருமானால், அடுத்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு அடுத்த ஆண்டிலும் யுத்தம் தொடரவே செய்யும், ஆனால் நிச்சயமாக அப்பொழுது மகிந்த ராஜபக்சவாலோ, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவாலோ நடத்தப் படுவதாக இருக்கமாட்டாது. விடுதலைப்புலிகளால் நடத்தப்படுவதாகவே இருக்கும்.

இதே வேளை சனாதிபதி மகிந்த ராஜபக்சவும், இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவும் 2008 ஆம் ஆண்டு இறுதியை கால நிர்ணயம் செய்தமைக்கு வேறுசில காரணங்களும் இருத்தல் கூடும் மகிந்த ராஜபக்சவைப் பொறுத்து 2010 தேர்தல் ஆண்டாகும். அதற்கு முன்னர் 2008 இல் பெறப்படும் இராணுவ வெற்றிகள் தேர்தல் வெற்றியை உறுதி செய்வதாக இருக்கத்தக்கவை. இதே வேளை அடுத்த தளபதிக்கு யுத்தத்தை விட்டுச் செல்ல விரும்பாத தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஓய்வும் இவ்ஆண்டில் இறுதியாகும். வெற்றி வீரனாகச் செல்வதாயினும் சரி, பதவி நீடிப்பதற்கானதாயினும் சரி அவருக்கு இவ்வாண்டில் வெற்றி தேவையாகும். ஆனால் அது இன்று அவர்களால் மானிக்கத்தக்க விடயமாக இல்லை.

https://tamileelamarchive.com/

# தவா என்றொரு ஒளிச்சொல்...

**இராசகிளி**

வரலாற்று வெளியில் சில அடையாளங்கள் ஒளி முகத்தோடிருக்கும். சிலபோது நிகழ்வுகள், சிலபோது மனிதர்கள், சிலபோது வேறு அபூர்வமான விசயங்கள் அவை. அவை அவற்றின் நிலைமைகளுக்கும், தரத்திற்கும் வலுவுக்கும் ஏற்ப சிறப்படைகின்றன, நீடிக்கின்றன.

இந்த மாதிரியான வரலாற்று அடையாளப்புள்ளிகள், அல்லது குறிப்புக்கள், அல்லது விசயங்கள்தான் மனிதவாழ்வை நகர்த்துகின்றன. அதற்கு அடையாளத்தையும் இயங்குநிலையையும் கொடுக்கின்றன. மீள்பார்வைக்கும் முன்னோக்கும் பயணத்துக்கும் உதவுகின்றன.

காந்தி என்றசொல் வெறுமனே ஒரு பெயர் மட்டுமல்ல, அது ஒருவடிவம், செய்முறையின் வாழ்முறையின் வடிவம், எத்தகைய விமர்சனங்கள் உள்ளபோதும் அது அவற்றையெல்லாம் உள்ளடக்கியும் கடந்தும் அடையாளமாகி விட்ட ஒரு நிலையான வடிவம்.

காந்தி தன்னை ஒழுங்கமைத்தமுறைமையும், அந்த ஒழுங்கமைப்பின்படி தன் வாழ்வை அவர் நிகழ்த்திய விதமும் இந்த அடையாளத் தொகுப்பாகியது. அதுவே மக்களிடத்தில் ஒளியாகவும், இருளாகவும் வேறு எவ்விதமாகவும், கலந்துபரவியது.

இதைப்போல் ஏராளம் உதாரணங்கள் உண்டு. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா என்றால் தமிழ் நாட்டில் சிறுகதை இலக்கியத்தில் இயங்கிய புதுமைப்பித்தன், ஈழத்தில் கவிஞர் சு.வில்வரத்தினம் இப்படி ஏராளம் ஏராளம் உதாரணங்களுண்டு.

> வாழ்முறையில் ஒரு போராளியாக, ஒளிப்பதிவாளராக, நடிகராக, சகபயணியாக இக்காலத்தில் வாழ்ந்தவர் தவா. கட்டைக்குரல், முரட்டுத் தோற்றம், அமைதியும் அன்பும் நிரம்பிய சுபாவம், சுறுசுறுப்பான இயங்குநிலை, ஓய்வில்லாத உழைப்பு, யார் எவர் என்றில்லாத பழகுமுறை, உறவு நிலைகளில் தொடர்பாடு, பண்பு, எளிமை, எதற்கும் போட்டியிடாத ஒருவகைப் பற்றற்ற தன்மை இப்படிப்பல இயல்புகளை தன்குணமாகவும், அடையாளமாகவும் கொண்டவர் தவா.



https://tamileelamarchive.com/

தன்னைக் கரைத்தல், அதனுடாக தன் அடையாளம் ஒன்றை உருவாக்குதல் என்ற எதிர்முரண் நிலைச்செயல் இது. தன் அடையாளம் நோக்கிய இலக்கை முதன்மைப்படுத்தி தன்னைக் கரைக்கும் அரசியல் இதில் இல்லை. இந்த விதமான இலாப அரசியலை எப்போதும் இந்தத் தன்னைக் கரைத்தல் கொண்டிருப்பதில்லை. தன் காலச்சூழலில் அதன் தேவைகள், நிலைகளுக்கு தன்னைக்கொடுத்து இயங்குதல் என்பதில் இந்தத் தன்னைக் கரைத்தல் நிகழ்கின்றது.

தன் உழைப்பு, தன்னாற்றல், தன் ஆளுமை என எல்லாவற்றையும் காலத்திடமும் சூழலிடமும் கரைத்து ஒரு நதியாக்கி விடுகிறது. இந்தத் தன்னைக் கரைத்தல் தானே கரைந்து எல்லாவற்றோடும் ஒன்றிவிடுதல் இது. இந்த ஒன்றுதல் முறையாக சமூகத்தினால் இனங்காணப்படுகின்றது. இந்தக் கரைத்தலை சமூகம் அடையாளம் காணுகிறது. ஆக கரைத்தலில் தேறுகின்ற அடையாளம் இது எனலாம்.

இத்தகைய தன்னைக்கரைத்தல் வாழ்முறையில் ஒரு போராளியாக, ஒளிப்பதிவாளராக, நடிகராக, சகபயணியாக இக்காலத்தில் வாழ்ந்தவர் தவா. கட்டைக்குரல், முரட்டுத் தோற்றம், அமைதியும் அன்பும் நிரம்பிய சுபாவம், சுறுசுறுப்பான இயங்குநிலை, ஓய்வில்லாத உழைப்பு, யார் எவர் என்றில்லாத பழகுமுறை, உறவு நிலைகளில் தொடர்பாடு, பண்பு, எளிமை, எதற்கும் போட்டியிடாத ஒருவகைப் பற்றற்ற தன்மை இப்படிப்பல இயல்புகளை தன்குணமாகவும், அடையாளமாகவும் கொண்ட தவா. விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு போராளியாக இருந்திருக்கிறார்.

திருகோணமலை திரியாயில் பிறந்த தவா தன்னுடைய இளமைப் பிராயத்திலே தகப்பனை இழந்திருந்தார். படையினர் அப்பாவை சுட்டுக்கொண்ட பிறகு தவா போராட்டத்துக்குள் சென்றிருக்கிறார். குடும்பம் திரியாயைவிட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்துவிட்டது. தவா தமிழகம், வன்னி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா என்று எங்கும் திரியும் ஒருவராகிவிட்டார்.

தன்னுடைய போராட்ட வாழ்க்கையில் தவா இரு நிலைகளில், இரு தன்மைகளில் செயலாற்றினார். ஒன்று ஆயுதம் ஏந்திய போராளியாக போர்க்களத்தில் நின்று போராடும் பணி. இரண்டாவது உக்கிரசமர் நடக்கும் இடங்கள் தொடக்கம் பிறபொது நிகழ்வுகள், மக்களின் எழுச்சிகரமான போராட்டங்கள் வரையிலும் ஒளிப்பதிவுக் கருவியுடன் (camera) நின்று இயங்குதல்.

இந்திய இராணுவக்காலகட்டத்தில் தவா ஆயுதம் ஏந்திய போராளி. அதற்கு முன் திருகோணலை மாவட்டத் தளபதியாக இருந்த லெப்ரினன் கேணல் புலேந்திரனின் காலத்திலும் அவர் படையினருக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டிருக்கிறார். பின்னர் இந்திய இராணுவ காலகட்டத்தில் தவா ஒளிப்படப்பிடிப்பாளராக மாறுகிறார். அப்போது போர்க்களம், களவாழ்வு என்பன தவாவின் பிரதான அக்கறையாகவும் அவற்றைப் பதிவுசெய்வதே முதன்மைப்பணியாகவும் இருந்தது. களவாழ்வு, களக்காட்சிகள், களநிலவரத்தை ஒளிப்படமாக்கும்பணி உலகத்தின் மிகக்கவர்ச்சியான பணியாகவும் இருக்கிறது.

முதலாம் உலகப்போரில் இந்தப் பணி தொடங்கப்பட்டு இரண்டாம் உலகப்போரில் மிகமுக்கியமான ஒரு தடயமாகவும், பிரச்சார ஊடகமாகவும் இந்த ஒளிப்பதிவுமுறை வளர்ச்சிபெற்றது. வியட்னாம் போரில் இது உச்சவிளைவுகளைக் கொடுத்தது.

வியட்நாமின் மிகப்புகழ்பெற்ற படமாக அப்போது நிக்யூட் என்பவர் எடுத்திருந்த ஒருபடம் வியட்நாமியப்போரின் தலைவிதியே மாற்றியது. அமெரிக்கப் படைகள் வியட்னாம் மீது ‘நேபாம்’ குண்டு வீசியபோது அந்த குண்டுத் தாக்குதலில் சிக்கித்தப்பியோடும் ஒரு நிர்வாணச் சிறுமியின் பேரவலக்காட்சியது. இந்தப்படம் வியட்னாமிய மக்களின் அன்றைய துன்பியலையும், பரிதாப நிலையையும் சாட்சிப்படுத்தியது. அமெரிக்கப்படைகளின் மனித விரோதச் செயலை அம்பலமாக்கியது. இதன் காரணமாக அமெரிக்கப்படைகளுக்கு எதிரான உளவியல் அமெரிக்காவிலேயே வளர்ந்தது. அது அமெரிக்கா வியட்னாமிலிருந்து வெளியேறுவதற்கான ஒரு நிலைமை உருவாகுவதற்குத் தூண்டுதலானது. இந்தமாதிரி போர்க்களக்காட்சிகள் பெரும் திருப்பங்கள், மாற்றங்களை உருவாக்கும் வலுமிக்கவையாக இருந்து வருகின்றன. இப்போது போர்க்களப் படங்கள், போர்க்களப் படப்பிடிப்பு என்பதெல்லாம் தனி முக்கிய விடயமாகிவிட்டன.

ஈழவிடுதலைப் போராட்டத்திலும் இத்தகைய போர்க்களப்பதிவுகள் வலுவானவையாக வளர்ந்துள்ளன. 1983 யூலை வன்முறையின்போது கொழும்பில் தமிழர் ஒருவர் நிர்வாணப்படுத்தப்பட்ட நிலையில் சிங்களக் காடையர்களாலும், காவல்துறையினராலும் தாக்கப்படும் காட்சி அந்த வன்முறையின் வீரியமுள்ளதொரு பதிவு, அந்தக்காட்சி களப்பதிவு என்ற நோக்கத்தில் பதிவுசெய்யப்படாத போதிலும் அது இன்றைய வரலாற்றில் பெற்றிருக்கும் முக்கியத்துவம் சாதாரணமானதல்ல.

அதைப்போல கொழுந்து விட்டெரியும் யாழ்நூலகக்காட்சி, எரிந்தநூலகக் காட்சிகள், பிறகு யாழ்ப்பாண நகரம் மீதான வன்முறைகள், தீவைப்புக்கள், சிறையடைப்புகள், படுகொலைகள் என்று பதிவுபெறும் இந்த ஒளிப்படவாக்கம் சாட்சிபூர்வமான அரசியல் படங்களாகின்றன.

இந்தநிலையில் விடுதலைப்புலிகளின் போர்க்களப்பதிவுகள் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் தகவமைக்கப்டுகிறது. இதன் தொடக்கப்புள்ளியாக கேணல் கிட்டு, பரதன், சிங்காரம் போன்றவர்கள் செயற்பட்டு இருக்கின்றார்கள். போர்க்களக் காட்சிகளையும் அக்காலத்தில் சமூக, அரசியல்தளங்களில் நடைபெறும் பதிவுகளையும், சலனப்படம் (vedio grapy) சலனமற்றபடங்கள் (photograpy) மூலம் பதிவுசெய்யப்படும் ஒழுங்கமைப்பு உருவாக்கப்பட்ட படங்கள் அரசியல் பரப்புரைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதற்காக நிதர்சனம் என்ற பெயரில் ஒருபிரிவு நிறுவனமாக இயங்கத்தொடங்கியது. இது பின்னர் புகைப்படப்பிரிவு என்ற இன்னொரு கிளைப்பிரிவையும் உருவாக்கியது.

நிதர்சனம் இயங்கத்தொடங்கிய போது அதன் முதற்பொறுப்பாளராக பரதன் செயலாற்றிய காலப்பகுதியில் அவருடன் இணைந்து கொண்டார் தவா. புகைப்படத்தையும், வீடியோப்படத்தையும் சிறப்பாக எடுப்பதில் தேர்ச்சி பெற்றவராகவும் இருந்தார். இந்தத்தேர்ச்சி பின்னாளில் அவரை முழுமையான களப் படப்பிடிப்பாளராகவும், களப்படப்பிடிப்புக்கு பொறுப்பாளராகவும் மாற்றியது.

தன்னுடைய 20 ஆண்டுகளுக்கும் மேலான போராட்டவாழ்வில் முக்கியமான போர்க்களங்களில் தவா படப்பிடிப்பாளராக நின்று இயங்கியுள்ளார். ஆனையிறவுப் பகுதியில் புலிகள் நடத்திய நில மீட்பு நடவடிக்கை, பூநகரி படைத்தளம் மீதான தாக்குதல், ஜெயசிக்குறு எதிர்ச் சமர், ஓயாத அலைகள் 1,2,3, கிளிநொச்சி, ஆனையிறவு மீட்பு நடவடிக்கைகள் என சகல களங்களிலும் தவா

https://tamileelamarchive.com/

நின்றிருக்கின்றார், தன்னுடைய கமராவுடனும் கமராவைக் கொண்டிருக்கும் அணிகளோடும். இதில் விடீயோப் படப்பிடிப்பிலேயே பின்னாளில் அதிகமாக தவா இயங்கினார். அப்படி இயங்கிய தவா நிதர்சனத்தின் ஒரு முகமாகவே மாறிவிட்டார். இந்தக் காலப்பகுதியில் நிதர்சனம் உருவாக்கிய குறும்படங்கள், வீடியோ மூலமான முழுநீளப்படங்களிலும் ஒளிப்பதிவாளராக செயற்பட்டார். அப்படியே தவா குறும்படங்களிலும் முழுநீளப்படங்களிலும் நடிக்கவும் தொடங்கினார். மேஜர் கிண்ணியின் பாத்திரத்தை ஏற்று 'இன்னும் ஒரு நாடு' என்ற படத்தின் முதன்மையாளராக நடித்திருந்தார்.

தவா நடித்த இறுதிப்படம் விடுதலை மூச்சு. அவர் தன்னுடைய இறுதிமூச்சை விடும்போது புதிய திரைப்படம் ஒன்றின் படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தார்.

போர்க்களத்திற்கு அண்மைய பகுதியில் நிகழ்ந்த அந்தப்படப்பிடிப்பின்போது இந்த துன்பநிகழ்வு சம்பவித்து. உருவாகும் படம் யதார்த்தமாக, மெய்க்காட்சிகளின் பதிவாகவும் வெளிப்பாடாகவும் அமையவேண்டும் என்ற விருப்பத்தோடும், நோக்கத்தோடும் போர்க்களத்திலேயே படப்பிடிப்பை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது அவர் சாவை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

திரையில் பல்லாயிரம் பார்வையாளருக்கான பார்வைப் பரம்பலை விரிப்பதற்காக தன்னுடைய உயிரைக்கொடுத்த ஒரு மூத்தபோராளியாக தவாவின் வரலாறு மாறிவிட்டது.

பொதுவாக போர்களப்படப்பிடிப்பில் ஊடகவியலாளர்கள் தமது நடவடிக்கையின்போது காயமடைவதும் கொல்லப்படுவதும் வழமை. ஆனால் இந்தமாதிரி திரைப்பட உருவாக்கத்தில் உயிரிழப்பு ஏற்படுவது அபூர்வம். அந்த அபூர்வத்தில் தவா கலந்துள்ளார்.

தவா எதிலும் பற்றற்ற தன்மையைக் கொண்ட ஒருவர் எளிமையானவர், எல்லோரிடத்திலும் பழகும் இயல்புள்ளவர், எவருக்கும் எப்போதும் உதவும் குணமுள்ளவர். தவாவைப்பற்றிச் சொல்வதானால் ஒளியை அவர் பயன்படுத்துவதில்லை எனலாம். தானே படிக்கல்லாகவும், ஒளியாகவும் நெகிழ்ந்து கொடுக்கும் ஒரு இயல்பையும் வாழ்முறையையும் கொண்டிருந்தார். இந்தக்குணத்தின் காரணமாக அவர் எப்போதும் இரண்டாம்நிலை ஆளாக ஒரு தாய்ப்பாத்திரமாகவே வாழ்ந்தார். முன்னிலைக்குப் போகும், போட்டியிடும் இயல்பு தவாவிற்கு ஒத்துவரவில்லை. அவர் கட்டளையிடுவதற்குப் பதிலாக கடமைகளைச் செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்.

அதனால் தவாவிற்கு மக்களிடத்திலும் போராளிகளிடத்திலும் அழியாத அன்பும், நட்பும், தோழமையும் நிறைந்திருந்தது. தவாவின் இந்த வழிமுறைக்கும் வாழ்விற்கும் அவருடைய குடும்பத்தின் பங்களிப்பு அதிகமாக இருந்திருக்கிறது. குறிப்பாக தவாவின் துணைவி எழில் இதில் உறுதியான நிலையிலான விட்டுக்கொடுப்பை தவாவின் செயற்பாட்டுகளிற்காக செய்திருக்கின்றார். அவரும் அவருடைய பிள்ளைகளும் அளித்த வெளியில்தான் தவா கணிசமான அளவிற்கு சுதந்திரமாக இயங்கினார். இது முன்னுதாரணம் நிறையக்கொண்ட ஒரு தியாகக்கதைதான். ஒருவகையில் உண்மை மனிதரின் கதை எனலாம். ■

# சில ஆன்மாக்களின் ஏக்கம்



எங்கள் பகல்களை ஆக்கிரமித்தபடி
இரவுகளையும் கொள்ளையடித்தபடி
திரியும் வெள்ளிவாய் பிசாசுகள்
எக்காளமிடும்
எங்கள் இதயத்தின் துடிப்பொலிகூடக்
கேட்டுக் கொண்டிருக்கும்
நடு இரவுகளில் யாருக்கும் தெரியாமல்
அவன் வருவான்.
எனக்கே தெரியாமல்
உண்ணப்பட்ட உணவிற்கான நன்றியை
வெறும் தட்டில் எழுதிவிட்டுப்
போயிருக்கிறான் பல தடவை
கடந்த சில நாட்களாய்
என் வீட்டுப் பின் முற்றத்தில்
அவனது பாதங்களின் அடையாளங்கள்
பதியவில்லை
இன்னும் எனக்கு சரியாய் பிடிபடாத
அந்த இளங்குருத்தின் முகம்
எப்போது மீண்டும் என் வீட்டில் மலரும்?
பயங்கர இரவுகளின் அமைதியை கிழித்தபடி
சீறும் சன்னங்கள் ஓரிரண்டு கூட
அவனுடையதாய் இருந்தால்
ஆனந்தப்படுவேன்.


என் மகனை
என் அக்காவின் மகளை,
பெரிய மாமாவின் மகளை,
சின்ன அன்ரியின் மகளை,
என் துணைவரின் மைத்துனனை
பக்கத்து வீட்டுக் குடும்பத்தை
சுட்டவர்களைச் சுட்டு
கடன் தீர்க்கும் பொறுப்பை
ஏற்றபடி வந்தவன் அவன்தானே.

வெற்றிச்செல்வி

https://tamileelamarchive.com/

சென்ற மாதத் தொடர்ச்சி...

# பாலை நிலப்பூக்களின் எதிர்காலம்



ஒடுக்கப்பட்ட தேசங்கள் மீதான அடக்கு முறையானது ஆயுத ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. ஆயுத ரீதியான ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடும் அதேவேளை நாம் பண்பாட்டு ரீதியிலான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது.

> ஒரு தேசத்தின் சுதந்திரமான, சுபீட்சமான சுதந்திரவாழ்வு; அத்தேசத்தின் எதிர்கால சந்ததியாக வளர்ந்து வரும் சிறுவர்களின் ஆளுமைப்பண்பிலும், அறிவியல் வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது.

ஒரு தேசத்தின் சுதந்திரமான, சுபீட்சமான சுதந்திரவாழ்வு; அத்தேசத்தின் எதிர்கால சந்ததியாக வளர்ந்து வரும் சிறுவர்களின் ஆளுமைப்பண்பிலும்.... அறிவியல் வளர்ச்சியிலுமே தங்கியுள்ளது. இல்லையேல் இன்றைய இளம் சந்ததியின் விடுதலைக்கான அர்ப்பணிப்பும், தியாகமும் அடுத்த சந்ததியினரால்

https://tamileelamarchive.com/



தோற்கடிக்கப்பட்டுவிடும்.

இந்த உண்மையை உணர்ந்து கொண்ட எதிரியானவன் விடுதலைக்காக போராடிவரும் தேசங்களில் அடுத்த சந்ததியான வளர்ந்துவரும் குழந்தைகளின் ஆளுமைப்பண்பையும் அறிவியல் வளர்ச்சியையும் பண்பாட்டு ரீதியாகவும் சீரழிக்க முயன்று வருகின்றான்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை முழுவதும் ஐரோப்பியரின் காலனித்துவ ஆட்சி நிலைநிறுத்தப்பட்டது. எமது சந்ததியினருக்கான கல்விமுறை உருவாக்கப்பட்டது. இலங்கைக்கான கல்விமுறையை உருவாக்க அமைக்கப்பட்ட குழுவுக்கு பிரித்தானிய அரசர் அவர்கள் 'அக்கல்வி முறையானது இன்னும் நூறு வருடங்களின் பின் இலங்கை மக்களை உள்ளத்தால் வெள்ளையராகவும் உருவத்தால் இலங்கையராகவும் ஆக்க வேண்டும்' எனப் பணித்தார் என ஓர் தகவல் உண்டு. இப்பணிப்பின் விளைவை இன்று நாம் யதார்த்தமாகப் பார்க்கிறோம்.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்தால் எமக்கு தரப்பட்ட கல்வி முறையானது. எமது பிள்ளைகளை உத்தியோக மோகம் கொண்டவர்களாக ஆடம்பர ஆசைகள் நிறைந்தவர்களாகவே பெரும்பாலும் ஆக்கி வருகின்றது. எமது தேசத்தைப் பற்றியோ, எமது கலாச்சார விழுமியங்கள் பற்றியோ, எந்த விதமான அக்கறையையும் எமது பிள்ளைகள் மனதிலே இக்கல்வி ஏற்படுத்தவில்லை.

ஒரு தடவை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஓர் உளவியல் அறிஞர் எமது சிறுவர்களைப் பற்றி பேசும்போது "அன்பான பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் ஏதாவது படிக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால் தயவுசெய்து பாடசாலைக்கு அனுப்பாதீர்கள்... அங்கு அவன் எதையுமே கற்றுக்கொள்ள மாட்டான். வேண்டுமென்றால் விபச்சார வீட்டுக்கு அனுப்புங்கள் அங்கே அவன் விபச்சாரம் எவ்வளவு மோசமானது என்பதை கற்றுத்தேறி வருவான்.." எனக் கூறினார். இக்கருத்தின் உண்மையை நாம் இன்று கிராமப்புறங்களில் வாழும் வறிய பிள்ளைகள் மத்தியிலே பார்க்கிறோம்.

தொடர் வகுப்பேற்றத்தின் மூலம் O/L வரை வேகமாகச் செல்லும் எமது மாணவர்களுக்கு இறுதியில் ஓர் தேர்வை நடாத்தி 'இவன் தேறவில்லை' எனக் கண்டுபிடித்து வெளியே தள்ளிவிடுகிறார்கள். ஒரு மாணவன் அறிவு மட்டத்தில் கீழே இருக்கின்றான் என்பதைக் கண்டுபிடிக்க எமது பாடசாலைக்கு 11 வருடங்கள் தேவைப்படுகின்றது.

> இலங்கைக்கான கல்விமுறையை உருவாக்க அமைக்கப்பட்ட குழுவுக்கு பிரித்தானிய அரசர் அவர்கள் 'அக்கல்வி முறையானது இன்னும் நூறு வருடங்களின் பின் இலங்கை மக்களை உள்ளத்தால் வெள்ளையராகவும் உருவத்தால் இலங்கையராகவும் ஆக்க வேண்டும்' எனப் பணித்தார் என ஓர் தகவல் உண்டு. இப்பணிப்பின் விளைவை இன்று நாம் யதார்த்தமாகப் பார்க்கிறோம்.

பாடசாலையில் 11 வருடங்களை வீணாக்கிவிட்டு வெளியேவரும் எமது பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் உலகத்தைத் தெரியாமல் வாழ்வைப் புரியாமல் தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகித் தவிக்கின்றார்கள். எதிர்கால உலகின் நம்பிக்கைச் சூரியன்களான எமது குழந்தைகளின் மனமும், மூளையும் இருட்டுக்குள் தள்ளப்படுகின்றன.

இயல்பூக்கங்கள் மறுக்கப்பட்டவர்களாக சமூகக் கூட்டையும் உழைப்பையும், வெறுப்பவர்களாக, சொந்தத் தாய்மண்ணில் பற்றில்லாதவர்களாக, எதிர்கால வாழ்வுக்கு கொஞ்சமும் தகுதியற்றவர்களாவே, பெரும்பான்மையான சிறுவர்கள் வளர்ந்துவர வர்த்தகப் பண்பாட்டால் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இந்த மோசமான சூழலில் இருந்து எமது சிறுவர்கள் உடனடியாக மீட்கப்பட வேண்டும். இல்லையேல் விடுதலை பற்றிய எமது கனவுகளும் அதற்காகச் செய்யப்படும் அளப்பரிய தியாகங்களும் எதிர்காலத்தில் வீணாக்கப்பட்டு விடும் என்பதற்கு உலக வரலாற்றில் பல உதாரணங்களை நாம் காணலாம்.

உரிமைபெற்று அந்த உரிமையை உறுதியுடன் காத்து உலக வரலாற்றில் உயர்ந்து நிற்கும் ஓர் உன்னதமான தேசத்தில் வாழும் மக்கள் சமூகம் உயர்ந்த தலைமைத்துவப்பண்பைக் கொண்டவர்களாகவும், தேசியத்திற்கான சிறந்த கல்வியறிவையும் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் ஓர்சிறந்த விடுதலை வாழ்வை எமது மண்ணில் நாம் உருவாக்கி அதைப் பாதுகாக்க முடியும்.

தலைமைத்துவப்பண்பு என்பது சமூகப்பணியின் அடிப்படையில் எழுகின்ற ஓர் அறிவியல் சார்ந்த பண்பாகும். அன்பு, பாசம், பண்பு, சமூகநேசம், கூட்டுச்செயற்பாடு, விட்டுக்கொடுப்பு, பிறர்உரிமையை மதித்தல், பிறருக்காகத் தன்னை அர்ப்பணித்தல் போன்ற உன்னத விழுமியங்களை உள்ளடக்கியதே தலைமைத்துவப் பண்பெனக் கொள்ளப்படுகின்றது. மேற்படி தலைமைத்துவப் பண்புதான் மனித சமூகத்தின் சிறப்பான வாழ்வுக்குரிய அடிப்படையாய் உள்ளது.

இந்த உலகத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் தலைமைத்துவப் பொறுப்புடையவனாகவே உள்ளான். சிலர் தேசத்துக்கு தலைமை தாங்குகின்றார்கள். சிலர் தம்மைச் சுற்றியுள்ள சமூகத்துக்குத் தலைமை தாங்குகின்றார்கள். இன்னும் சிலர் துறைசார்ந்த பொறுப்புக்களை ஏற்று அதை வழிநடத்திச் செல்கின்றார்கள். ஆனால் இந்த மண்ணிற் பிறந்த அனைவரும் தமது வாழ்வுக்கு அடிப்படையாய் விளங்கும் குடும்பம் என்ற அலகுக்குத் தலைமைதாங்கியே ஆகவேண்டும் என்பது வாழ்வியல் சார்ந்த அடிப்படை விதியாய் உள்ளது.

சிறந்த குடும்பங்கள் ஒன்றிணையும் போதுதான் உயர்ந்த சமூகம் உருவாகின்றது. உயர்ந்த சமூகம் ஒன்றிணையும் போதுதான் சிறப்புமிக்க தேசம் உருவாகின்றது. எனவே ஓர் உன்னத தேசத்தை நாம் உருவாக்க வேண்டுமெனில் சிறந்த தலைமைத்துவப்பண்பு கொண்ட மனிதர்களை நாம் உருவாக்க வேண்டும். தலைமைத்துவப் பண்பின் விருத்திக்கு அடிப்படையாய் விளங்கும் அறிவுத்துறையில் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

கல்லாயுதத்துடன் தனது அறிவியல் வளர்ச்சியை ஆரம்பித்த மனித

https://tamileelamarchive.com/

சமூகத்தைக் கம்பியூட்டர் யுகத்தை நோக்கி வளர்த்துச் சென்றதில் பல்வேறு காரணிகள் சம்மந்தப்பட்டிருந்தபோதும் நாடகம் ஓர் அடிப்படைக்காரணியாக இருந்தது என்பதைச் சரித்திர வாயிலாக நாம் அறியக் கூடியதாக உள்ளது.

வேட்டையாடித் தமது வாழ்வை நடத்திய மக்கள்கூட்டம் கூடியிருந்து வேட்டையாடிய முறையை நிகழ்த்திக் காட்டியதில் இருந்து ஆரம்பமான அரங்கச் செயற்பாடு சமயச்சடங்குகள் ஊடாக வளர்ந்து இன்று ஓர் சிறந்த கல்வியூட்டும் சாதனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

கூடியிருந்து ஆடிப்பாடி போலச்செய்து மகிழும் கலைத்துவச் செயற்பாடானது பரந்துபட்ட மக்களின் மனங்களிலே மாபெரும் களிப்பை ஏற்படுத்துவதோடு மக்கள் சமூகத்தின் ஆளுமை விருத்தியிலும் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. அப்படியானால் இன்றைய வர்த்தகப் பண்பாட்டுக்கலைகள் எமது சந்ததியின் ஆழுமையை விருத்தி செய்ய எதற்காக மறுக்கின்றன...

'கலை என்பது உணர்ச்சிக்கூறு, அறிகைக்கூறு என இரு கூறுகளை உள்ளடக்கியுள்ளது. இன்றைய முதலாளித்துவ சமூக அடக்கு முறையாளர்கள் உணர்ச்சி அம்சத்தை மட்டுமே கலையின் இலக்கணமாக முதன்மைப்படுத்தி, அதனை விற்பனைப்பண்டமாக்கி மக்கள் மனதைச் சீரழிக்கின்றார்கள். இதன் விளைவாகச் சமுதாயத்தின் அறிகைக் கூறும் அதன் சமுதாயத் தொடர்பும் புறக்கணிக்கப்பட்டு மனிதரின் இயல்பூக்கத்தை மட்டுமே திருப்பதிப்படுத்தும் ஒன்றாக அடக்கு முறையாளர்களால் கலை மாற்றப்பட்டுள்ளது' என உலகப்புகழ்பெற்ற இலக்கிய ஆய்வாளர் 'கோட்வெல்' அவர்கள் கூறிய கருத்தே மேற்கூறப்பட்ட கேள்விக்கான தெளிவான பதிலாய் உள்ளது.

கலையின் ஓர் அம்சமான அறிகைக் கூறினை அடக்குமுறையாளர்கள் புறக்கணித்துவிட்டு எமது சிறுவர்களின் இயல்பூக்க உணர்ச்சிக்கூறுகளை மட்டும் கலைத்துவம் என்ற உயர்மகுடத்துடன் தமிழ்ச் சினிமாக்களாகத் தயாரித்து வருகின்றார்கள் இந்த சினிமாக்கள் சின்னத்திரைகள் மூலம் வீட்டுக்குவீடு காண்பிக்கப்படுகின்றன. இவ்வாறு காண்பிக்கப்படும் மோசமான சினிமாக்களால் எமது குழந்தைகளின் இயல்பூக்க உணர்வுகள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டு... அவர்களது ஆளுமைவிருத்திக்கு அடிப்படையாய் விளங்கும் அவர்களது கூடிவாழும் உயர்விழுமியம் படிப்படியாகச் சிதைக்கப்பட்டு வருகின்றது. இதனால் எமது குழந்தைகளின் உளரீதியான பண்பாட்டு வளர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் மிகமோசமாகப் பாதிக்கப்படுகின்றது.

குழுவாகச் சேர்ந்து வன்முறையில் ஈடுபடல், போதைவஸ்துப் பாவனை, ஒழுங்கற்ற பாலுணர்வு, தன்னைமுதன்மைப்படுத்தல், பெரியோர் சொற் கேளாமை, சமூகத்தில் பற்றின்மை, பிறர்நேசம்கொள்ளாமை, தேசத்தில் நேசமின்மை, உழைப்பை மதியாமை என வாழத்தகுதியற்றவர்களாகவும், வாழ்வுக்குரிய ஆதாரங்களைத் தேடிப்பாதுகாக்கும் வல்லமை அற்றவர்களாகவுமே வளர்ந்து வருகின்றார்கள்.

"அப்பாவை ஏசலாம், என் அம்மாவை ஏசலாம், என் குடும்பத்தை ஏசலாம், ஊரிலுள்ள யாரை வேணுமெண்டாலும் ஏசலாம், அது எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் என் அபிமானத்துக்குரிய சினிமா நடிகனை ஏசினால் நான் கொலைகாரனாக மாறிவிடுவன" - இது ஒரு 13 வயதுச் சிறுவன் பேசிய வசனம். இப்படித்தான் வெறும் உணர்ச்சிக்கூறுகளை மட்டும் உள்ளடக்கிய சினிமாக்கள் எங்கள் குழந்தைகளை உருவாக்க முயன்றுவருகின்றன.

மனித சமூகத்தின் உன்னதமான வளர்ச்சியில் பெண்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் மிக்கதாய் உள்ளது. நாளைய சந்ததியின் ஆரோக்கியமான உருவாக்கம் தாயின் கருவிலும் அவள் மடியிலுமே ஆரம்பமாகின்றது என அறிஞர்கள் கூறுகின்றார்கள். அன்பை, பண்பை, கலாச்சாரத்தை வளர்ப்பவர்களாகப் பெண்களே உள்ளார்கள். இது இயற்கை அவர்களுக்கு வளங்கிய கொடை என்றே சொல்லவேண்டும்.

நாளைய பெண்களாக வளர்ந்துவரும் இன்றைய சிறுமிகள் எப்படி வளர்ந்து வருகின்றார்கள் என்பதை விடுதலையை நேசி[illegible]ும் அனைவரும் மிக ஆழமாகச் சிந்[illegible] வேண்டியுள்ளது.

அன்பையும் பாசத்தையும் அறியாதவர்களாக, ஆடம்பரமோகம் கொண்டவர்களாக, வெறும் அழகுப் பதுமைகளாக, எரிச்சலும் பொறாமையும் தன்முக்கியத்துவ உணர்வும் உடையவர்களாக, குடும்பம் என்ற சிறிய வட்டத்துக்குள் தமது சிந்தனையைச் சுருக்கிக் கொண்டவர்களாக, வெறும் பாலியல் இயந்திரமாகத் தம்மை கருதிக்கொண்டு வளர்ந்து வருகின்றார்கள்.

பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் பாடசாலைக்கல்வியை எமது பெண்கள் பெற்று விட்டால் விடுதலைபெற்ற பெண்களாக வளர்ந்துவிடுவார்கள் என்றே பலரும் கருதுகின்றார்கள் ஆனால் யதார்த்தம் இக்கருத்தை மறுதலித்துள்ளதையே நாம் காண்கின்றோம்.

பாடசாலைக்கல்வி பரீட்சையை மையப்படுத்திப் பாடப்புத்தகங்களோடு மட்டும் சுருக்கப்பட்டுள்ளதால் எமது சிறுமிகளின் உள வளர்ச்சியையும், பண்பாட்டு முதிர்ச்சியையும், வர்த்தகப்பண்பாட்டைச் சுமத்திவரும் சினிமாக்களும், ரமணிச்சந்திரன் போன்றவர்களின் நாவல்களுமே தீர்மானிக்கின்றன.

இவ்வாறு ஒரு ஆபத்தான நுகர்வுக்கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டுவரும் சிறுவர், சிறுமிகளது உள ஆரோக்கியத்தை மேம்படுத்தி அவர்களது ஆளுமையை விருத்திசெய்து நாளை மலரப்போகும் எங்கள் சுதந்திர தேசத்தில் மனித விழுமியங்களைப் பாதுகாத்துவாழும் சுதந்திர மனிதர்களாக எமது சந்ததியினரை உருவாக்கவேண்டியது இன்றைய விடுதலைப் போராட்டத்தின் மாபெரும் கடமையாக உள்ளது.

ஊடகங்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ள இன்றையசூழலில் எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வுக்கான உளப்பங்கை உருவாக்குவதில் ஊடகங்களே முக்கியபங்கை ஆற்றிவருகின்றன. குறிப்பாக சினிமாவும் நாடகமும் முழுமக்களையும் சென்றடையும் ஊடகங்களாகவே தொடர்ச்சியாக உள்ளன.

எந்தக்கலையால் எமது சிறுவர்களின் எதிர்காலம் சீரழிக்கப்படுகின்றதோ அதேகலையால் எமது சிறுவர்களது வாழ்வை மேம்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஏழை அரங்கான நாடகஅரங்கை நாம் தேர்வுசெய்துள்ளோம். அடக்குமுறையாளர்களின் கலைகளால் புறக்கணிக்கப்பட்ட 'அறிதல்' என்ற விடயத்தை அரங்க ஆற்றுகையில் முதன்மைப்படுத்திக்கொண்டு சிறுவர்கள் மத்தியிலே நாம் சென்றுள்ளோம்.

தொடரும்...

https://tamileelamarchive.com/

# தமிழீழத் தேசியத்தின் அடிப்படைகள்

நா.யோகேந்திரநாதன்

இன்று உலகமாதல் என்ற பயங்கரப் பூதம் சகல நாடுகளையும் நோக்கித் தன் கரங்களை விரித்து விட்டது. நவீன மயமாதல் என்ற ஈர்ப்பு விசையினால் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டிருந்த நாடுகள் கூட உலக மயமாக்கலில் உள்ளிழுக்கப்படுகின்றன. வெளிப்படையில் இந்த உலகமாறல் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட போதிலும் இதன் பின்னால் கண்ணுக்குத் தெரியாத விதத்தில் அரசியல் இராணுவ வியூகங்கள் ஆட்சி செலுத்துகின்றன.

உலகமயமாதல் என்பது உலக நாடுகளின் முழுப் பொருளாதாரத்தையும் ஒரு உலகப் பொதுச்சந்தையின் கீழ் கொண்டு வருவதாகும். ஆனால் உலகப் பொதுச் சந்தை எனப் பெயரளவில் கூறப்பட்ட போதிலும் இது அடிப்படையில் அமெரிக்காவினதும் அதனுடன் இணைந்த வல்லரசு நாடுகளினதும் மேலாண்மைக்கு உட்பட்ட ஒருகட்டமைப்பாகும் இவ்வகையில் அமெரிக்காவினதும் ஏனைய பொருளாதார வல்லரசுகளினதும் நிறுவனமயப்படுத்தப்பட்ட வடிவங்களாக பல் தேசிய நிறுவனங்கள் விளங்கி வருகின்றன. இந்நிறுவனங்களின் செயற்பாடுகள் தேசங்களின் குறிப்பாக வளர்முக நாடுகளின் மூலவளங்களையும் மனித உழைப்பையும் தமது நலன்களுக்கு அமைவாகப் பயன்படுத்தப்படுவதும் சகல நாடுகளின் மக்களையும் தமது உற்பத்திப் பொருட்களின் நுகர்வோராக மாற்றுவதுமாகும். இவற்றை நிறைவேற்றுவதாயின் தேசியத்தினதும் தேசிய இனங்களினதும் தனித்துவங்கள் உடைக்கப்பட வேண்டும். அதாவது தேசங்களினதும், தேசிய இனங்களினதும் வாழ்நில எல்லைகள். மொழிப்பாவனை, பாரம்பரிய கலாச்சாரப் பழக்க வழங்கங்கள், பொருளாதாரத் தனித்துவங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டு உலக மயமாக்கலுக்கு இசைவாக வடிவமைக்கப்படுவதாகும். இதற்கான அரசியல் சூழலை உருவாக்கும் வகையிலும், தக்கவைக்கும் முறையிலுமே போர்களும் போராட்டங்களும் உலக வல்லாதிக்க சக்திகளால் கையாளப்படுகின்றன. அப்படிக் கையாள முடியாத நெருக்கடிகள் எழும் போது அவையே போரில் நேரடியாக இறங்குகின்றன.

இன்றைய கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்பயுகத்தில் மின்சாரமும் எரிபொருளும் ஏனையவற்றிலும் பார்க்க பிரதான தேவைப்பொருட்களாக இருக்கின்றன. அதேபோன்று உலோக கனிம மூல

> **உலக மயமாக்கலின் அடுத்த இலக்கும் பிரதான இலக்கும் பொருளாதாரமாகும்.**

வளங்களும் அவசியமான பொருட்களாகின்றன. இவற்றை இங்கு தடையின்றி பெறுவதற்கு ஏற்ற அரசியல் சூழ்நிலை வளர்முக நாடுகளில் நிலவ வேண்டும். அப்படியான தமது தேவைகளை நிறைவேற்ற அமைவாக வல்லாதிக்க சக்திகள் தேசங்களினதும் தேசிய இனங்களினதும் வாழ்நில எல்லைகளை மாற்றவோ அல்லது தமக்குச் சார்பானவர்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரவோ முயற்சிக்கின்றன. அதாவது ஒரு தேசத்திற்கானதோ தேசிய இனத்திற்கானதோ தாயக நிலப்பகுதியின் ஆள் புலப்பகுதியின் தனித்துவம் இல்லாமல் செய்யப்படுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வகையிலேயே எமது தேசிய தனித்துவத்தை சிதைக்கும் முதல் முயற்சியாக 1950ம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்லோயா சிங்களக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்புத் திட்டம் என்ற பெயரின் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மேற்கு நாடுகள் தாராளமான பொருளாதார உதவிகளை வழங்கிய தன் மூலம் தமிழர் தாயகத்தின் தனித்துவத்தைச் சிதைப்பதில் சர்வதேசப் பங்களிப்பை வழங்கின. இதையடுத்து பாவற்குளம், பதவியா, மாமடு, மடுக்கந்தை என வவுனியா மாவட்டமும் கந்தளாய், சேருவில என திருமலை மாவட்டமும் மணலாறு மாவட்டத்தின் பல பகுதிகளும் மட்டக்களப்பிலிருந்து அம்பாறை பிரிக்கப்பட்டும் எமது தாயகப்பகுதி சிங்களக் குடியேற்றங்களால் நிறைக்கப்பட்டன. இதன் மூலம் தமிழர் தாயகத்தின் நிலத் தனித்துவம் கேள்விக் குறியாக்கப்பட்டது.

இன்று எமது மூலவளங்களையும் மனித உழைப்பையும் சிங்களத்தினூடாக உலக வல்லாதிக்க சக்திகள் கொள்ளையடிக்கும் வகையில் எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்க முடியும்.

உலகமயமாக்கலின் அடுத்த இலக்கு மொழி. உலக வர்த்தக வலைப்பின்னலுக்குள் நாம் உள்ளிழுக்கப்படுவதற்கு ஒரு பொது மொழி அவசியமாகிறது. எனவே எமது விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம், வர்த்தகம் போன்றவற்றின் கல்வி ஒரு பொது மொழியூடாகவே பெறப்பட வேண்டியுள்ளது. அப்படிப் பெறப்படும் போதே உலக வர்த்தகத்தின் தேவைகளிற்கு நாம் பயன்பட முடியும். நவீன முன்னேற்றத்துடன் இணைவது என்ற பெயரில் சகல விதமான கல்விகளிலும் ஆங்கிலமே மேலாதிக்கம் செலுத்தும் நிலை எழுகிறது. அதன் மொத்த விளைவு எமது தேசிய மொழிகளின் விஞ்ஞான தொழில் நுட்ப மருத்துவ ஏன் கலை இலக்கிய வளர்ச்சிகள் கூட மங்கி சரமுற்றுப் போகின்றது.

இவ்வகையில் 1956ல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் மூலம் எமது மொழிக்கான அந்தஸ்த்து சிங்களத்தால் மறுக்கப்பட்டது. அதேவேளையில் சிங்களம் தனது தனித்துவத்தைப் பேணியதுடன் தனது மொழியை வளர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தி செயற்பட்டது. அரசு அலுவல்கள் உட்படப் பல வழிகளிலும் சிறிலங்கா அரசு தமிழ்மொழியைப் புறக்கணித்து வருவதால் எமது மொழியின் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் வலிந்து பறிக்கப்படுகின்றன. அதே வேளையில் தமிழ் மக்களின் மேல்நாட்டினரிடம் நிலவி வரும் ஆங்கில மோகமும் எமது மொழியின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் தடையாக விளங்கி வருவது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

எம்மில் பலர் இன்று வரையும் கூட ஆங்கிலத்தில் உரையாடுவதும் ஆங்கிலம் தெரிந்து கொண்டவர்களாக காட்டிக் கொள்வதிலும் பெருமைப்படுமளவிற்கு எங்களில் பலரிடம் இன்றும் அடிமைப்புத்தி உண்டு என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். விஞ்ஞானம், தொழில் நுட்பம், மருத்துவம், கலை இலக்கியம் போன்ற துறைகளில் எமது மொழியைப் புதிய பரிமாணங்களில் வளர்த்தெடுப்பதில் நாங்கள் எவ்வளவு தூரம் அக்கறை செலுத்துகின்றோம் என்பது கேள்விக்குரியபிரச்சினை தான். மொழிவளர்ச்சியென்பது மொழியின் பாரம்பரிய பெருமையைப் பற்றி பேசிப் பேசி காலம் கழிப்பதோ காலமாற்றத்திற்கேற்ப மொழியில் ஏற்படும் வளர்ச்சியைத் தடுத்து உறைநிலையில் வைத்திருப்பதோ அல்ல.

உலக மயமாக்கலின் அடுத்த இலக்கு கலாச்சாரம். கலாச்சாரம் என்பது எமது உணவு, உடை, பழக்கவழக்கங்கள், கலை, இலக்கியங்கள் என்பனவற்றை உள்ளடக்கி

https://tamileelamarchive.com/

பதாகும். தேசிய இனங்களின் கலாச்சார தனித்துவங்கள் உலக மயமாதலின் பிரதான தடைக்கற்களாக உள்ளன. உதாரணமாக கோதுமை, தேயிலை என்பன எமது உணவுப்பழக்க வழங்கங்களில் வலிந்து புகுத்தப்பட்டவையாகும். இன்று அவை இல்லையேல் உயிர் வாழ முடியாது என்னுமளவிற்கு நாம் அவற்றின் நிரந்தர நுகர்வோராகிவிட்டதுமின்றி நாம் பிறரில் தங்கி நிற்குமளவிற்கு நிலை தாழ்ந்து விட்டோம். எமது உடைப்பாவனைகளில் கூட இதே நிலைதான். விளையாட்டுக்கள் கலை, இலக்கியங்கள் என்பவற்றில் கூட அதே நிலைதான். எமது பாரம்பரிய விளையாட்டுக்கள், கலைகள், இசைக்கருவிகள் மெல்ல மெல்ல வழக்கொழிந்து போக மேற்கு காற்று எங்களை மூழ்கடிக்கும் நிலை தோன்றி விட்டது. முரசு என்று ஒரு காலத்தில் பெருமைப்படுத்தப்பட்ட பறை எம்மிடம்மிருந்து மெல்ல மெல்ல மறைந்து கொண்டு போக 'பான்ட்' வாத்தியம் ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகி வருகிறது. இதில் அடிப்படை விசயம் என்னவெனில் எமது கலாச்சார தனித்துவம் அழிக்கப்பட்டு நாம் வெளிநாட்டுப் பொருட்களின் நுகர்வோராக மாற்றப்படும் அபாயம் ஏற்படுகிறது.

அதற்காக காலச்சாரம் என்பது உறை நிலையிலேயே இருக்க வேண்டும் எனக் கருதி விடக்கூடாது. எமது தனித்துவமான கலாச்சாரம் காலமாற்றத்திற்கேற்ப வளர்ச்சி பெற வேண்டும். ஆனால் இன்னொரு கலாச்சாரத்தால் ஆக்கிரமிக்ப்பட்டு சீரழிக் கப்படக் கூடாது. உதாரணமாக பறை மேளத்தை நவீன மயப்படுத்தி புதிய தாளக் கட்டுக்களை அமைத்து கால வளர்ச்சிக் கேற்ப புனரமைக்கலாம். ஆனால் அதைத் தூக்கி எறிந்து விட்டு அதற்குப் பதிலாக இன்னொரு வாத்தியத்தை பாவிக்கக் கூடாது. இவ்வகையில் எமது கலாச்சார தனித்துவத்தை சீரழிப்பதில் வல்லாதிக்க சக்திகள் தீவிரமாகச் செயற்படும் இதற்கு தொடர்பு சாதனங்கள், ஊடகங்கள், சினிமா போன்றவை முழு அளவில் பாவிக்கப்படும்.


உலக மயமாக்கலின் அடுத்த இலக்கும் பிரதான இலக்கும் பொருளாதாரமாகும். ஐரோப்பியரின் வருகையின் முன்பு எமது தாயகப் பிரதேசம் ஒரு சுயதேவைப் பூர்த்தி கிராமியப் பொருளாதார அமைப்பையே கொண்டிருந்தது. இது மாற்றியமைக்கப்பட்டு கொழும்புச் சந்தையை மையமாகக் கொண்டு எமது பொருளாதாரம் தங்கு நிலைக்கு மாற்றப்பட்டது.

குரக்கன், தினை, பனம் பொருட்கள் என்பனவற்றின் உற்பத்தி நலிவடைய புகையிலை, மிளகாய், வெங்காயம் என்பன பிரதான உற்பத்திகளாகின. அதாவது எமது உற்பத்திகள் கொழும்பை நம்பிய உற்பத்திகளாகவே அமைந்தன. இதே போல் கோதுமைப் பாவனையும் எம்மை பொருளாதார ரீதியிலும் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிய நிலையை உருவாக்கி உள்ளது.

அதாவது எமது சுய தேவைப் பூர்த்திப் பொருளாதாரம் ஏற்கனவே அழிக்கப்பட்டு ஒரு தங்கு நிலை பொருளாதாரத்திற்குள் உள்ளிழுக்கப்பட்டது. இது வளர்முக நாடுகளில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்ட போதிலும் இன்றைய உலக மயமாக்கலின் பின் இது தீவிரமாக்கப்பட்டுள்ளது.

ஒரு தேசத்தினதோ தேசிய இனத்தினதோ தேசியம் என்பது ஒரு பாரம்பரிய நிலப்பகுதி ஒரு தனித்துவமான மொழி, ஒரு தனித்துவமான கலாச்சாரம், ஒரு பொதுப் பொருளாதாரம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும், இன்றைய உலக மயமாக்கல் இவையை அழிப்பதன் மூலமே உலகம் முழுவதையும் ஒரு பொதுவான உலகச் சந்தையுடன் பிணைக்க முடியும். எனவே தேசியத் தனித்துவங்களை அழிப்பதில் பல்வேறு வழிகளிலும் உலக மேலாதிக்க சக்திகள் செயற்படும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே தேசிய விடுதலைப் போராட்டம் என்பது நிலமீட்பு என்ற மட்டத்திற்குள் மட்டும் அடங்கி வருதில்லை. எமது மொழி, கலாச்சாரம், பொருளாதாரம் என்பனவற்றின் தனித்துவங்களைப் பாதுகாப்பதற்கான போராட்டமும் சமகாலத்தில் மேற்கொள்ளப்படும்.




https://tamileelamarchive.com/













இந்தியாவின் ஆயுத உதவியைக் கண்டித்து
தென்னாபிரிக்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்



https://tamileelamarchive.com/










படுகொலைசெய்யப்பட்ட மாமனிதர் சிவநேசனின் நினைவு சுமந்து சுவிஸ் தமிழர்கள் ஐநா முன்றலில் நடாத்திய கவனயீர்ப்பு ஒன்றுகூடல்



https://tamileelamarchive.com/

திருமதி பு.தயாநிதி | வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய்.

# வட தமிழீழத்தின் தமிழர் ஆட்சியும், மாட்சியும்



தமிழ் மன்னர்கள் தமிழீழத்தின் வடபகுதியை ஏறத்குறைய 09 நூற்றாண்டுகள் ஆட்சிசெய்து தமிழரின் மாட்சிமையை நிலை நாட்டினார்கள் என தமிழ், சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வட தமிழீழத்தில் தமிழ் மன்னர்கள் மாட்சிமை நிறைந்த ஆட்சி செய்தமைக்கான சான்றுகள் அகழ்வாராட்சிகளின் போது தொல்லியல் ஆய்வாளர்கள் மூலமும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

நல்லூர் இராசதானி - சங்கிலியன் தோப்பு

https://tamileelamarchive.com/

பண்டைய இலங்கையின் வடபெரும் பகுதி நாகதீபம் எனவும் தென்பெரும்பகுதி தாமிரபரணி எனவும் இரண்டு புவியியல் அலகாக விளங்கின. கதம்பநதி எனப்படும் அருவியாற்றுக்கும் நாகபொக்கண திரி கூடம் எனும் பகுதிக்கும் வடக்கேயுள்ள பிர தேசம் நாகதீபம் எனப்பட்டது. நாகதீபகத் தில் யாழ்ப்பாணக்குடாநாடு, அயல்தீவுகள், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளி நொச்சி முதலான பிரதேசங்கள் அமைந் திருந்தன. கதம்பநதியை இணைக்கும் தென்புற வளைகோட்டிற்குத் தெற்கே பரந்து கிடக்கும் இலங்கையின் நிலப்பரப்பு தாமிரபரணி எனப்பட்டது.

இலங்கையின் வடபாகமான நாகதீவில் நாகர் எனப்பட்ட இனத்தவர் வாழ்ந்து வந்த னர். தென்பகுதியின் தாமிரபரணியில் இயக் கர் எனப்படும் இனத்தவர் வாழ்ந்து வந்த னர். இங்கு இரு இனத்தவரினதும் ஆதிக் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் தந்தை வழி சமூக அமைப்பின் வழிமுறைப்படி ஒவ் வொரு தலைவன் ஆட்சிப்பொறுப்பை ஏற் றிருந்தான்.

கி.மு 483ஆம் ஆண்டு தாமிரபரணியில் வந்திறங்கிய விஜயனும் அவனது 700 தோழர்களும் இயக்கர் குலத்தலைவி குவேனியின் துணையுடன் இயக்கர் குலத்தை அழித்து ஒழித்தான். குவேனி என்ற இயக்கர் பெண்ணின் காதல் போதை யால் செய்த தவறால் விஜயனும் அவனது தோழர்களும் தாமிரபரணியில் குடியேற் றங்களை அமைத்து தமது பெயரை அக் குடியேற்றங்களுக்கு சூட்டி விஜயனே இலங்கையின் முதலாவது மன்னனாக முடி புனைந்து கொண்டான். முடிசூடும் முன் பாண்டி நாட்டிலிருந்து தனது அரசியாக பாண்டிய இளவரசியையும் 700 தோழர் களுக்கு பாண்டிய இராச்சிய பெண்க ளையும் அழைத்து மணந்து கொண்டனர். குவேனியையும் அவனது இரண்டு பிள்ளை களையும் மகியங்கனை காட்டிற்குள் துரத்தி விட்டனர். அவர்களே இன்றைய வேடர் களாக உள்ளனர். வடக்கே நாகதீபத்தை கைப்பற்ற விஜயனால் முடியாது போய் விட்டாது.

கி.பி 795 ஆம் ஆண்டு விஜயராஜன் மரபில் பிறந்த உக்கிரசிங்கன் என்னும் தமிழ் மன்னன் சிங்களவர்களுக்கு எதிராக பெரும்போர் ஒன்றை நடத்தி வடதமிழீ ழத்தை கைப்பற்றி கதிரமலையைத் தலை நகராகக் கொண்டு அரசாட்சி செய்தான். உக்கிரசிங்கன் அரசாட்சிக்காலத்தில் சிற்ற ரசுக்காலமாகும். உக்கிரசிங்கன் ஆட்சி செய்த காலத்தில் சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி என்பவள் தீர்த்த யாத்திரைக்காக கீரிமலைக்கு வந்தபோது அவளை திருமணம் செய்து கொண்டான். அத்துடன் மாவட்டபுரம் என்ற முருகன் ஆலயத்தைக் கட்டுவித்து அக்கோயிலுக் குரிய விக்கிரகங்களை இந்தியாவிலிருந்து கொண்டு வந்தான். என யாழ்ப்பாண வைப வமாலை கூறுகின்றது.

அதன் பின்னர் உக்கிரசிங்க மன்னன் தலைநகராக இருந்த கதிரமலையை விட்டு சிங்கை நகருக்குத் தலைநகரை மாற்றி னான். சோழருக்கு சமீபமாக அமைத்த வடகரையில் தலைநகரைக்கட்டி வல்லிபுரம் எனப்பெயரும் இட்டான். இவ்வாறாக உக் கிரசிங்கமன்னன் கி.பி 850 ஆம் ஆண்டு முதிர்வயதுவரை ஆண்டபின் அவர் மகன் வாலசிங்க மன்னனுக்கு அரசாட்சி கொடுக் கப்பட்டது. அவர் ஆட்சி செய்யும் காலத் தில் பாணகுலத்தவனான குருடன் ஒருவன் அரசனைப் பாராட்டி யாழ் வாசித்து கவி பாடினான் இதனால் அரசன் மகிழ்ச்சி யடைந்து கரையூர், பாசையூர் என்ற மலை மேட்டை பரிசாகக் கொடுத்தான். யாழ்பாடி மகிழ்ச்சியுடன் சென்று சோழ நாட்டிலிருந்து தனது ஊர்வரையும் அழைத்து காடுகளை அழித்து மக்களைக் குடியேற்றினான். அக்குடியேற்றப்பட்ட இடத்திற்கு யாழ்ப்பா ணம் எனப் பெயரும் சூட்டினான்.

தமிழரசின் ஆரம்பத் தலைநகராமான சிங்கைநகரிலிருந்து வாலசிங்கமன்னன் வட தமிழீழத்தை ஆண்டான் இச்சிங்கை நகர் வல்லிபுரம் பகுதியிலேயே இருந்த தெனவும் வன்னிப்பிராந்தியத்தில் பூநகரி யில் இருந்ததெனவும் வரலாற்று ஆசிரியர் கள் கூறுகின்றனர். வாலசிங்க மன்னனுக் குப் பின்னர் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டில் வட தமிழீழத்தை 2ஆம் கஸ்ஸப மன்னன் ஆட்சி செய்தான். இவர் வாலசிங்க மன்ன னின் சந்ததியில் வந்தவனே கி.பி 10 ஆம் நூற்றாண்டில் நான்காம் மகிந்தன் என்ற சிங்கள மன்னன் இலங்கையை ஆட்சி செய்த வேளையில் வன்னியிலுள்ள பூந கரிப்பிரதேசம் சோழரின் ஆட்சிக்குட்பட்டி ருந்தது. சோழர்களின் பிரதிநிதியாகவி ருந்த புவனேகவாகு என்பவன் பூநகரியில் அமைந்துள்ள நல்லூரில் மாளிகை ஒன்றை கட்டியிருந்தான். 11 ஆம் நூற்றாண்டில் முற்பகுதியில் கி.பி 1003 இல் இராஜ ராஜசோழன் அவன் மகன் இராஜேந்திர சோழன் என்போர் இலங்கையை (உரு குணை தவிர்ந்த) ஆட்சி செய்தான். கி.பி 1055 இல் சோழரை வென்ற 1ஆம் விஜய பாகு என்பவன் இலங்கை முழுவதையும் ஆண்டான். மீண்டும் கி.பி 1110ஆம் ஆண் டில் குலோத்துங்கசோழன் இலங்கை மீது படையெடுத்து யாழ்ப்பாண அரசை நிர் வகித்து வந்தான். யாழ்ப்பாண இராட்சி யத்தின் தொடர் வரலாற்றில் கி.பி 13ஆம் நூற்றாண்டில் சுதந்திரத்தமிழ் இராச்சியம் அமைத்த காலமாகும். இக்காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து சிங்களவர்கள் தென்புலம் பெயர்ந்தனர். ஆரியக்சக்கர வர்த்தி எனச்சிறப்புப் பெயரோடு தமிழ் மன்னனின் ஆட்சிக்காலம் ஆரம்பமாகின் றது.

பொன்பற்றியூர் பாண்டியளவன் என் னும் பிரபு மதுரைக்குப்போய் சூரியவம் சத்து துரைச்செழியசேகரன் புதல்வனான விஜயகாலிங்கனை அழைத்து பாண்டி மழ வராயன் முடி தூக்கிக் கொடுக்க கங்காதரர் ஐயரால் விதிப்படி மகுடமும் சிங்கையாரி யச்சங்கரவர்த்தி என்ற பட்டமும் சூட்டப் பட்டது. யாழ்ப்பாண அரசு உறுதியாய் நிலைநாட்டப்பெற்ற காலத்தில் கிரித்தீபம் போல் விளங்கிய புகழாழனாதனால் அவனே யாழ்ப்பாணத்தின் முதலாம் ஆரியச் சக்கரவர்த்தியென கொள்ளுதல் எல்லாவற்றிலும் பொருத்தமுடையது. இவனே செகராசசேகரன் என்ற சிங்கா சனப் பெயரையும் புனைந்து கொண்டான். இவ்ஆரியச்சக்கரவர்த்தி யாழ்ப்பாண தலை நகரை சிங்கைநகரிலிருந்து யாழ்ப்பாணத் திற்கு இடம் மாற்றினான். விஜயசூழங்கை ஆரியச்சக்கரவர்த்தியின் மந்திரியான புவ னேபாகு நல்லூரில் கந்தசாமி கோவிலைக் கட்டிவித்தான். யாழ்ப்பாணத்தில் பல கோயில்கள், யாகசாலைகள், தேரோடும் வீதி, அன்னசத்திரம் முதலியவற்றை அமைத்தான். தென்னிந்தியாவிலிருந்து மக்களை குடியேற்றி குடியேற்றங்களை அமைத்தான் என்று கூறப்படுகின்றது.

திருநெல்வேலி, புலோலி, பச்சிலைப் பள்ளி, தொல்புரம், கோயிலாக்கண்டி, நெடுந்தீவு, பல்லவராயன்கட்டு, இணுவில், இருபாலை, தெல்லிப்பளை, மயிலிட்டி முத லான ஊர்களில் குடியேற்றங்கள் உருவாக் கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டனர். அதே காலப்பகுதியில் வன்னிப்பிரதேசத்தில் குறிப்பாக கரிக்கட்டுமூலை, முள்ளிய வளை, மேல்பற்று, மேற்குமூலை, கிழக்கு மூலை, திரியாய், கச்சாய், கட்டுக்குளம், கொட்டியாரம், துணுக்காய், இத்திமடு, நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் தமிழ் மக்கள் குடியேறினர் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது.

கி.பி 1262 ஆம் ஆண்டின் விஜய சூழங்கை ஆரியச்சக்கரவர்த்தியின் மக னான குலசேகரசிங்கை ஆரியன் அரச கட் டில் ஏறினான். இச்சக்கரவர்த்தி காலத்தில் புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டதுடன் இராட்சியத்தின் நிர்வாக ஒழுங்கை சீர்ப் படுத்தி நாட்டின் சமாதானம் நிகழ வழி வகுத்தவன். இவன் பாண்டிய நாட்டின் நல்லூரைச் சேர்ந்தவன் குலசேகர பாண் டிய மன்னனுக்கு அமைச்சராகவும் இருந்த வன். மாறவர்மன் என்ற இயற்பெயரை யுடைய இவன் தனது சொந்த ஊரான நல்லூர் என்ற பெயரிலேயே யாழ்ப்பாணத் தில் நகரமைத்து பாண்டிய மன்னனின் பெயரான குலசேகர் என்ற பெயரோடு குல சேகரசிங்கை ஆரியன் என்னும் பெயரில்

https://tamileelamarchive.com/


சங்கிலி மன்னன்

> கி.பி 1519 இல் சிங்கைபரராஜசேகரன் மகன் 1 ஆம் சங்கிலியன் ஆட்சியைக் கைப்பற்றினான். சிறந்த ஆளுமையும் படைக்கலப் பயிற்சியும், சிறந்த சாதுரியமும், தந்திரோபாமும் கொண்டவனாக விளங்கினான். 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றியிருந்தார்கள். ஆயினும் 1620ஆம் ஆண்டே யாழ்ப்பாணத்தை முழுமையாக கைப்பற்ற முடிந்தது. இந்நிலைமைக்கு சங்கிலி மன்னனின் எதிர்ப்பே முக்கிய காரணமாகக் கொள்ளப் படுகின்றது போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கைத் தீவிலிருந்தே விரட்டியடிக்க வேண்டும் என்ற உறுதியான குறிக்கோளுடனேயே செயற்பட்டான்.

யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது.

கி.பி 1284 ஆண்டில் குலசேகரசிங்கை ஆரியனின் மகன் குலோத்துங்கசிங்கை ஆரியன் ஆட்சிப்பீடம் ஏறினான். இவன் காலத்தில் விவசாயத்தொழில் சிறந்து விளங்கியது. இதனால் செல்வம் பெருகி குடிமக்கள் மகிழ்ச்சியாக இருந்தனர், நாட்டில் அமைதியும் சுபிட்சமும் நிலவியதாக வைபவமாலை குறிப்பிடுகின்றது.

கி.பி 1292 இல் விக்கிரமசிங்கை ஆரியன் யாழ்ப்பாண அரசனான் இம்மன்னன் காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் மதக்கலவரம் மூண்டது. கலவரத்திற்கு காரணமானவன் புஞ்சிபண்டா என்ற சிங்கள இனத்தவன் ஆவான். இவனையும் இவனோடு சேர்ந்த கலகக்காரரையும் விக்கிரமசிங்கை ஆரியன் சிரச்சேதம் செய்வித்தான். இவனின் ஆட்சிக்காலத்தில் வன்னியில் சிற்றரசர்கள் உருவாகத் தொடங்கியதாக தமிழ் சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

கி.பி 1302 இல் வரோதயசிங்கை ஆரியன் மன்னனாக முடிசூடினான். இவன் காலத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டு அமைதி நிலவியது. கி.பி 1325ஆம் ஆண்டு வரோதயசிங்கை ஆரியனின் மகன் மார்தாண்டசிங்கை ஆரியன் அரச முடி சூடப்பட்டு ஆட்சிசெய்தான். இவன் ஆட்சிக் காலத்தில் இஸ்லாமிய யாத்தீர்கன் இபன் பட்டுடா யாழ்ப்பாணம் வந்தான். முத்துக் குளிப்பில் யாழ்ப்பாண மன்னன் பெரும் செல்வம் திரட்டுவதையும் பெருந்தொகையான கப்பல்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டதையும் கண்டு அதிசயித்தான் என அவன் எழுதிச் சென்ற குறிப்பிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

கி.பி 1347இல் குணபூசணசிங்கை ஆரியன் மன்னனாக முடிசூடப்பட்டான். இவன் காலத்தில் கல்வியும் செல்வமும் நாட்டில் சிறந்து விளங்கியது. குணபூசணசிங்கை ஆரிய மன்னனின் பின் ஆட்சிப்பீடம் ஏறிய வரோதயசிங்கை ஆரியன் காலத்தில் வன்னியர்கள் கலகம் மூண்டது இக்கலகத்தை மன்னன் அடக்கினான். பாண்டிய நாட்டிலிருந்து சந்திரசேகர பாண்டியமன்னனுக்குத் தனது படைகளையும் செல்வங்களையும் வழங்கி உதவி செய்து பாண்டிய நாட்டையும் முடியையும் மீட்டுக்கொடுத்தான்.

வரோதயசிங்கை ஆரியனின் மகன் ஜெயவீரசிங்கை ஆரியன் 1380 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசிருக்கையில் ஆட்சிப்பீடம் ஏறினான். இவன் காலம் யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு பொற்காலமாகும். 12 ஆண்டுகள் இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த பெருமைமிக்கவன். இம்மன்னனுக்கு தென்னிலங்கை அரசர் திறை செலுத்தியே அரசாண்டனர். கி.பி1410 ஆம் ஆண்டளவில் ஜெயவீரசிங்கை ஆரியன் இறந்த பின் குணவீரசிங்கை ஆரியன் முடிதரித்தான். இவன் காலத்தில் தென்னிலங்கை மன்னன் பராக்கிரமபாகு என்பவன் திறைசெலுத்த மறுத்தமையால் தென்னிலங்கை மீது படையெடுத்து திறைபெற்று சிங்கள அரசைத்தோற்கடிக்கச் செய்தான். கி.பி 1440 ஆம் ஆண்டளவில் குணவீரசிங்கை ஆரியனின் மகன் கனகசூரியசிங்கை ஆரியன் யாழ்ப்பாண அரசனான். இவனின் காலத்தில் தென்னிலங்கை மன்னனாக ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சி செய்தான். இவனின் வளர்ப்பு மகனான சம்புமல்குமாரையா என்பவனை யாழ்ப்பாணத்திற்குப் பெரும் படையுடன் போருக்கு அனுப்பிவைத்தான். இவன் கனகசூரியசிங்கை ஆரியனை போரில் வெற்றிகொண்டு 17 ஆண்டுகள் கொடுங்கோல் ஆட்சி நடாத்தி தமிழர்களை கொடுமைப்படுத்தியே ஆண்டான் என தமிழ் இலக்கிய நூல்கள் கூறுகின்றன.

கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு இறந்த பின் சம்புமல்குமாரையா யாழ்ப்பாண அரச அதிகாரத்தை விஜயபாகு என்பவனிடம் கொடுத்துவிட்டு கோட்டை இராச்சியத்திற்கு சென்றான். இவ்வேளையில் கனகசூரியசிங்கையாரியனும் அவனது மகனும் விஜயபாகு என்பவனிடம் போர் தொடுத்து வெற்றிகொண்டு 1467 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றி மீண்டும் மன்னனாக முடி சூட்டிக்கொண்டான்.

https://tamileelamarchive.com/

கனகசூரியசிங்கை ஆரியன் இறந்த பின் 1478ஆம் ஆண்டு அவன் மகன் சிங்கைப்பரராசசேகரன் யாழ்ப்பாண ஆட்சிக்காக முடி சூடிக்கொண்டான். நாட்டில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவி தமிழுக்கும் பெரும் தொண்டாற்றினான். சம்புமல் குமாரையாவின் ஆட்சிக்காலத்தில் அழிவுற்ற கோவில்களான சட்டநாதர் கோவில், வீரகாளி அம்மன்கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கைலாயநாதர் கோவில் ஆகிய கோவில்களை கட்டிவித்தான். கனகசூரியசிங்கை ஆரியன் இறந்த பின் அவனின் புத்திரர்களான பரராஜசேகரன், செகராஜசேகரன் என்ற இவரும் தமது பெயர்களை சிங்கை பரராஜசேகரன், சிங்கைச்செகராஜசேகரன் என்ற சிம்மாசனப் பெயர்களைக் கொண்டிருந்தார்கள். சிங்கை பரராஜசேகரன் 1478 இல் யாழ்ப்பாண அரசின் அரசனாகி நல்லூரை மேலும் சிறப்பு மிக்கதாக்கினான்.

சட்டநாதர்கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோவில், கைலாயநாதர் கோவில், வீரகாளி அம்மன் கோவில் ஆகியவை விஜயகூழங்கை ஆரியச்சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட பின்னர் சப்பல் குமாரையாவின் ஆட்சியின் போது அழிவுற்றதால் மீண்டும் அவற்றை சிங்கைபரராஜசேகரன் புனரமைப்புச் செய்வித்தான். சிங்கைபரராஜசேகரனின் தம்பி சிங்கைச் செகராஜசேகரன் புலவர்களையும், வித்துவான்களையும் ஒருங்கே சேர்த்து ஊர்கள் தோறும் பாடசாலைகள் அமைத்து சிறுவர்கள் கல்வி பயில்வதற்கு பெரும் தொண்டாற்றினான். இக்காலத்திலேயே யாழ்ப்பாண இராச்சியத்தில் கல்வி விருத்தியடைந்து காணப்பட்டதாக கூறப்படுகின்றது.

இவன் காலத்திலேயே நீதி விசாரணைக்காக பஞ்சாயம் எனப்படும் சபைகள் நிறுவப்பட்டன. கிராமம் தோறும் வைத்திய சாலைகளை நிறுவினான். கல்வியங்காட்டில் ஒரு மூலிகைத்தோட்டம் ஒன்றையும் அமைத்துப் பராமரித்தான். சிங்கை பரராஜசேகரன் காலத்தில் தமிழ்ச்சங்கம் அமைப்பதற்கு தம்பி செகராஜசேகரன் பெரிதும் உதவினான். நல்லூரில் அமைத்த தமிழ்ச்சங்கத்தில் சோழ, பாண்டி, தொண்டை மண்டபங்களில் நின்றும் புலவர்களை வரவழைத்து சோதிட நூலை விருத்தப்பாவால் செய்தான். பரராஜசேகரன் என்னும் வைத்திய நூலையும் பரராஜசேகரன் பெயரில் இயற்றினான்.



நல்லூர் இராசதானி - மந்திரி மனை

https://tamileelamarchive.com/




இரகுவம்சம் என்ற காவிய நூலும் இவன் காலத்தில் இயற்றப்பட்டதாக கூறப்படுகின்றது.

கி.பி 1519 இல் சிங்கைபரராஜசேகரன் மகன் 1ஆம் சங்கிலியன் ஆட்சியைக் கைப்பற்றினான். சிறந்த ஆளுமையும் படைக் கலப் பயிற்சியும் சிறந்த சாதுரியமும் தந்திரோபாமும் கொண்டவனாக விளங்கினான். 1505ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் கோட்டையைக் கைப்பற்றியிருந்தார்கள். ஆயினும் 1620ஆம் ஆண்டே யாழ்ப்பாணத்தை முழுமையாக கைப்பற்ற முடிந்தது. இந் நிலைமைக்கு சங்கிலி மன்னனின் எதிர்ப்பே முக்கிய காரணமாகக் கொள்ளப் படுகின்றது. போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கைத் தீவிலிருந்தே விரட்டியடிக்க வேண்டும் என்ற உறுதியான குறிக்கோளுடனேயே செயற்பட்டான். தென்னிலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்த போர்த்துக்கேயர் மன்னாருக்கு வந்து 600பேரை கத்தோலிக்க மதத்திற்கு மதமாற்றம் செய்தனர். இதனை அறிந்த சங்கிலிய மன்னன் மன்னார் சென்று மதம் மாறியவர்களையும் மதம் மாற்றிய குருவையும் சிரச்சேத்செய்வித்து பௌத்த சிங்களவர்களையும் தனது எல்லைக்கப்பால் செல்லுமாறும் கட்டளையிட்டான்.

1543 இல் போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்தும் 1ஆம் சங்கிலி மன்னனை வெற்றிகொள்ள முடியவில்லை. மீண்டும் 1560ஆம் ஆண்டு எழுபத்தியேழு கப்பல்களுடன் கரையூரில் வந்திறங்கியது. அவ்வேளையில் தமிழர் படை எவ்வளவு எதிர்த்தும் போர்த்துகேயப் படை யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுவதை தடுக்கமுடியவில்லை. 1 ஆம் சங்கிலி மன்னன் 1565 ஆம் ஆண்டுவரை போர்த்துக் கேயருக்கு எதிராக போராடினான். ஏழத்தாழ நாற்பத்தியாறு ஆண்டுகள் வேற்று நாட்டவரைத் தாய் மண்ணில் வேரூன்ற விடாது மண்ணுக்காக வாழ்ந்து ஆட்சி நடத்திய தலைசிறந்த மன்னன் சங்கிலியன் ஆவான்.

கி.பி 1570 ஆம் ஆண்டின் பின் பெரிய பிள்ளை என்ற மன்னன் யாழ்ப்பாணத்தை ஆண்டான். இம்மன்னன் பதினான்கு ஆண்டுகள் தனது ஆட்சியை யாழ்ப்பாணத்தில் நடத்தினான். 1584ஆம் ஆண்டிலிருந்து 1591ஆம் ஆண்டுவரை இவன் அரசாண்டான் எனக் கூறப்படுகின்றது. அவனின் பின்னர் புவிராசபண்டாரம், எதிர் மன்னசிங்ககுமாரன், சங்கிலிகுமாரன், செகராசசேரகன் ஆகிய மன்னர்கள் 1620 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டான். சங்கிலி செகராசசேகரன் 2 ஆம் சங்கிலியன் என்ற பெயரில் யாழ்ப்பாணத்தை ஆண்ட இறுதி தமிழ் மன்னாக விளங்கினான்.

தமிழ் மன்னர்கள் தமிழீழத்தின் வட பகுதியை ஏறத்குறைய 09 நூற்றாண்டுகள் ஆட்சிசெய்து தமிழரின் மாட்சிமையை நிலை நாட்டினார்கள் என தமிழ், சிங்கள வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வட தமிழீழத்தில் தமிழ் மன்னர்கள மாட்சியை நிறைந்த ஆட்சி செய்தமைக்கான சான்றுகள் அகழ்வாராட்சிகளின் போது தொல்லியல் ஆய்வாளர்கள் மூலமும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

https://tamileelamarchive.com/

# தாயகத்தில் இருந்து ஓர் மடல்

ரா. இலக்கியா,
07ம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.
2007. 03. 09

என்றென்றும் என் இனிய தோழி நிலாவுக்கு நாம் நலம் நலமறிய ஆவல் உங்கள் அனைவரது நலத்திற்கும் நல்வாழ்விற்கும் இறையாசி வேண்டித்தொடர்கின்றேன்.

மேலும்

எமது தாயக மண்ணில் இன்று போர்மேகம் சூழ்ந்துள்ளது நாள்தோறும் சாவுகள், கைதுகள், காணமல்போகுதல், கடத்தல்கள் என்ற செய்திகளுடன்தான் எமது பொழுது விடிகின்றது. வந்தாரை வரவேற்று மனம் குளிர உணவு கொடுத்து உபசரித்த எங்கள் யாழ்ப்பாண மக்கள் உணவுக்காக வரிசையில் நின்று கையேந்துகின்றார்கள் என்ற கொடுமையை தாங்கிக் கொள்ளவே முடியாமல் உள்ளது. மூச்சு விடவும், வெளியில் செல்லவும் எதிரியிடம் அனுமதி பெற வேண்டிய கொடுமைக்கு எம்மக்கள் ஆளாகியுள்ளனர். எந்த நேரம் என்ன நடக்குமோ என்று தெரியாமல் ஆறு இலட்சம் மக்களும் திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் சிறைவாசம் அனுபவிக்கின்றார்கள். பச்சைப்பாலகருக்கு கூட குடிக்கப்பால் இல்லை வெறும் சாயத்தண்ணி தான் கிடைக்கின்றது. ஆனாலும் இத்தனை வலி, வறுமை, கொடுமைக்குள்ளும் எம்மக்கள் போராளிகளுக்கு உணவளித்து, உறங்க இடமளித்து கண்ணின் இமையாக காத்து நிற்கின்றார்கள் என்பதை எண்ணும் போது நெஞ்சு பெருமிதத்தால் நிமிர்கின்றது.

வவுனியாவில் நிலைமை இன்னும் மோசம் ஒவ்வொரு நாளும் எங்கோ ஓர் வீடு சாவு வீடாக மாறியுள்ளது. விடிந்தால் எந்த வீட்டிலிருந்து சாவு ஓலம் கேட்கும் என்று தெரியாமல் இரவைக் கழிக்கின்றார்கள் எம்மக்கள். அண்மையில் எங்கள் அண்ணாவை வீட்டிற்குள் புகுந்து படுக்கையில் வைத்து மிகக்கொடூரமாக படுகொலை செய்துள்ளார்கள். [ உண்மைச்சம்பவம் 20.11.2006 அன்று வவுனியாவில் நடந்தது] சாவு வீட்டிற்குச் சென்று இறுதியாக முகத்தைக் கூடப்பார்க்க முடியவில்லை இந்த நிலை தான் அநேகமான எல்லோருக்கும் இங்கு ஏற்பட்டுள்ளது.

மட்டு, மக்களின் மரண ஓலம், இடப்பெயர்வு, பசிபட்டினி எல்லாம் தமிழீழ தேசியத் தொலைக்காட்சியில் பார்த்திருப்பாய் பாலா அங்கிளின் பிறந்த நாளன்று ஆரம்பிக்கப்பட்ட புலிகளின் குரலில் கேட்டிருப்பாய். இவை எல்லாவற்றிற்கும் முடிவு கட்டும் காலம் நெருங்கி விட்டது.

நிலா நான் சொல்வது உண்மை தான் இங்கே எம்மக்கள் தங்கள் பிள்ளைகளை போராட்டத்திற்கு ஒப்படைக்கத்தொடங்கி விட்டார்கள். இளைஞர், யுவதிகள் தாமாக உணர்ந்து பெருந்தொகையாக போராட்டத்தில் நாள்தோறும் இணைந்து கொண்டுள்ளார்கள். மேலதிகமாக வீட்டிற்கு ஒருவர் நாட்டைக்காக்க வேண்டும் என்ற நிலையை எல்லோரும் உணர்ந்துள்ளார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக மகுடம் வைத்தால் போல் எங்கள் வீரத்தளபதிகள் எல்லோரும் பகை கொன்று வென்று வருவோம் என்ற வேகத்துடன் தானைத்தலைவனின் சுட்டுவிரல் அசைவுக்கு காத்து நிற்கின்றார்கள். இம்முறை மாவீரர் நாளுக்கு எங்கள் யாழ்மண்ணில் நாம் விளக்கேற்றுவோம் என்ற நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் உள்ளது. அந்த நல்ல செய்தியை கேட்கும் நாள் தொலைவில் இல்லை.


வேறு என்ன பிள்ளையை நன்றாகக் கவனி எங்கள் தலைவர் எதிர்பார்க்கும் இளைய சந்ததி அறிவிலும் வீரத்திலும் சிறந்தவர்களாக இருக்கவேண்டும் என்பதே. இங்கு கல்வியுடன், கணினி, கராத்தே கற்றுக்கொடுக்கின்றார்கள். பெண்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளவேண்டும். சமூகவிடுதலையுடன் பெண் விடுதலையும் வேண்டும் என்பதே எங்கள் அண்ணனின் கொள்கை அதற்கேற்ப இளையவர் அனைவரும் இங்கு வளர்க்கப்படுகின்றார்கள். எங்கள் தளிர் காப்பக குட்டிப்புலிகள் படுசுட்டிகள். நன்றாக வளர்க்கப்படுகின்றார்கள். உன் பிள்ளை வைத்தியராக வந்தால் இராணுவ வைத்தியராகவே கடமைபுரிய வேண்டும் விமானியாக வந்தால் தமிழீழ விமானியாகவே சேவையாற்ற வேண்டும் அப்படித்தான் வளர்ப்பாய் என்று எண்ணுகின்றேன். ஏனெனில் நீயும் 10 ஆண்டுகள் அண்ணனின் பிள்ளையாக வாழ்ந்தவள் தானே.

வேறு என்ன அண்மையில் குடும்பகாரர் அநேகம் பேர் வீரச்சாவைத்தழுவியுள்ளனர் வேதனைதான். ஆனால் அது ஓர் செய்தியை சொல்லி நிற்கின்றது. உண்மை வீரனுக்கு எதுவும் தடையல்ல அந்த வீரர்களின பெயர் சொல்ல மழலைகள் எம் மண்ணில் உள்ளார்கள் மலரும் தமிழீழம் எங்கள் மரணத்தில் தான் மலரும் என்றால் மரணம் எங்களை மகிழ்வாக முத்திமிடட்டும் என்றும் எல்லோரும் களத்தில் காத்து நிற்கின்றனர். உங்கள் தேசப்பணியை என்றும் எம்மண் எதிர்பார்த்து காத்துள்ளது. தொடர்ந்தும் உங்கள் ஆதரவுக்கரங்களை நீட்டி எம்மை அரவணைத்து கொள்வீர்கள் என்ற பெரும் நம்பிக்கை எமக்கு மட்டுமல்ல எம் தலைவருக்கும் உண்டு.

மிகுதி உன் பதில் கண்டு தொடரும்

இப்படிக்கு
உன் உயிர் தோழி
ரா. இலக்கியா

https://tamileelamarchive.com/



களமுனையில் பெண்புலிகள்

தனக்கு அடுத்து இன்னொரு தலைமுறையும் போராடவந்து விட்டது என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள அவளுக்கு கடினமாக இருந்தது. அடுத்த தலைமுறையும் போராட வந்து விடக் கூடாது என்பதில் அக்கறை இருந்தது.

https://tamileelamarchive.com/



# நிலாவும் பிள்ளைகளும்

நிலா அந்தக் களமுனையின் பகுதி ஒன்று பொறுப்பெடுத்து ஆறு மாதங்கள் முடிந்துவிட்டன. எதிரி அடிக்கடி நகர்வை மேற்கொள்ளும் பாதை அது எப்போதும் நெருக்குவார சண்டை நடக்கும் பகுதி அவளுடையது. பகைவனை உடைக்க உடைக்க மறுபடி மறுபடி காப்பரண்களை அமைத்து அந்தப்பாதையை பாதுகாத்துக் கொண்டிருந்தனர். நிலாவும் கீழுள்ள பெண்புலிகள் ஆறுமாதத்துடன் இப்பகுதிக்கு வந்தவர்களை இப்போது விரல்விட்டு எண்ணிவிடலாம். பலர் விழுப்புண் அடைந்தும் வீரச்சாவெய்தும் களமுனை விட்டகன்றதனால் புதியவர்களே கூடுதலாக இருந்தனர். கடந்த மாதம் இறுதியில் நடந்த ஒரு மோதலில் நிலாவுக்கும் ஒரு சிறு விழுப்புண் ஆனால் அதையெல்லாம் ஒரு பொருட்டாக நினைத்து அவர் களமுனையை விட்டு அகல முடியாது.

நிலாவுக்கு இங்கு நடக்கும் சண்டைகள் ஒவ்வொன்றையும் எத்தனையோ முறைகளில் ஒன்றாக இருக்கும். 1993 இல் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதிலிருந்து 2008 பங்குனி வரையான 15 ஆண்டுகளாக அவள் களமுனைகளையே வாழ்வாக்கியிருந்தாள். இடையில் போரியல் சார்ந்த கற்கை நெறிகளை பயின்ற காலத்தையும், விழுப்புண் அடைந்து மருத்துவ மனையிலேயே கழித்த நாட்களையும் தவிர, நிறையச் சண்டைகளில் அவள் அணித்தலைவி. மிகவும் திறமையான சண்டைக்காரி அதற்கு அடையாளமாக உடலெல்லாம் பரவலாக விழுப்புண்கள். காலொன்று எறும்பு முறிந்து வளையும் தன்னகத்தே தாங்கிக் கொண்டது. இயல்பான காலணி அவருக்கு பொருந்தாது ஒட்டுக்காலணியை தூக்கி நடக்க இயலாது ஒரு மாதிரியான நடையே அவளுடையது.

அவளுடன் இருந்த தோழியர் பலர் வீரச்சாவடைந்து விட்டனர். சிலர் வீடு போய்விட்டனர். ஒரு சிலர் அகவையின் அடிப்படையில் திருமண வாழ்வுடன் இணைந்து தொடர்ந்தும் பணிபுரிகின்றனர். அவளது தோழியர்களும் பொறுப்பாளர்களுக்குமாக அவளுக்கான இல்லற வாழ்வை அமைத்துக் கொடுக்க பல தடவைகள் முயன்றிருக்கின்றனர். நிலா தனது வீட்டிலிருக்கும் அக்கா, இரண்டு தங்கைகளின் வாழ்க்கை அமையட்டும் பின்னர் பார்ப்போமென்று அந்த முயற்சிகளையெல்லாம் தள்ளிப் போட்டிருந்தாள்.

எல்லோருக்கும் வாழ்க்கை அமைந்து விட்டது. கடந்த மாதம் அவளது கடைசித் தம்பிக்கும் திருமணப்பதிவு செய்தாகிவிட்டது. வாழ்த்துக்களை மடலிலே அனுப்பிவிட்டு வந்த பகைவரை கவனிக்க நிலா சென்றுவிட்டாள்.

இப்போது வீட்டிலும், இயக்கத்திலுமாக மருமகள், பெறாமக்கள் என்று உரிமை கொண்டாட உறவுகள் அதிகம். தோல் சுருங்கிய அவளது கன்னங்களில் முத்தமிட்டுக்கொள்ள நிறைய மழலைப்பட்டாளங்கள் இருக்கின்றன. நிலா இன்னமும் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவே இல்லை.

சரியாகச் சொன்னால் உரிய வயதில் அவள் மணவாழ்க்கையுடன் இணைந்திருந்தால் இரண்டு மூன்று பெரிய பிள்ளைகளுக்கு தாய். இப்போது மட்டுமென்ன அவளது அணியிலிருக்கும் பெண்புலிகளுமே அவளது பிள்ளைகள்தான்.

இவளை அக்கா என்பதா 'அன்ரி' அல்லது மாமி, சித்தி என்பதா என்று அவர்களுக்குக் கூட சில நேரங்களில் தடுமாற்றம் வரும். அவர்களுக்கு சண்டைபிடிப்பதிலிருந்து சீருடையை தனியாக துவைத்து அணிவது வரை எல்லாவற்றையுமே சொல்லிக் கொடுத்து வளர்க்கும் அவள் தாயின்றிவேறு யாராக இருக்கமுடியும்.

தனக்கு அடுத்து இன்னொரு தலைமுறையும் போராடவந்து விட்டது என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்ள அவளுக்கு கடினமாக இருந்தது. அடுத்த தலைமுறையும் போராட வந்து விடக் கூடாது என்பதில் அக்கறை இருந்தது.


நேற்று சிங்களப்படை அந்தப் பாதையை உடைக்கப்படாத பாடு பட்டு பின்வாங்கியிருந்தது. நாளையும் அவை முன்னேறலாம். போர் முடிந்து பொழுது விடியும் விடியும் வரை நிலா அந்த களமுனையை விட்டகல விரும்பவில்லை. இப்போது அவளின் தலைமை அவ்விடத்துக்கு தேவை தளபதிகள் அடிக்கடி நடைபேசியில் அவளை அழைத்த வண்ணமிருந்தார். முன்னணி நிலைகளிருந்து அவளது புலிப்பிள்ளைகளும் கூப்பிட்டபடி இருக்கின்றனர். இவளது குரலை நடைபேசியில் கேட்ட சிங்களப்படைகளுக்கு 'இடியேறு கேட்ட நாகம் போல்' நடுக்கம்.

வெடியுதிர்வும், புகையுமாய்; எறிகணைகளும், சன்னங்களுமாய்; விழுப்புண்களும், வீரச்சாவுகளுமாய் தடைகள் விரிகின்ற போதும் நிலாவும் அவளது பிள்ளைகளும் போராடிக் கொண்டிருக்கின்றனர். இப்போது நிலாவின் வாழ்வே பலருக்கான வாழ்வு அவளின் இருப்பே தேசிய பாதுகாப்பின் இருப்பு

https://tamileelamarchive.com/

இ.சாகித்தியன்

# கியூபா கல்விக்கு கலங்கரை விளக்கு



பிடல் கஸ்ரோ

பூமிப்பந்தில் வல்லாதிக்கத்தின் நீண்ட முற்றுகைக்குள் சிக்குண்டு சின்னா பின்னப்பட்டு விடுதலை பெற்று மீண்டெழுந்த நாடுகளில் முதன்மையானவற்றில் கியூபாவும் ஒன்று. சர்க்கரை ஏற்றுமதியில் முன்னணி நாடாக விளங்கும் கியூபா தனது வளர்ச்சிப்பாதையில் மக்கள் அனைவருக்கும் கல்விக் கண் திறக்கும்படி செய்தல் எனத் திட்டத்தைச் சிறப்பாக வழி நடத்திச் செல்வதில் வெற்றி கண்டுள்ளது. 1959 சனவரி முதலாம் திகதி சுதந்திரம் பெற்றதிலிருந்து தற்குறித்தனத்தை விரட்டிக் கிட்டத்தட்ட முழுமையான எழுத்தறிவை சாதிப்பதில் வெற்றி கண்டிருப்பதோடு தொடக்கக் கல்விக்கும் நடுநிலைக் கல்விக்குமான வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும்படியும் செய்துள்ளது. கியூபாவில் ஒவ்வொருவரும் குறைந்தது நடுநிலைப்பள்ளி முடியவாவது படிக்க வேண்டும் அதாவது ஒன்பதாம் வகுப்பு முடிய இலவசக் கல்வி அதற்குப் பின்பும் இலவசக் கல்வி. குடிமக்கள் ஒவ்வொருவரின் கல்விக்கும் அரசு பொறுப்பேற்கிறது; முழுப் பொறுப்பேற்கிறது. கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி என்பதால் அக்கல்வியின் தரம் குறைந்து போய்விடவில்லை. கியூபா உலகளவில் உயர்ந்த கல்வித்தரம் பேணி வருவதை அனைவரும் ஏற்றுப் போற்றுகின்றனர். இதன் மூலம் கியூபா நாட்டுக் கல்விக்கூடங்கள் ஆண், பெண் சமநீதியை நிலைநாட்டுவதிலும் முழுவெற்றி கண்டுள்ளது.

உலகமயமாக்கல் காலத்தில் உலகெங்கும் தனியார் மையத்தின் கை ஓங்கிவரும் பகைப்புலத்தில் கியூபாவில் கல்வி என்பது மக்களின் உரிமையாகவும் அரசின் கடமையாகவும் இருந்து வருகிறது. கல்வியை வணிகமாக்கும் பேச்சிக்கே அங்கு இடமில்லை. உலக நாடுகள் ஒவ்வொன்றும் தன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆறு வீதத்தை கல்விக்கு முதலீடு செய்ய வேண்டுமென்று 'யுனெஸ்கோ' (ஐ.நா.கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பு) பரிந்துரை செய்கிறது. இந்த வகையில் கியூபா தன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 முதல் 11 வீதத்தினை கல்விக்கு முதலீடு செய்கிறது. இதேபோல் அது தன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.1வீதத்தை மக்கள் வாழ்வுத் துறைக்கு முதலீடு செய்கிறது. கல்விக்கும் உடல்நலம் மன நலம் உள்ளிட்ட நல வாழ்வுக்குமான இடையூறு கருதி இரண்டையும் இரு கண்களாக மதித்துப் போற்றுகிறது. யுனஸ்கோ அறிக்கையின் படி உரிய வயதடைந்த கியூபக் குழந்தைகளில் 98 வீதத்தினர் 1997 - 98 இல் மழலயம் நிலைக்குச் சென்றனர். ஆறு முதல் 16 வயதடைந்தவர்களில் பள்ளி மாணவர்களாக பதிவு பெற்றவர்கள் 94.2 வீதத்தினர். தொடக்கக் கல்விகளில் பதிவு பெற்றவர்கள் 100 வீதத்தினர். தேர்ச்சி பெறாமல் மீண்டும் அதே வகுப்பில் படித்தவர்களின் அளவு தொடக்கப் பள்ளியில் 1.9 வீதம். நடு நிலைப்பள்ளியில் 2.8 வீதம். பல்கலைக் கழகத்திற்குச் செல்வதற்கு முன்பான உயர்தர வகுப்பில் 1.8 வீதம். 1959 இல் கியூபா நாட்டுக் குழந்தைகளில் அரைவாசிப் பேர் பள்ளி செல்லவேயில்லை என்பதையும், 13முதல் 19வயதுடையோரில் 72 வீதத்தினர் மேல்நிலைப் பள்ளிக்கு கல்வியை எட்டியிருக்க முடியவில்லை என்பதையும், பத்து லட்சத்திற்கு மேற்

https://tamileelamarchive.com/



பட்டவர்கள் முழுத்தற்குறிகளாய் இருந்த னர் என்பதனையும் மனதில் கொண்டு, அத்துடன் இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். புத்தகங்கள் குறிப்பேடு கள் உட்பட கல்விக்கான தேவைப் பொருட் கள் அனைத்தையும் கியூபா அரசே வழங்கு கிறது அவை அனைத்தையும் அது இலவச மாக வழங்குகிறது. ஆண்டு தோறும் கியூ பாவில் சுமார் இரண்டரை கோடி புத்தகங் கள் தயாராவதாக குறிப்பிடுகின்றது. குழந் தைப் பருவத்திலும் மாணவப்பருவத்திரும் இருக்கும் அனைவரும் படிக்க வேண்டும் என்பதில் மட்டுமல்லாமல் அவர்களின் உடல் நலத்திற்கும் மனநலத்திற்குமான நலவாழ்வுத்திட்டங்களிலும் அரசு தீவிர கவனம் செலுத்துகிறது. பள்ளிக் கல்வி அமைப்புக்கும் புறத்தே இருப்பவர்களுக் கான கல்வித்திட்டங்களும் கல்வி வளர்ச் சிக்கு துணை செய்கின்றன. எழுத்தறிவுக் கல்வி வயது வந்தோர் கல்வி முறைசார்க் கல்வி என்று பல்வேறு வகையிலும் கல்விக் கண் திறக்கும் பணி நடைபெறுகின்றது. கருவறை தொடங்கி கல்லறைவரை கல்வி தொடர்கிறது யாரும் எக்காரணத்தை முன் னிட்டும் படிக்காதவர்களாக இருந்து விடக் கூடாது என்பது கியூபா அரசின் கியூபச் சமு தாயத்தின் உறுதியான முறைப்பாடு.

கல்விவாய்ப்பிலும், கல்வித்தரத்திலும் பகுதிக்குப் பகுதி சமூகப்பிரிவுக்குப் பிரிவு வேறுபாடும் தலைதூக்காதவாறு கவனம் செலுத்தப்படுகிறது. நகர்ப்புற மாணவர் களுக்கு இணையாகக் கிராமப்புற மாண வர்களும் கல்வி வசதிகளைப் பெறுவதற் கென்றே தெளிவான உத்திகள் வகுக்கப் பட்டுள்ளன. கல்வி என்பது மக்களின் உரிமை, அரசின் கடமை என்ற கொள் கைக்கு இணங்க இயல்பாகவும், எளிதாக வும் பள்ளிக்கு வரமுடியாத குழந்தைக ளுக்கும் கல்வியைக் கொண்டு சேர்ப்ப தில் கியூபா அக்கறையுடன் செயல்படுகி றது. மலையில் வாழ்ந்தாலும் சரி, பள்ளத் தில் வாழ்ந்தாலும் சரி, ஒவ்வொரு குழந் தைக்கும் கல்வி கிடைத்தாக வேண்டும். மொத்தத்தில் பத்துக்குக் குறைவான மாண வர்களுடன் 2000 ஆயிரம் பள்ளிகள் இயங் குகின்றனவாம். இவை பெரும்பாலும் குக் கிராமங்களில் அமைந்துள்ளன. இந்த சின்னஞ்சிறு பள்ளிகளில் நான்காம் வகுப்பு வரை கல்வி பயிலலாம் இதனால் நகர்ப்புற மாணவர்கள் பெறும் தேர்ச்சியிலும் கிராமப் புற மாணவர்கள் பெறும் தேர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடில்லை. பாதியில் படிப்பைக் கைவிடுவோரின் ஒட்டுமொத்த அளவு (இடைநிற்றல் ) சுமார் 2.3 வீதமாக இருக்கும். அதேவேளை தொடக்கப்பள்ளி யில் இடைநிற்றலே கிடையாது. நாடெங்கும் ஒவ்வொரு பள்ளியிலும் வகுப்பறைகளில் தொலைக்காட்சிகளும் ஒளிப்பதிவுகளும் கணனிகளும் வைத்துள்ளனராம். அவற் றில் முன்னெப்போதும் ஒரு தேசம் இவ் வளவு விரைவாகவும் இவ்வளவு பெருமள விலும் எழுத்தறிவைப்பரப்பி தன் மக்களின் பண்பாட்டு தரத்தை உயர்த்தியதில்லை.

'தெரிந்தால் கற்றுக்கொடுங்கள் தெரி யாவிட்டால் கற்றுக்கொள்ளுங்கள்' என் பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயற் பட்ட கியூபாவின் எழுத்தறிவு இயக்கத்தை வழிநடத்தி வெற்றிக்கு இட்டுச் சென்றவர் கள் அந்நாட்டு இளைஞர்களே. இதனால் நாட்டின் அனைத்துப் பள்ளிகளும் ஆறு மாதங்கள் மூடிக்கிடந்தன. பதினொரு வயது சிறுவன் கூட தனது பெற்றோருக்கு ஒத்த வயதினருக்கு ஆசிரியராக இருந் தான். இதன் மூலம் கியூபாவின் எழுத்த றிவு இயக்கம் கண்ட மாபெரும் வெற்றியை 1964 இல் அறிந்தேற்று யுனெஸ்கோ அறிக் கையிட்டது. அந்த அறிக்கை எழுத்தறிவு இயக்கத்தை ஈடிணையற்ற வெற்றி என வர்ணித்தது. கியூபாவில் சிறுவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. 425 சிறப்புப் பள்ளிகள் உள்ளன. இதில் 57000 சிறுவர்கள் கல்வி பெறுகின்றனர். 13000 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இதில் பள்ளிக்கு வரமுடியாத நிலையில் இருக் கும் குழந்தைகளுக்காக வீடு சென்று கல்வி கற்கும் ஆசிரியர்களும் உள்ளனர். 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியி லேயே அங்கு ஆசிரியர்கள் எண்ணிக்கை யுள்ளது. இதில் அநேக ஆசிரியர்கள் பட்டம் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இங்கு ஆசிரியர்கள் சப்பு சப்பென்று சப்பி மாணவர்களிடம் வந்து கக்கி விட்டுப்போவ தில்லை புதிதாகப் படைக்கவே முற்படுகின் றனர். மழலைகள் கல்வி என்பது இசை, நடனம், ஓவியம் போன்ற கலைகளையும் நல்ல பண்புகளையும் குழந்தைக்கு அறி முகம் செய்வதுதானே தவிர பாடங்களைத் திணிப்பதோ புத்தக மூட்டைகளைச் சுமக் கச் செய்வதோ அல்ல. 'அடியாத மாடு படியாது' என்ற சொற்பதத்திற்கு அங்கு இடமேயில்லை. அன்பாலேயே கல்வி புகட் டப்படுகிறது.

முதியோர் கல்வி அமைப்புப் பின்வரும் நிலைகளில் கட்டப்பட்டுள்ளது. தொழிலா ளர், உழவர், ஆரம்பக் கல்வி இது நான்கு பருவங்கள் கொண்டது. இதனைவிட முதி யோர் கல்விக்கான பல்கலைக்கழகமும் உள்ளது. இது மூன்றாம் தலைமுறைப் பல்கலைக்கழகம் என்று அழைக்கப்படு கிறது. தனியார் கல்வி அறவே ஒழிக்கப் பட்ட இத்தேசத்தில் வைத்தியர்களுக்கும் குறைவில்லை.

இத்தனைக்கும் மத்தியிலும் தாய் மொழியைப் பேணிக்காப்பதில் கியூபா கண்ணாகவே இருக்கின்றது. அவர்களின் தேசிய மொழி ஸ்பானியம், அவர்களின் பொதுமொழி, ஆட்சிமொழி, தொடர்பு மொழி, நீதிமொழி, கல்விமொழி எல்லாமே ஸ்பானியம் தான். கியூபாவின் கல்விக் கூடங்கள் அனைத்திலும் அனைத்துக் கல் விக்கும் ஸ்பானிய மொழியே பயிற்று மொழி. வட அமெரிக்காவிலிருந்து 90 மைல் தொலைவிலிருந்தாலும் கியூபாவில் ஆங்கி லப் பள்ளி என்பதெல்லாம் கிடையாதாம் ஆரம்பக்கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை எல்லாமே ஸ்பானிய வழிக்கல்வி தான். காற்று நுழையாத இடம் இருக்கலாம் கல்வி நுழையாத இடம் இல்லை போன்று வியங்கும் கியூபாவின் பெருமைக்கு அடி நாதமாய் விளங்குபவர் வேறுயாருமில்லை அந்த நாட்டின் புரட்சித் தலைவர் பிடல் கஸ்ரோ தான். மனிதர்கள் எல்லோரும் சரி சமன் என்று மதிக்கும் அந்தப் பெரிய மனிதர் எழுத்தறிவை வளர்ப்பதில் வெற்றி கண்டது மாத்திரமல்லாது, ஏனைய விடு தலை அடைந்த, விடுதலை அடையப் போகின்ற நாடுகளுக்கும் கல்வியின் கலங் கரை விளக்கமாகவும், குறிகாட்டியாகவும் திகழ்கின்றார்.

புவ.கிள்ளிவளவன்

ஒளிப்படம்: நெய்தல்

https://tamileelamarchive.com/

# தண்ணீருக்கான யுத்தம்



"உலகின் நேற்றைய யுத்தங்கள் நிலங்களை மையமாகக் கொண்டும் இன்றைய யுத்தங்கள் எரிபொருளை மையமாகக் கொண்டும் இடம்பெறுகின்றன. ஆனால் இனி நாளைய உலக யுத்தம் என்பது நாம் எவரும் எதிர்பார்க்காத ஒன்றாக அமையுமா என்பதுதான் இன்றைய கேள்வி அதாவது தண்ணீரை மையமாகக் கொண்டு நாடுகளிடையே யுத்தங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது"

https://tamilnationarchive.com/

முன்னைய காலங்களில் யுத்தங்கள் எல்லாம் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கிலே இடம்பெற்றுள்ளன. வலுமிக்க நாடுகள் வளமுள்ள வலுவற்ற நாடுகளை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் தீவிரம் காட்டின. இதனால் ஏற்பட்ட காலனியாதிக்கப் போட்டிகள் நாடுகளிடையே போர்களாகவும் மாறியது. கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் இயந்திர சாதனங்களின் பாவனைகள் அதிகரிக்க உலகின் இயங்கு சக்திக்கு கனிய வளம் இன்றியமையாத ஒன்றாக விளங்கியது. இதனால் கனியவளம் உள்ள நாடுகளை வல்லரசுகள் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பி களத்தில் இறங்க கனிய வளமிக்க நாடுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏனைய நாடுகளுடன் அணி சேர்ந்தன. இதன் போதும் நாடுகளிடையே முறுகல் நிலை தோன்றியது. இதில் சில யுத்தத்திலும் முடிவடைந்தன. இந்த எரிபொருள் வளங்களை சுரண்டுவதற்காக வல்லரசுகள் வளமிக்க நாடுகளுடன் சுதந்திர பொருளாதார உடன்படிக்கைகள் என்ற பெயரில் பல ஒப்பந்தங்களையும் செய்து கொண்டன. இராஜதந்திர ரீதியில் உள் நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான ஒப்பந்தங்களுக்குள் சிக்கிக் கொள்ளாத நாடுகளுடன் வல்லரசுகள் யுத்தத்திலும் ஈடுபடத் தயங்குவதில்லை. மத்திய கிழக்கு நாடுகளில் இன்று இடம் பெறுவதும் இதுதான்.

இதன்படி உலகின் நேற்றைய யுத்தங்கள் நிலங்களை மையமாகக் கொண்டும் இன்றைய யுத்தங்கள் எரிபொருளை மையமாகக் கொண்டும் இடம்பெறுகின்றன. ஆனால் இனி நாளைய உலக யுத்தம் என்பது நாம் எவரும் எதிர்பார்க்காத ஒன்றாக அமையுமா என்பதுதான் இன்றைய கேள்வி அதாவது தண்ணீரை மையமாகக் கொண்டு நாடுகளிடையே யுத்தங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் போக்கும் அதைநோக்கிச் செல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது உலக அளவில் உள்ள தண்ணீரில் 0.01 விழுக்காடு நீர் மட்டுமே குடி நீராக உள்ளது. அந்த நீரும் தற்போது குறைந்தும் மாசுபட்டும் வருகின்றமை உலக உயிரினத்திற்கே விதிக்கப்பட்டிருக்கும் சவாலானதாகும். 1995 பின்பு புவியின் வெப்பம் பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது. புவியின் சாதாரண வெப்ப அளவின் விகிதம் பெருமளவிற்கு கூடி இருக்கிறது. கரியமிலவாயு ஓசோன்மண்டலத் தாக்கம் மீதான நைட்ரஸ் ஒக்சைட் என்பவற்றோடு காடுகளை அழிப்பதும் எரிபொருள்களின் வெப்பநிலை என்பன புவியின் வெப்பம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைகின்றன. நான்கு இலட்சம் ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு புவியில் காபனீரொட்சைட் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் தொழிற்சாலைகள் என ஆய்வுகள் கூறுகின்றன. இந்தக் கரியமில வாயுவினால் புவிக்கும் சூரியனுக்கும் இடையேயுள்ள மிலன்கோவிட்ச் வலயம் பாதிப்படையும் அதன் விளைவு துருவப்பனி வேகமாக உருகும் இதனால் துருவ நன்னீர் வளம் குறைவடையும்.

மேலும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு காரணமாக முன்னைய காலங்களைப் போலன்றி அமில மழை அடிக்கடி பெய்து வருகிறது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இந்த அமில மழை காரணமாக நன்னீர் ஏரிகள் பாதிப்படைந்துள்ளதாக கூறப்படுகிறது. அமிலமழை அடிக்கடி பெய்து வந்தால் காலப்போக்கில் நன்னீர் ஏரிகள் அதன் நன்னீர் தன்மையை இழந்து விடலாம் என்ற அச்சம் தற்போது தலை தூக்கியுள்ளது. ஜேர்மனி ஸ்கண்டினேவிய நாடுகளில் பெய்த அமிலமழை காரணமாக காடுகளிலுள்ள மரங்களின் இலைகள் ஏன் வேர்கள் கூட அழிந்திருக்கின்றன. இதன் விளைவுகள் கூட நிலத்தடி நீரைப் பாதிக்கின்றன. இன்று பூமியில் நிலவுகின்ற நிலையற்ற வானிலை காரணமாக சில இடங்களில் அதிக மழையும் வேறு சில இடங்களில் வரட்சியும் நிலவி வருகிறது.

மேலும் புவி வாழ் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர் கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின்றனர் ஆனால் இக்கரையோரப் பிரதேசங்களில்தான் நிலத்தடிநீர் பெருமளவுக்கு வெளியேறி வருகிறது. அத்தோடு கரையோர நன்னீர்வளம் உவர் நீராகவும் மாறிவருகிறது. இந்நிலையில் அதிகளவு நீர்பயன்பாடு உள்ள கரையோரப்பிரதேசங்களின் நன்னீர் வளம் அருகி வருகின்றமையால் எதிர்காலத்தில் இப்பிரதேச மக்கள் தங்களது நீர்த்தேவையினை முற்று முழுதாக இறக்குமதி செய்வதன் மூலமே நிறைவேற்றிக் கொள்ளவேண்டிய இக் கட்டானநிலை தோன்றலாம்.

இவ்வாறுதான் உலகத்தின் குடி நீராக இருக்கின்ற 0.01 விழுக்காடு நீரும் அருகிவருகிறது. இதனை கருத்தில் எடுத்துத்தான் நாடுகள் இப்போதே பல முன்னோடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. சில நாடுகளின் தற்போதைய நகர்வுகளை ஆழமாக பார்க்கிறபோது அவர்கள் நன்னீர் நிலைகளையும் கருத்தில் கொண்டே காய்களை நகர்த்துவதாக தோன்றுகிறது. அந்த வகையில் முதலாவதாக அண்மையில் ஆட்டிக் பிராந்திய மலை முகடுகளுக்கு ரஷ்யா உரிமை கோரியதும் அதனால் ரஷ்ய எதிர்ப்பு நாடுகள் சீற்றமடைந்தமையையும் கவனத்தில் கொள்ளலாம். அதாவது ஆட்டிக் சமுத்திரத்திலுள்ள மலைப்பகுதிகள் ரஷ்யாவின் ஒரு பகுதி என அந்நாட்டு ஆய்வுக்குழு தெரிவித்த கருத்துக்கு அமெரிக்கா, கனடா, டென்மார்க் போன்ற நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளமையோடு ரஷ்யாவின் செயற்பாட்டினை அமெரிக்கா ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக சித்தரித்துள்ளமையும் இரண்டு நாடுகளிடையே பரஸ்பர கருத்து முரண்பாட்டிற்கும் கொண்டு சென்றிருக்கின்றன. இப்பிரதேச கடலில் 10000 பில்லியன் தொன் எரிபொருள் இருப்பதாக ஆய்வு கூறுகின்றன. அத்தோடு அதன் மலைப் பகுதிகளில் இருந்து தூய்மையான குடிநீரையும் பெற்றுக் கொள்ளலாம். ஒரு காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் இப்பிராந்தியத்திலிருந்து குழாய் வழி மூலம் ரஷ்யாவுக்கு தூய குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியும். கடல் நீரை குடிநீராக மாற்றுவதிலும் பார்க்க இது பல்வேறு நன்மைகள் உண்டு. இதனாலேயே ரஷ்யா ஆட்டிக் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சியில் இறங்கியுள்ளது. அமெரிக்காவின் அழுத்தங்களையும் பொருட்படுத்தாது ரஷ்யா மீண்டும் மீண்டும் லொமனோசோ மலைத்தொடர் தனது நிலப்பரப்பின் ஒரு பகுதியென வாதிட்டு வருகிறது. இதனைவிட கடந்த மாதம் அவுஸ்ரேலிய இயற்கை வள அமைச்சைச் சேர்ந்த குழுவினர் முதன் முதலாக விமானம் மூலம் அந்தாட்டிக்கா சென்று அங்குள்ள நிலைமைகளை ஆய்வு செய்து திரும்பியமையும் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவுஸ்ரேலியாவின் இந்தப் பயணத்தை சில நாடுகள் தேவையற்ற பயணம் எனவும்

> புவியின் சாதாரண வெப்ப அளவின் விகிதம் பெருமளவிற்கு கூடி இருக்கிறது. கரியமிலவாயு ஓசோன்மண்டலத் தாக்கம் மீதான நைட்ரஸ் ஒக்சைட் என்பவற்றோடு காடுகளை அழிப்பதும் எரிபொருள் களின் வெப்பநிலை என்பன புவியின் வெப்பம் அதிகரிப்ப தற்கு காரணமாக அமைகின்றன.

https://tamileelamarchive.com/

விமர்சித்துள்ளன.

அடுத்து முக்கியமாக நீரை ஆக்கிரமிக்கும் உலகின் திட்டத்தின் வடிவாக காட்ஸ் ஒப்பந்தம் பார்க்கப்படுகிறது. இவ் ஒப்பந்தம் ஒரு நாடு தமது துறைகளை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் திறந்து விடுவது பற்றிக் கூறுகிறது. அதில் முக்கியமாகத் தண்ணீரை தனியார் மயமாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறது காட்ஸ் ஒப்பந்தம். பெருமளவுக்கு வளமிக்க ஏழை நாடுகளை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இவ் வளமிக்க ஏழை நாடுகள் தங்களது துறைகளைப் பன்னாட்டு நிறவனங்களுக்கு திறந்தவிட மறுக்கும் சந்தர்ப்பங்களில் அவை வல்லரசுகளின் மிரட்டல்களையும் பொருளாதார தடைகளையும் எதிர்கொள்ள வேண்டி வரும் இவ்வாறான நிலைமைகள் நாடுகளிடையே பரஸ்பர நல்லுறவைச் சீரழிக்கும் இதனால் வளமுள்ள வலுவற்ற நாடுகள் வல்லரசுகளின் அழுத்தங்களை எதிர்கொள்ள அணிசேர முற்படும். இந் நிலைமை உலக அமைதிக்கு மேலும் கேடு விளைவிப்பதாக அமையும்.

தண்ணீரை வழங்கும் காட்ஸ் ஒப்பந்தத்தில் தண்ணீர் தொடர்பான பல சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சில. தண்ணீர் இயற்கையின் கொடை என்பதனையோ மனிதனின் அடிப்படை உரிமை என்பதனையோ காட்ஸ் ஏற்கவில்லை. இதன்படி தண்ணீர் ஒரு விற்பனைச் சரக்கு. குடிநீர் விநியோகம் காசு கொடுப்பவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் சேவை எனவும் பன்னாட்டு முதலாளிகள் இதில் முதலீடு செய்தல் அவர்களுக்கு இலாபம் ஊட்டும் உரிமையுண்டு. தண்ணீரின் விலையை நிர்ணயிப்பதில் ஒரு நாட்டு அரசு எந்தவிதத்திலும் குறுக்கிட முடியாது. தன்னுடைய வர்த்தகத்தை வளர்க்கும் நோக்கில் ஒரு பன்னாட்டு நிறுவனம் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தண்ணீரைக் கொண்டு செல்லலாம். அத்தோடு வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியும் செய்யலாம். இதற்கு அரசுகள் தடைவிதிக்க முடியாது. நிலத்தடி நீர் வற்றுவது, சுற்றுச் சூழல், உயிரியல் சூழல், கலாச்சாரம் என எந்தவிதக் காரணத்திற்காகவும் தண்ணீரின் விற்பனையின் மீது அரசு தடைவிதிக்கக் கூடாது அவ்வாறு தடைவிதிப்பது சுதந்திர வர்த்தகத்திற்கு எதிரான நடவடிக்கையாகவே கொள்ளப்படும். குடிநீர் தரம் குறித்து எந்தஅரசும் தன்னிச்சையாக சட்டம் இயற்றவோ அதன் அடிப்படையில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடைவிதிக்கவோ கூடாது. தேசிய சட்டங்கள் உள் நாட்டு கம்பனிகளை மட்டுமே கட்டுப்படுத்தும் உலக வர்த்தகக் கழகத்தின் விதி



வாளியும் கயிறும் இன்றி தண்ணீரைப் பூர்த்தி செய்து கொண்ட மக்களிடம் நீங்கள் வருங்காலத்தில் தண்ணீர் தேடி அலையப்போகிறீர்கள் என்றும் தண்ணீருக்கு காசு கொடுக்கப்போகின்றீர்கள் என்றும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தால், எங்களைப் பைத்தியம் என்று கூறியிருப்பார்கள் ஆனால் இன்று எம் கண் முன்னே நடக்கிறதல்லவா. இப்படித்தான் நாளை தண்ணீருக்காக நாடுகளிடையே ஏற்படப்போகும் யுத்தமும்.

முறைகள் மட்டுமே பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் உள்நாட்டு உச்ச நீதி மன்றத்தீர்ப்புக்கள் பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாது. இவ்வாறு தண்ணீர் தொடர்பாக காட்ஸ் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் காணப்படுகிறது. இவற்றோடு மேலும் பல விதிமுறைகளை இவ் ஒப்பந்தம் கொண்டுள்ளது. நம்பமுடியாததாகவும் நடக்கமுடியாததாகவும் தோன்றலாம். ஆனால் உண்மை.

வாளியும் கயிறும் இன்றி தண்ணீரைப் பூர்த்தி செய்து கொண்ட மக்களிடம் நீங்கள் வருங்காலத்தில் தண்ணீர் தேடி அலையப் போகிறீர்கள் என்றும் தண்ணீருக்கு காசு கொடுக்கப்போகின்றீர்கள் என்றும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தால், எங்களைப் பைத்தியம் என்று கூறியிருப்பார்கள் ஆனால் இன்று எம் கண் முன்னே நடக்கிறதல்லவா. இப்படித்தான் நாளை தண்ணீருக்காக நாடுகளிடையே ஏற்படப்போகும் யுத்தமும். கடந்த காலங்களில் தண்ணீரின் நிரம்பல் அதிகமாக இருந்தது தற்போது நிரம்பல் குறைவாகவுள்ளது ஆனால் பானை அதிகரித்துச் செல்கிறது. இதனால் இன்றைய உலகின் எரிபொருளின் நிலை நாளை தண்ணீருக்கு ஏற்படலாம். அவ்வாறு ஏற்படும் போது நாடுகளிடையே போட்டிகள் தோன்றும் பின்னர் அப்போட்டிகள் போர்களாக மாறும்.

ஆச்சரியப்பவதற்கு எதுவும் இல்லை. தற்போது அமெரிக்கா, கனடா, மெச்சிக்கோ காடுகளில் 'நோப்தா' என்கிற ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறையில் உண்டு. இவ்வொப்பந்தமும் தண்ணீரை ஒரு விற்பனைச் சரக்காக கருதுகிறது. இந் நிலையில் உலக குடிநீர் வளத்தில் இருபது விழுக்காடு நீரைக் கொண்டுள்ள கனடாவிலிருந்து பன்னாட்டு நிறுவனங்கள் பெரிய மைதானங்கள் அளவிலான உறைகளில் நீரை நிரப்பி அதனை கப்பலில் கட்டி இழுத்துச் சென்று ஏற்றுமதி செய்கின்றனர். இதனை விட நீர்வளம் குறைந்த மெச்சிக்கோவை தண்ணீர் முதலாளிகள் உறிஞ்சுகிறார்கள். அந்நாட்டு மக்கள் தமது சொந்தக் கிணற்றிலிருந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் எடுக்க அரசிடம் அனுமதி பெறவேண்டிய நிலையுண்டு.

ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க இராணுவத்திற்கு கொச்சியிலிருந்து கப்பலில் தண்ணீர் எடுத்துச் செல்ல ஒரு பன்னாட்டு தனியார் நிறுவனம் முயன்றது. பின்னர் அது மக்கள் எதிர்ப்பு காரணமாக கைவிடப்பட்டது ஆனால் காட்ஸ் ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டால் இவ்வாறான எதிர்ப்புக்கள் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒரு பொருட்டல்ல. உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளதால் உள்நாட்டிலும் எரிபொருளின் விலை உயர்வடைகிறது என ஊடகங்களில் வரும் செய்திகள் காலப்போக்கில் மாறி மசகு எண்ணெய் என்ற இடத்தில் தண்ணீர் என்ற சொல் பாவிக்கப்படும் நிலை ஏற்படப் போகிறது. காலம் அவற்றை நோக்கி நகர்வதாகத்தான் தென்படுகிறது.

கன்னடத்திற்கும் தமிழகத்திற்குமிடையே இடையே உள்ள நீர்ப்பிரச்சினை போன்று வருங்காலத்தில் தமிழீழ அரசிற்கும் சிறிலங்கா அரசிற்குமிடையே மகாவலி நதிக்காகவும் யுத்தம் ஏற்படலாம். தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக நாடுகள் நீர்வளமுள்ள பிரதேசங்களை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயலும் இதனால் சில பிரதேசங்களை பல நாடுகள் கையகப்படுத்த முயலும் இதன்போது ஏற்படுகின்ற முறுகல்கள் முரண்பாடுகள் போர்களில் முடிவடையும் வாய்ப்பே அதிகம். எது எப்படியோ தண்ணீருக்கான பனிப்போர் தொடங்கி விட்டது அப்படியாயின் தண்ணீருக்கான யுத்தம்.

https://tamileelamarchive.com/

# ஒரு தனிப்பாடல்

தாளம் தப்பிய
ஒரு தனிப்பாடல்
ஓயாமல்
ஒலித்துக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதுமே
இரசிக்க முடியாத
பாடலாய்...

மௌனவெளி
கடந்து
இருப்புக்கொள்ளாமல்
தவிக்கிறது.
மனம்...

உணர்வுகள் அடங்கி
மரத்துப் போன
சடமாய்
உலவுகிறவு மனிதம்.

விருப்புகளுமற்று
திசைகளுமற்று
இன்னும் பயணிக்கிறது
முடிவுறாத
பயணம்...

யாத்ரிகன்



https://tamileelamarchive.com/



21 ஆம் நூற்றாண்டில் சீனா அரசியல், இராணுவ, பொருளாதார நிலைகளில் உலகிற்கு தலைமை தாங்க விரும்புகிறது. இதனை அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் அனுமதிக்குமா போன்ற கேள்விகள் உள்ளன. அமெரிக்காவுடன் அதி களவு வர்த்தகத்தைச் சீனா கொண்டிருக்கிறது. இந்நிலையில் அமெரிக்கா, சீனா உறவில் மாற்றம் நிகழுமா? என்ற எதிர்பார்ப்புக்கு நடுவில் சீனா தன் நெடும் பயணத்தை தொடர்கிறது. சீனப் பொருளாதாரத்தின் தேசிய உற்பத்தி உலகில் நாலாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அமெரிக்கா, யப்பான், ஜேர்மனி போன்ற செல்வந்த நாடுகளுக்கு அடுத்த நிலையில் சீனா வளர்ச்சி பெற்றுள்ளது. மிக வளர்ச்சி அடைந்ததும் நவீன தொழில் நுட்டம் கொண்ட கைத்தொழில் வளர்ச்சி பெற்றதுமான செல்வந்த நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடு களைப் பின்தள்ளிவிட்டு சீனா முன்னுக்கு வந்துள்ளமை ஜீ-8 நாடுகளை ஆச்சரி யத்தில் ஆழ்த்தியுள்ளது. ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளை விட மூன்று மடங்கு பொருளாதார உற்பத்திகளை சீனா கொண்டு விளங்குகின்றது என்று உலக வர்த் தக அமைப்பு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவுடன் அதிக வர்த்தக உறவை வைத்துக்கொண்டுள்ள ஆசிய நாடாக இதுவரை யப்பான் இருந்து வந்துள்ளது. ஆனால் அந்தப் பெருமையை இப் போது சீனா பெற்றுவிட்டது. அமெரிக்காவின் யப்பானுடனான வர்த்தகப் பெறு மதியை சீனா மிஞ்சி விட்ட நிலையில் அதனை முறியடிக்கும் உபாயத்தை யப்பான் தேடிக்கொண்டிருக்கிறது. நூற்றி(முப்பது கோடி மக்கள் தொகை கொண்ட உலகின் பெரிய ஆட் பரம்பல் உடைய சீனா இன்று அமெரிக்கா, யப்பான் உள்ளிட்ட பல் வேறு நாடுகளிற்கான சந்தை வாய்ப்புக்களை வழங்குகிறது. 2002 இல் உலகில் அதிகளவிலான வெளிநாட்டு மூலதனங்களை சீனா பெற்றுள்ளது. அது 5270 கோடி அமெரிக்க டொலர் வரை உயர்ந்திருந்தது. 2004 இல் சீனா வர்த்தகப்பெருமதி 24500 கோடி அமெரிக்க டொலர்களாகும் என்பது மலைப்பாக உள்ளது. மிகப் பெரிய

# வளர்ச்சியுறும் சீனாவின் பொருளாதார எழுச்சி



https://tamileelamarchive.com/

அமெரிக்க நிறுவனங்கள் சீனாவில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவியுள்ளன. அமெரிக்க மாநிலங்கள் அங்கு அலுவலகங்களை வைத்துள்ளன. அமெரிக்கா, சீனா வர்த்தக உறவுகள் நெருங்கி வருகின்றன என்பதை இவை காட்டுகின்றன. என்ற போதும் அமெரிக்காவின் ஐயத்திற்குரிய நாடாகவே சீனா உள்ளது.

உலகமக்கள் தொகையில் சீனா 20 சதவீதம் ஆவர். 18 வயதிற்குக் குறைந்த இளைய சமூகத்தினர் 375 மில்லியன் ஆகும். எனவே தான் உலகிலேயே மிகப் பெரிய கல்வி முறையை கொண்டுள்ள நாடாகச் சீனா விளங்குகின்றது. உலகின் கல்வி வளங்களில் இரண்டு சதவிகிதத்தை தன்னகத்தே உள்ள சீனா உலக மாணவர்கள் தொகையில் 26 விகிதத்தை கொண்டுள்ள மாணவர்களின் கல்வி வாய்ப்புக்களை வழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. உலகின் நிலப்பரப்பில் ஐந்து சதவிகிதத்தையும் உலக மக்கள் தொகையில் 20 சதவிகிதத்தையும் கொண்டுள்ள சீனாவிற்கு அந்த மக்களின் சமூக, பொருளாதார விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு பல்வேறு காரணிகள் தடையாக இருந்தன.

சீனாவின் பொருளாதார நகரான 'சங்காய்' நகரின் வானளாவிய கட்டடங்கள் அமெரிக்கப் பெருநகரங்களை நினைவூட்டுகின்றன சீன நகரங்களில் தொடர்ச்சியாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் நகரங்களில் நிலவும் போக்குவரத்து நெரிசல் துறைமுகங்களின் வரிசையாக அணிவகுத்து நின்று பொருள் ஏற்றும் சரக்குக் கப்பல்கள் என்பவற்றைப் பார்க்கும் போது சீனாவில் நிகழ்ந்து வரும் வளர்ச்சிப் போக்கின் அறிகுறியே இது என அமெரிக்கப்பொருளாதார நிபுணர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

இதனிடையே செல்வந்தர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே ஏற்றத் தாழ்வு அதிகரித்து விட்டது என்ற குரல் எதிரொலிக்கவும் தொடங்கி விட்டது. சீனா ஒரு பொதுவுடமை நாடென எண்ணி இருப்போருக்கு அது ஏமாற்றமாகவே முடியும். 1976 இல் மாவோ சேதுங் மறைவிற்குப்பின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் மிகப் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்து விட்டன. சனநாயகத்தை வலியுறுத்தி 1989 இல் தியன்மென் சதுக்கத்தில் மாணவர்கள் நடாத்தியப் போராட்டத்தை கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் மிகக் கொடூரமாக அடக்கி ஒடுக்கினர். இது குறித்து அமெரிக்கா குரல் எழுப்பிய போதும் அதனைச் சீனா பொருட்படுத்தவில்லை. அங்கு ஆயிரக்கணக்கான மாணவர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்போது பெயரளவில் மட்டுமே கம்யூனிஸ்ட் போக்கு காணப்படுகிறது முதலாளி, தொழிலாளி வேறுபாடு தலைதூக்கி விட்டது. சீனப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ சுவடுகள் தென்படத்தொடங்கி விட்டன. எனினும் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டப்பாட்டில் தான் ஆட்சி நடைபெறுகிறது. மாவோல் தொடங்கப்பட்ட மக்கள் விடுதலைப் படையின் தளபதியாக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரைத் தேர்வு செய்யும் முறை நீடிக்கிறது. இது ஒன்றைத் தவிர மாவோ சேதுங்கின் கொள்கைகளும் சித்தாந்தங்களும் இப்போது அங்கு கேள்விக் குறியாகி வருகிறது. ஆட்சி அதிகாரங்கள் இன்னமும் கம்யூனிஸ்ட்டுக்கள் வசம்தான் உள்ளது. என்பதைத் தவிர அங்கு கம்யூனிசக் கோட்பாடுகளுக்கு இசைவாக ஆட்சி அமைந்துள்ளதா என்றால் அது தான் இல்லை.

50 இலட்சத்துக்கு மேற்பட்ட மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்டுள்ள சீனா அதன் எல்லையை சுற்றி 14 நாடுகள் உள்ளன. உலக நிலப்பரப்பில் மூன்றாவது பெரிய நாடாகவுள்ளது. 19 ஆம் நூற்றாண்டில் ரஷ்யா, பிரிட்டன், போர்த்துக்கல் போன்ற நாடுகளின் ஆக்கிரமிப்புக்குள்ளானது. 1911 இல் டாக்டர் சண்யாட் சென்னின் தலைமையில் குடியரசானது குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை.

பன்னாட்டுச் சந்தைக்குப் பூட்டுப் போட்ட சீனப் பொருளாதாரம் அது சீன வளர்ச்சிக்கு பாதகமாக இருப்பதை உணர்ந்து கொண்டு சீனச் சந்தையை பன்னாட்டு நிறுவனங்களுக்காகத் திறந்து விட்டுள்ளது சீன அரசு. இப்போது எதிர்பார்த்ததைவிட இரட்டிப்புப் பலனை சீனா அறுவடை செய்து கொண்டிருக்கிறது. பொதுவுடமை அல்லது கம்யூனிசம் என்ற ஒரு சித்தாந்தத்தை இன்னும் எத்தனை நாளைக்குச் சீன மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கமுடியும் என மேற்குலக இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டார். இப்போது சீன மக்களும் மாணவர்களும் சனநாயகத்திற்காக ஏங்குகிறார்கள் என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் ஒரு கருத்துவாக்கத்தை வளர்த்து வருகின்றன. ஆயினும் சீனா இவற்றை பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை அது தனது அரசியல், இராணுவ பலத்தை பெருக்கிக் கொள்வதிலே கவனம் செலுத்தி வருகிறது. தேவையில்லாமலும் எந்த நாட்டுடனும் முட்டி மோதிக் கொள்ளவும் அது தயாரில்லை. உலகில் அரசியல் இராணுவ வலிமை பெற வேண்டுமானால் அதற்கு பொருளாதாரவலு இருக்க வேண்டும் அதனை அடைவதே இப்போதைக்குச் சீனாவின் இலக்காகும்.



சீனப் பொருளாதாரத்தில் முதலாளித்துவ சுவடுகள் தென்படத் தொடங்கி விட்டன. எனினும் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டப்பாட்டில் தான் ஆட்சி நடைபெறுகிறது. மாவோல் தொடங்கப்பட்ட மக்கள் விடுதலைப் படையின் தளபதியாக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரைத் தேர்வு செய்யும் முறை நீடிக்கிறது. இது ஒன்றைத் தவிர மாவோ சேதுங்கின் கொள்கைகளும் சித்தாந்தங்களும் இப்போது அங்கு கேள்விக் குறியாகி வருகிறது.

தொலைதூர நோக்கை மையப்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்பத் தயாராகிவிட்ட நிலையில் முதல் நிலையாக கல்வித்துறையில் கவனம் செலுத்தியுள்ளது. கல்வித் துறையின் வளர்ச்சியிலேயே ஒரு நாட்டின் நவீன மயமாக்கல் ஏற்பட்டு உள்ளது என்பதை அனைத்துத் தரப்பும் கொண்டுள்ளனர். சீனா ஒரு கைத்தொழில் நாடு என்ற நிலையில் இருந்து பல்வேறு துறைகளில் உலகளாவிய ரீதியில் தலைமைத்தானத்தைப் பெற்றுக் கொள்ள கல்வியைப் பயன்படுத்த வேண்டுமென்ற தொலை நோக்கை அது கொண்டுள்ளது. சீனா நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட நாடு. 1940 இல் 80 வீத எழுத்தறிவில்லை. 1980 களில் 15 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஏழு அல்லது எட்டு ஆண்டு மட்டுமே படித்திருக்கக்கூடிய வாய்ப்பிருந்தது. அமெரிக்காவில் அது 100 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்கக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால் சீனாவில் இப்போது நூற்றுக்கு நூறு விகிதம் தொடக்கக் கல்வி பெறுகின்றனர். இடைநிலைக் கல்வி 94சத வீதமும் என்ற நிலையில் உள்ளது. இப்போது 24 கோடி மாணவர்கள் பாடசாலை செல்கின்றனர். 120 இலட்சம் ஆசிரியர்கள் பாடம் புகட்டுகின்றனர். 1731 உயர்கல்வி நிறுவனங்களில் 20 சதவிகித மானவர்கள் கற்கை நெறியில் சேர்கின்றனர். இது சுமார் இரண்டு கோடியாகும். இதனிடையே ஒன்றரை இலட்சம் சீன மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுகின்றனர். தொழில் நுட்பத்தை நன்கு பயன்படுத்தி 19994 சீனக்கல்வி வலயத் தொகுதிகள் தொடங்கப்பட்டுள்ளது. 68 உயர்கல்வி நிலையங்களைக் கொண்ட தொலைக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் 2027

https://tamileelamarchive.com/

வளாகங்களைக் கொண்ட மத்திய வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைக் கல்வி என வரிசையாக பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அத்துடன் உலக வரலாறு, புவியியல் பாடங்களில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் சீனப் பாடசாலைகள் வெளிநாட்டுப் பாடசாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி சர்வதேசப் பார்வையை வளர்த்து வருகிறது. தற்போதைய சீன அரசுத் தலைவர்கள் பலர் மேற்கு நாடுகளில் கல்விகற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. சீன மாணவர்கள் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிக அளவில் கல்வி கற்கின்றனர். வரலாற்று ரீதியாக சீனா வெளியுலகில் இருந்து தனிமைப்பட்டிருந்தது. இது 1950 வரை நீடித்தது. அமெரிக்கப் பாடசாலைகளை விட சீனப் பாடசாலைகள் சர்வதேசப் பாங்கானவை என்று கருதும் அளவு இப்போது நிலைமை மாறிவிட்டது. 21 ஆம் நூற்றாண்டில் சாதனைபடைக்க ஆங்கில அறிவு தேவை என சீனத் தலைவர்கள் நம்புகின்றனர். இதனால் தான் என்னவோ ஆங்கில மொழிக்கல்வியில் சீனப் பாடசாலைகள் தீவிர அக்கறை காட்டுகின்றன. கணிதம், விஞ்ஞானப் பாடங்களில் அமெரிக்க மாணவர்களைவிட சீன மாணவர்கள் அக்கறை கூடியவர்களாக உள்ளனர். நவீன பொருளாதார வளர்ச்சிக்கு இது முக்கியம் என்று கருத வேண்டும். எனவே சீனாவின் பெருவளர்ச்சிக்கு கல்வியே மூலதனம் என்ற கருப்பொருளை மையப்படுத்தி சீனாவின் கற்கைநெறி பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறது.

21 ஆம் நூற்றாண்டு தொடக்கம் சீன, இந்திய பொருளாதார வளர்ச்சி உலகத்தை ஈர்த்தது. குறிப்பாக சீனா அபரிமித வளர்ச்சி பெற்றது. 1990 - 2004 காலப்பகுதியில் அதன் வளர்ச்சி பத்து சதவீதமாகியது. இது உலக சராசரியைவிட மூன்று மடங்கு அதிகம். 2004 இல் உலகப் பொருளாதார வளர்ச்சியின் மூன்றிலொரு பங்கு சீனாவில் ஏற்பட்டது. 17 கோடி மக்களின் வறுமை நிலை அகற்றப்பட்டுள்ளது. பத்து கோடி வரையான நடுத்தர மக்கள் கொண்ட குடும்பங்களிற்கு தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி, இணையம் மற்றும் வாகன வசதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்பது சீனா உலகில் அடைந்து வரும் வளர்ச்சிப் போக்கிற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.



கணிதம், விஞ்ஞானப் பாடங்களில் அமெரிக்க மாணவர்களை விட சீன மாணவர்கள் அக்கறை கூடியவர்களாக உள்ளனர். நவீன பொருளாதார வளர்ச்சிக்கு இது முக்கியம் என்று கருத வேண்டும். எனவே சீனாவின் பெருவளர்ச்சிக்கு கல்வியே மூலதனம் என்ற கருப்பொருளை மையப்படுத்தி சீனாவின் கற்கைநெறி பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறது.



சீனாவின் பொருளாதார நகரான சங்காய்

https://tamileelamarchive.com/

# சதிகாரர்கள்

அடுத்தடுத்து அரச கட்டில் ஏறிய சிங்கவாகுவும், பண்டாரனும் படுகொலை உண்டமைக்கு காரணம் என்ன? கொலைகளின் பின்னணியில் இருந்த சதிகாரன் யார்? எதற்கும் சரியான விடை கிடைக்கவில்லை. அல்லது கிடைத்து அதை உறுதிப்படுத்த முடியவில்லை. கொலைகாரனின் சாட்சிப்படி அவனை ஏவியது பரநிருபசிங்கன். அவனுக்கு உதவியது காக்கை வன்னியன். இருவருக்கும் உதவியது அப்பாமுதலி ஆனால் இந்த மூவருமே இன்று சங்கிலி மன்னரின் நெருங்கிய அவைக்களத்தில் நின்றனர்.

பறங்கியர்களின் அத்தியந்த நண்பனாகி காக்கை வன்னியன் துரோகம் செய்கிறான். எனக்கருதியிருக்க அவனோ சங்கிலியின் முடிசூட்டு விழாவுக்கென வந்திருக்கிறான். பரநிருபசிங்கனோ தன் தம்பி பெற்ற செல்வம் தான் பெற்றதென மகிழ்கிறான். அப்பாமுதலியோ அரண்மனை வேலைகளில் ஓய்வின்றி உழைக்கின்றான். மன்னன் பரராசசேகரனோ தன் கவலை எல்லாம் ஒழிந்ததாக எண்ணி மகிழ்ந்தான். இவர்கள் இப்படி இருக்க மகிழ்ச்சியைத் தொலைத்து விட்டு பெரும் இன்னல்பட்டுக் கொண்டிருந்தது ஒரு உயிர். நேற்றிலிருந்து தன் சொந்த மாளிகையியே சிறைவைக்கப்பட்டிருந்தது அந்தச் சிட்டுக்குருவி. அடிக்கடி வாசலைப் பார்ப்பதும் பெருமூச்சு விடுவதும் கைகளைப் பிசைந்து கொள்வதுமான தவித்துக் கொண்டிருந்த அந்த உயிர் வடிவழகிக்குச் சொந்தமானது. அவளுடைய உயிர் எப்படி அவளிடம் இருக்கும் அதுதான் சங்கிலியிடம் போய்



https://tamileelamarchive.com/



விட்டதே. ஆனால் உடல் இங்கே தவித்தது. உயிர் தனிய இருப்பதால் சங்கிலிக்கு அதனால் உபயோகிக்கவில்லை. அது அவள் உள்ளத்து உணர்வுகளை அவனுக்குச் சொல்லாது. ஆம், அவள் அவனை உடனே பார்க்க வேண்டும். அவனைச் சூழ்ந்துள்ள ஆபத்தைக் கூறி அவனைக் காப்பாற்ற வேண்டும்.
நேற்று அவளை அடைத்து வைத்தது நல்லதாய் போய்விற்று. இல்லா விட்டால். வீட்டின் ஒரு புறத்தே நடந்த சதி அவளுக்குத் தெரியாமலே போயிருக்கும். சங்கிலியை அவள் சந்திக்கும் செய்தி எப்படியோ அப்பாமுதலிக்குத் தெரிய வந்து விட்டது. கண்முன் தெரியாத கோபத்தோடு வந்தவன் "வடிவழகி?" என்று கூச்சல் போட்டான். தந்தையின் கோபத்திற்கு காரணம் புரியாத வடிவழகி சற்று ஆடித்தான் போனாள்.

"அப்பா?.."

"நேற்று எங்கு சென்றிருந்தாய்?"

"அப்பா..... வந்து"

"வடிவழகி ஒரு பொய்யை மறைக்க ஓராயிரம் பொய் வரும்"

அவள் மௌனமாக தலைகுனிந்தாள். அதுவே அவன் சந்தேகத்தைப் போக்க போதுமானதாக இருந்தது. அவன் சற்று நிதானமாகவே பேசினான்.

"வடிவழகி உன் தாய் உன்னை என்னிடம் ஒப்படைத்த போது உனக்கு வயது இரண்டு. நான் வேறு மணம் செய்து கொள்ளவில்லை. உன்னை வளர்ப்பதில் கவனம் செலுத்தினேன் ஏன் தெரியுமா" அதட்டலாக கேட்டான். வடிவழகி இல்லை என்பதற்கு அடையாளமாய் தலையை ஆட்டினாள்.

"சாம்ராஜ்யக் கனவு" அவன் கண்கள் பாதி மூடிய நிலையில் எங்கோ வைத்தவனாக பேசினான்.

"அரச கேசரி அதுதான் பெரியப்பா தன் மகள் வள்ளியம்மையை அரசருக்கு மணம் முடித்துக் கொடுத்தான். அவள் பரநிருபசிங்கனைப் பெற்றாள். ஈழத்தின் வாரிசு அவன் தான்" ஒரு பெரு மூச்சு அவனிடம் எழுந்தது.

"சிங்கவாகு..."

"ஹ ஹ ஹ ஹா சிங்கவாகு சோழகுமாரி அம்மங்காவின் மகன் சிங்கையாரிய செகராசசேகரனின் வழித்தோன்றல்... அவன். அவன் மட்டுமல்ல, பண்டாரனும் அரசுக்குரியவன் அல்ல"
வடிவழகி திகைத்துப் போனாள்.

"அப்பா இது துரோகம்"

"எது துரோகம்"

"நீங்கள் பேசுவது..."

"வடிவழகி... நீ சிறு பெண் உனக்கு இது புரியாது. பரநிருபசிங்கன் எங்கள் குலக்கொழுந்து அவனுக்கே நீ என்பது நல்லூர் இராசதானியின் சிம்மாசனம் உனக்கும் உன்னை கைபிடிக்கும் பரநிருபசிங்கனுக்கே என்பதும் என் கனவு... நீண்ட நாளைய அவா... முடிந்த முடிவு"

"அப்பா" விம்மலுடன் வெளி வந்தது வடிவழகியின் குரல்.

"அப்பா" என் இதயம் வேறொருவரை விரும்புகிறது.

"அல்ல மகளே வைப்பாட்டியாக வாழ விரும்புகிறது"

"அப்பா..."

"சங்கிலி மணமானவன் அரசுரிமையற்றவன்"

"ஆனால் அரசரப்பா"

"ஹ ஹ ஹ ஹ" அரசர்.... ஹ ஹ... முடிசூடினால் தானே அரசர்"

"அப்பா" அலறினாள் அவள்.

"வடிவழகி இனி நீ வெளியே போகக் கூடாது. சங்கிலியை சந்திக்கக் கூடாது. இது என் கட்டளை"

வடிவழகி வாயடைத்துப் போனாள். அவளுடைய நுட்பமான மூளையில் ஏதோ புரிந்தும் புரியாமலும் இருந்தது. அதுவும் மாலையில் அந்த மாளிகையில் நடந்த நிகழ்ச்சியில் தெளிவாயிற்று. சங்கிலி மணமானவன் என்பது அவளுக்குத் தெரியும் ஆனால் அந்த வீரனை அவள் உள்ளத்துக்குள் நுழைய விடாமல் அவளால் தடுக்க முடியவில்லை. ஏன் பாராளும் மன்னன் சங்கிலிக்குக் கூட தன்னை அடக்க முடிந்ததா? வேதனையோடு மஞ்சத்தில் புரண்டாள் அவள். மாளிகையின் உப்பரிகையோடு போட்டி போட்டு வளர்த்திருந்த மாமரக்கிளைகளில் இரண்டு அணில்கள் ஓடியாடிக் கொண்டிருந்தன.
'ஏறேறு சங்கிலி இறங்கிறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா சங்கிலி...'
அவருக்கு நான் இப்படி அடைக்கப்பட்டிருப்பது தெரியுமா? தெரிந்தால்?... இந்த அணில்பிள்ளை போல மாமரத்தில் ஏறிவருவாரா? வந்தால் அந்த நினைப்பில் எழுந்த நாணவுணர்வில் அவள் தலையணையில் முகம் புதைத்தாள்.

"அம்மா உணவு கொண்டு வந்திருக்கிறேன்"
பணிப்பெண்ணின் அழைப்பு அவளை நிமிரச் செய்தது.

"எனக்கு எதுவும் தேவையில்லை எடுத்துப் போ" சீறினாள் அவள். பணிப் பெண் அகன்றாள் இப்படியே மாலை வரை அவள் எதுவும் உண்ணவில்லை. சற்று முன் வந்த பழரசத்தைக் கூட திருப்பியனுப்பி விட்டாள். பணிப்பெண் எதுவும் புரியாமல் விழித்தாள்.

மாளிகையிலிருந்து தொலைதூரம் வரை நீண்டு செல்லும் பாதையில் அவள்பார்வை படிந்திருந்தது. ராசவீதியில் முனையில் அமைந்திருந்த புதுமண்டபம் பொலிவுறத் திகழ்ந்தது. அதன் எதிர் முனைவால் செல்லும் செங்குந்தர் வீதியின் பின்னே சாயவோர் கொப்பரைகள் கொதிக்க வைக்கும் தீயின் புகை எழுந்து போய்க் கொண்டிருந்தது. அலை அலையாய் சுருள் சுருளாய் எழும்புகையின் பின் பேய்கள் போன்று பனை மரங்கள்

https://tamileelamarchive.com/

தலையை ஆட்டிக் கொண்டிருந்தன. அவள் தந்தையின் முகம் அந்த பனைமரங்களில் ஒட்டிக் கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள்.

திடீரென புகையும் விலக்கிக் கொண்டு ஒரு புரவி முன் வந்தது. வீதியின் முனைவரை வந்த பின் எதுவித தாமதமுமின்றி அப்புரவி அந்த மாளிகையின் முன் வந்து நின்றது. அதிலிருந்து குதித்த அம்மனிதன் தன் முகம் தெரியாதவாறு முண்டாசு கட்டியிருந்தான். அந்தப் பெரிய முண்டாசின் பின்புறமாக ஒரு பட்டுத்துணி இரண்டடி சுமாருக்குத் தொங்கியது. அதன் ஒரு புற நுனியை முன்னிழுத்து தன் வாய்க்கு நேராக எடுத்து மறுபுற காதருகில் செருகியிருந்தான்.
வடிவழகி சாளரத்தின் பக்கலில் நின்று கவனிக்கும் படி அவன் நின்றாலும் அவனை யாரென்று தெரியவில்லை. புரவி நின்றதுமே வெளியே வந்த அமைச்சன் அவனை மாளிகையின் கீழ்த்தளத்துக்கு அழைத்துச் சென்றான். வடிவழகியின் பார்வையிலிருந்து அவன் மறைந்து போனான். மேலும் இருவர் மாலை இருளுவதற்குள் வந்தனர். வடிவழகிக்கு ஏதோ நடைபெறப் போவதான உணர்வு தென்பட்டது. ஆனாலும் அவள் இருக்கும் அறைவாசலிலிருந்து நேராகச் செல்லும் ஆளோடியில் மூன்று அறைகள் இருந்தன. அப்பாமுதலியின் பிரதான ஆலோசனை மண்டம் ஒன்று, மற்றது விருந்தினர்கள் பயன்படுத்துவது, அதற்கும் வடிவழகியின் அறைக்கும் இடையே ஒரு கதவு உண்டு அது மூடியே கிடந்தது.
முக்கோணமாயமைந்த அந்த அறைகளில் எந்தவொன்றையும் தற்சமயம் யாரும் நாடமாட்டார்கள் ஏனெனில் வடிவழகி அங்கே தடுக்கப்பட்டிருந்தாள் வந்தவர்கள் யாராயிருந்தால் எனக்கென்ன என்று நினைத்த வடிவழகி மஞ்சத்தில் படுத்து கண்களை மூடிக்கொண்டாள். பசிக்களை அவளை உறக்கத்துக்கு இட்டுச் சென்றது. எவ்வளவு நேரம் உறங்கினாளோ சற்று நேரத்திற்கெல்லாம் விழித்துக் கொண்டாள். பக்கத்து மண்டபத்தில் கேட்ட பலத்த சிரிப்பு அவளைத் திடுக்கிட்டு எழச்செய்தது.

"ஆ.... அப்படியானால் பரநிருபசிங்கன் அமைச்சனாகி விட்டனா"

"ஆமாம் எங்கள் திட்டத்தை நாங்கள் சரியாக நிறைவேற்றினோம். ஆனால்"

"ஆனால் என்ன மாகா"

"நாக்கைத் துண்டித்தாலும் அவன் எழுதுவான் என்பதை மறந்தே போனோம்"

"ஹ ஹ.. ஹா... போகட்டும் பரநிருபரே உங்கள் திறமையான மருந்து சிங்கவாகுவை பலிகொண்டது"

"அதே முயற்சியை மறுபடி மேற்கொண்டால்... சதி அம்பலமாகி விடும். என்பதால் தான், பண்டாரனை குத்திக் கொன்றோம்"

"பண்டாரனுக்குப் பின் பரநிருபசிங்கன் இருக்க சங்கிலி ஆட்சிக்கு வந்து விட்டான்"

"பரநிருப சிங்கர் சமயத்தில் ஊரிலில்லை"

"போகட்டும் நடந்தவை நடந்தவைகளாகட்டும், நடப்பவை நல்லவைகளாகட்டும்"

"ஆகட்டும் மன்னரே"

"மன்னர் வெறும் ஊர்காவத்துறை மன்னர்"

"எமது திட்டங்கள் நிறைவேற்றினால் தாங்கள் மன்னார் பகுதிக்கு மன்னராகி விடுவீர்கள்"

"ஹ ஹ ஹ ஹ்....நீ நல்லூரின் பட்டத்தரிசு வடிவழகியின் தந்தை ஹ ஹ ஹ ஹ....."

காதில் விழும் ஒவ்வொரு சொல்லும் நாராசமாக விழ கலங்கினாள் வடிவழகி. பாவிகள் இரு அரசர்களைக் கொன்ற பாவிகள் இன்னும்........

"அவன்" "மாமா சங்கிலி முடிசூடக்கூடாது அதை எப்பிடியாவது தடுக்க வேண்டும்." பரநிருபசிங்கனின் குரலில் நடுக்கம் ஏற்பட்டது. அளவு மீறிய ஆத்திரம் அவன் உடலை ஆடச் செய்தது.

"அவ்வளவு தானே அவன் உயிருடன் இருந்தால் அல்லவா முடி சூட" காக்கை வன்னியன் கொக்கரித்தான்.

இன்னும் மூன்று தினங்களே இருந்தன. தைப்பூசத்திருநாளில் சங்கிலி செகராசசேகரனின் முடிசூட்டு விழா நடைபெறக்காத்திருந்தது. முடிசூட்டு விழாக்கான வேலைகளை முன்னின்று செய்வதில் நாடே கலந்து கொண்டது. சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் குதூகலத்துடன் காணப்பட்டார்கள்.
வடிவழகி மட்டும் தப்பிச் செல்ல வழிபார்த்து வழிபார்த்து ஏமாந்து குமுறிக் கொண்டிருந்தாள். அவள் உயிர்க்காதலனுக்கு ஆபத்து. அதை தெரிந்தும் அவளால் அதை அவனுக்கு தெரிவிக்க முடியவில்லை. அவள் அழுதாள். அழுதாள் அப்படி அழுதாள். உப்பரிகைக் இணைப்பிடிசுவரில் நின்ற அணில் ஒரு கணம் நின்று அவளைப் பார்த்தது. ஏன் அழுகிறாய் என்பதைப் போல "கிச் கிச்" என அதட்டி விட்டு மரத்தின் வழியே இறங்கி ஓடியது.

மின்னலென வடிவழகியின் மூளை சிலிர்த்தது ஓடிப்போய் உப்பரிகையின் கையைப் பிடித்துச் சுவரைப் பார்த்தாள். வலிய கிளைக்கும் சுவருக்கும் இரண்டடி இடை வெளியே கிடந்தது. இருள் சூழும் நேரம் மரத்தின் வழியாக கீழே இறங்கிய வடிவழகி... மாளிகையின் பின்புற வாயிலால் வீதிக்கு தாவினாள். நன்றாக இருள் சூழ்ந்து விட்டதாலும் வீதிகளின் தனிமையில் செல்லும் பழக்கமற்றிருந்தாலும் பயம் அவள் உடலை நடுக்கமுறச் செய்தது. யாரே நடந்து வருவதைக் கண்டதும் அவள் மதிலொன்றின் புறத்தே பதுங்கினாள். அப்படிப் பதுங்கியவளை பின் புறமிருந்து கட்டிப் பிடித்தன இரு கரங்கள்.

https://tamileelamarchive.com/

பொன்.பூலோகசிங்கம்

# 20 ஆம் நூற்றாண்டில் தமிழர் தாயகத்தின் கலை இலக்கிய மாண்புகள்



இலங்கைத்தீவில் நீண்ட நெடுங்கால மாகவே வடக்கு - கிழக்கு தமிழர் தாயகமாக இருந்துவருகிறது. தமிழர் தாயகத்தில் கலைத்துவமான கலைப்படைப்புக்களும் காத்திரமான இலக்கியப்படைப்புக்களும் தமிழ்கூறும் நல்லுலகை வளப்படுத்திவந் திருக்கின்றன. சங்ககாலப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் கடல்வழியாக தமிழகம் சென்று அங்கே மதுரையில் தங்கியிருந்து தமிழ்ப்பணி செய்துவந்தார். இவரை சங்க நூல்களில் ஈழத்துப்பூதந்தேவனார் பாடல் கள் என அவரால் இயற்றப்பட்ட பாடல் களை தொகுத்திருக்கின்றன. இராஜராஜ சோழன் காலத்திலும் ஈழத்துப்புலவர்கள் தமிழகம் சென்று பாடி பரிசில் பெற்றிருக் கின்றார்கள். இந்த இலக்கியவளம் ஆரம் பத்தில் ஒருவழிப்பாதையாக இருந்தாலும் கூட பின்னர் 20ஆம் நூற்றாண்டில் கலை இலக்கியப் பரிமாற்றமென்பது இருவழிப் பாதையாக மாறிவிட்டது. 19ஆம் நூற்றாண் டின் பிற்பகுதியில் ஆறுமுகநாவலர் தமிழ கம் சென்று பண்டைத்தமிழ்நூல்களை மீள் வாசிப்புச் செய்ததோடு பலநூல்களை மீள்பதிப்பும் செய்தார். அங்கு அச்சியந் திரசாலையொன்றை நிறுவி பலநூல்களை யும் எழுதிவெளியிட்டார். இதன்பின்னர் சுவாமி ஞானப்பிரகாசர் சீ.வை.தாமோதரம் பிள்ளை, கரோல் விஸ்வநாதபிள்ளை, வை மன் சிதம்பரப்பிள்ளை, வைமன் கதிரவேற் பிள்ளை போன்ற பல அறிஞர்கள் ஈழத்து இலக்கிய பாலத்தை தமிழகத்தோடு இணைத்துக்கொண்டார்கள்.

> *செழுமையான பசுமை நிறைந்த கலை இலக்கிய வளர்ச்சியை 21ஆம் நூற்றாண்டில் கொடிய போர் காரணமாக பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அதனுடைய வீச்சுகுறைந்தது. ஆங்காங்கே சில நூல்கள் திரும்பட வெளியிடப்பட்டாலும் கூட ஈழத்து கலைஞர்கள் எழுத் தாளர்களிடையில் நல்ல இறுக்கமான தொடர்புகள் அற்றுப்போய்விட்டன.*

பாட்டுக்கொருபுலவன் பாரதி என பாராட்டுதலைப்பெற்ற சுப்பிரமணியப் பாரதியாருக்கு குருவாக அமைந்தவர் வியா பாரிமூலையைச் சேர்ந்த அருளம்பல சுவா மிகளாகும். அவரை யாழ்ப்பாணத்து சுவா மிகள் என அழைப்பர். பாரதியார் கல்வி யால் பெற்ற மகிமைகாரணமாக யாழ்ப்பா ணம் வையகத்தின் கண் எனக்குறிப்பிட் டார். புகழ்பெற்ற தமிழ்அறிஞரும் தொழிற் சங்கவாதியுமான வி.கல்யாணசுந்தனார் அவர்கள் தமிழ்த்தென்றல் வி.க என சுருக் கமாக அழைக்கப்பட்டார். அவர் நவசக்தி பத்திரிகையினுடைய ஆசிரியராக இருந் தார். கல்கி கிருஷ்ணமூர்த்தி அவரது முதல் மாணவராவார். திரு.வி.க அவர்களுடைய குரு யாழ்ப்பாணம் மேலைப் புலோலியைச் சேர்ந்த சதாவதானி கதிரவேற்பிள்ளையவர் களாகும். இதேபோல தமிழக முதலமைச் சராக இருந்த சி.என்.அண்ணாத்துரை அவர்களிற்கு உபகாரச்சம்பளம் வழங்கி அவருக்கு பச்சையப்பன் கல்லூரியில் உயர்கல்வி வழங்கியவர் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த கென்ஸ்மென் என் பவராவார்.

இதேபோல அச்சுவேலியைச்சேர்ந்த POET தம்பிமுத்து என்பவர் இலண்ட னுக்கு சென்று இலண்டனில் ஆங்கிலக் கவிதைகளுக்காக London Poety என்ற புகழ்பெற்ற சஞ்சிகையை வெளியிட்டார். அதன் ஆசியராக இருந்து ஆங்கில உல கில் 20ஆம் நூற்றாண்டில் புகழ்பெற்ற கவி ஞரான ரி.எஸ்.எலியட் போன்ற கவிஞர் களை உருவாக்கினார். இதேபோல உடுப் பிட்டியைச் சேர்ந்த அழகு சுப்பிரமணியம் என்ற எழுத்தாளர் ஈழத்து தமிழ்மக்களின் வாழ்வியல் பற்றி பல ஆங்கில நூல்களை எழுதினார். The Big girl, The closing time போன்ற புகழ்பெற்ற நூல்கள் அழகுசுப்பிர மணியம் என்பவரால் எழுதப்பட்டவையா கும். இக்காலகட்டத்தின் இலக்கிய வளம் மட்டுமன்றி தமிழர் தாயகத்தின் வடமா காணத்தின் கலைவளமும் சிறப்புற்று இருந் தது. புகழ்பெற்ற நாடகக் கலைஞரான கிருஸ்ணாழ்வார் மேடைகள் தோறும் பாடி நடித்ததோடு பல பாட்டுக்களையும் இயற்றி னார். அந்தக்கால அரசியல் சூழ்நிலை யைக் கருத்திலெடுத்து. அரசாங்க சபை உறுப்பினரான Honourable பாலசிங்கம்

https://tamileelamarchive.com/

அவர்களை கௌரவிக்குமுகமாக அவரது தேர்தல் சின்னமான பச்சைநிறத்தை பாட்டால் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"பச்சைப்பெட்டி பாங்கான பெட்டி"
"பாலசிங்கம் வெல்லும்பெட்டி"

போன்ற புகழ்பெற்ற பாடல்கள் கிருஸ்ணாழ்வார் அவர்களால் பாடப்பட்டவையாகும். இவர் கரவெட்டியைச் சேர்ந்தவர் அச்சுவேலியைச் சேர்ந்த இன்னொரு கலைஞர் பபூன் செல்லையா அவர்கள் மேடைகளிலே பல நகைச்சுவைக் கருத்துக்களைச் சொன்னவர். பல மேடைநாடகங்களில் இயமன் வேலாயுதம், கன்னிகா பரமேஸ்வரி போன்ற ஈழத்துக்கலைஞர்கள் ஒருகாலத்தில் கொடிகட்டிப்பறந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசநாயகம் வாத்தியார் அவர்கள் தென்னிந்தியாவிலிருந்தே கலைஞர்களை ஈழத்திற்கு அழைப்பித்து பல நிகழ்ச்சிகளை நடத்தினார். பழைய றீகல் தியேட்டர் கஸ்தூரியார் வீதியில் இருந்தது. அந்தமேடையில் தமிழகத்தைச்சேர்ந்த கிட்டப்பா, சுந்தராம்பாள் தம்பதிகள் பலநாடகங்களை நடத்தினார்கள். இந்தமேடையில் இருவரும் சேர்ந்து வள்ளிதிருமணம், பவளக்கொடி, சதாரம் முதலான ஆறு நாடகங்களை நடத்தினார்கள். இவற்றிற்கு நவாலியைச் சேர்ந்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் பெரும் ஊக்கம்கொடுத்தார். இவர்களது நாடகங்கள் கொழும்பு மருதானை டவர் மண்டபத்திலும் அரங்கேறின.

வடமராட்சி, தும்பளை நெல்லண்டை அம்மன்கோவிலின் உள்மண்டபத்தில் ஒரு நாடகமேடையும் அந்தக்காலத்தில் இருந்தது. சமய நாடகங்கள் ஆலயமண்டபத்திற்குள்தான் நடத்தப்பட்டன. இதேகாலகட்டத்தில் தஞ்சைப்பெரியகோயிலில் ஒரு நாடகமேடை இருந்தது. இங்குதான் இராஜஇராஜ சோழனுடைய மகள் குந்தவையுடைய நடன அரங்கேற்றம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் வல்லிபுர ஆழ்வார் கோவில், யாக்கரைப் பிள்ளையார்கோவில், தில்லையம்பலப்பிள்ளையார் கோவில், சுட்டிபுரம் அம்மன்கோவில் போன்றவற்றில் தமிழகத்தைச்சேர்ந்த நாதஸ்வர தவில் கலைஞர்கள் வெள்ளம்போல் கூடிய ஜனத்திரள் மத்தியில் கச்சேரி செய்து புகழ் பெற்றார்கள். புகழ்பெற்ற நாதஸ்வர கலைஞர் திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை, குளிக்கரைப் பிச்சையப்பா, நீடாமங்கலம் சுப்பிரமணியம் போன்ற புகழ்பெற்ற கலைஞர்களது கச்சேரிகள் அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்து மக்களை பரவசத்தில் ஆழ்த்தின. இவ்வாறாக வட தமிழ் ஈழத்தில் கலை, இலக்கியவளம் செழிப்புற்றிருந்தது. இதேபோல தென்தமிழீழமான மட்டக்களப்பிலும் 20ஆம் நூற்றாண்டில் கலை இலக்கியம் சிறப்புற்றிருந்தது. இலக்கியம் என்று சொல்லுகின்ற போது அங்கு வாழ்ந்த அறிஞர்கள் இலக்கிய வளமுள்ள நூல்களை எழுதினார்கள். சுவாமி விபுலானந்தர் அவர்கள் கிழக்கிலங்கையின் இலக்கிய வளம்கொளிக்க ஏற்றிவைத்ததீபம் சுடர்விட்டுப் பிரகாசித்தது. யாழ்நூல், மதங்க சூளாமணி போன்றவை அவரால் எழுதப்பட்ட நூல்களாகும். பல்கலைக்கழகத்தில் அவர் தமிழை ஆய்ந்தார். பல தமிழ்க் கல்விமான்களை உருவாக்கினார். மட்டக்களப்பைச் சேர்ந்த எப்.எக்ஸ்.சி நடராஜா அவர்கள் மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலை இயற்றினார். வி.சி.கந்தையா அவர்கள் இன்னொரு கல்விமானாவார். அவர் மட்டக்களப்பு தமிழகம் என்ற நூலை எழுதினார். கண்ணகி வழக்குரை என்ற நூல் மட்டக்களப்பு தமிழகத்தின் கலை இலக்கிய வெளிப்பாடுகளை செப்பிநிற்கின்றது. புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் உள்ளும் புறமும் என்ற நூலை எழுதினார்கள். இதே போல பேராசிரியர் மௌனகுரு அவர்கள், பேராசிரியர் சுகுமார், பேராசிரியர் இ.பாலசுந்தரம் போன்ற கல்விமான்கள் மட்டக்களப்பு நாட்டுக்கூத்துக்கள் பற்றி நாடக அரங்குகள் பற்றி, கவிதை இலக்கியம் பற்றி பலகாத்திரமான நூல்களைத் தந்திருக்கின்றார்கள்.

புகழ்பெற்ற கவிஞர் நீலாவாணன் அவர்கள் வழி என்ற கவிதை நூலைத்தந்தார். 1960 களில் சத்தியாக்கிரகப்போராட்டம் நடந்தகாலகட்டத்தில் திமிலைத்துமிலன். திமிலை மகாலிங்கம், இராஜபாரதி போன்ற அற்புதமான கலைஞர்கள் பல காத்திரமான கவிதைகளை ஈழத்து இலக்கிய உலகிற்கு தந்தார்கள். இன்னும் பாண்டியூரான் கணபதிப்பிள்ளை, சண்முகம் சிவலிங்கம், உமாவரதராஜன், பூமா செல்லத்துரை, நற்பிட்டிமுனை பளீல் போன்றவர்கள் காத்திரமான இலக்கியப்படைப்புக்களைத் தந்திருக்கிறார்கள் 1990களில் பாண்டியூரான் கணபதிப்பிள்ளை அவர்கள் தேசத்துரோக சக்திகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். 2000 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் உதவி அரசாங்க அதிபராகவும், தமிழ்த்தேசியவாதியாகவும் இருந்து அளப்பரிய தமிழ்ப்பணிகள் புரிந்த நற்பிட்டி முனை பளீல் அவர்கள் திறக்கப்படாத தீப்பெட்டிகள் என்ற நூலைத் தந்தார் அவர் மட்டக்களப்பில் இயங்கும் ஒட்டுக்குழுக்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பாண்டியூரானதும் நற்பிட்டிமுனை பளீல் அவர்களினதும் அகாலமரணங்கள் ஈழத்து இலக்கிய உலகிற்கு பெரும் இழப்பேயாகும். சுவாமி விபுலானந்தா அவர்கள் பேராசிரியராக இருந்து தமிழ்ப்பணி புரிந்ததைத் தொடர்ந்து தமிழர் தாயகத்தின் கல்விப்பாரம்பரியம் மேலும் சிறப்படைந்தது. அவரைத்தொடர்ந்து பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்ற கல்விமான்கள் ஈழத்து கலை இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை செய்திருக்கிறார்கள் இந்தக்காலகட்டத்தில் ஈழத்தில் நெடுந்தீவில் பிறந்து மிகச்சிறந்த கல்விமானாக உருவாகி மலேசியாப் பல்கலைகழகத்தில் தமிழ்ப்பணிபுரிந்த வணபிதா தனிநாயகம் அடிகளார் அவர்கள் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை தொடங்கி உலகின் பல பாகங்களிலும் பல தமிழ் மகாநாடுகளை நடத்தி தமிழின் தொன்மையை உலகிற்கு உணர்த்தியதோடு தமிழர் தாயகத்தின் பெருமையை உலகம் பூராகவும் விசாலிப்புச்செய்தார். இவ்வாறாக 20 ஆம் நூற்றாண்டில் ஈழத்து கலை, இலக்கியம் என்பது வடதமிழ் ஈழத்திலும் தென் தமிழீழத்திலும் மிகவும் செழிப்புற்று வளர்ச்சிபெற்றது. வடக்கே ஈழகேசரி பொன்னையா, கனகசெந்திநாதன் போன்ற அறிஞர்களும் சுதந்திரன் பத்திரிகை மூலம் தந்தை செல்வா அவர்களும் பல இலக்கிய கர்த்தாக்களுக்கு களம் அமைத்துக்கொடுத்தார்கள். இந்த செழுமையான பசுமை நிறைந்த கலை இலக்கிய வளர்ச்சியை 21ஆம் நூற்றாண்டில் கொடிய போர் காரணமாக பெரும் பின்னடைவைச் சந்தித்தது. அதனுடைய வீச்சுகுறைந்தது. ஆங்காங்கே சில நூல்கள் திறம்பட வெளியிடப்பட்டாலும் கூட ஈழத்து கலைஞர்கள் எழுத்தாளர்களிடையில் நல்ல இறுக்கமான தொடர்புகள் அற்றுப்போய்விட்டன. பல எழுத்தாளர்களும் பல ஊடகவியலாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். உயிர் அச்சுறுத்தல் காரணமாக பலர் புலம்பெயர்ந்து சென்றுவிட்டார்கள். தமிழர் தாயகத்தின் ஆரோக்கியமான கலை, இலக்கிய மேம்பாடு என்பது தமிழர் தாயகத்தின் பூரணமான அரசியல் விடுதலையின் பின்பே மேம்பாட்டையும் என்ற யதார்த்த நிலை மறுக்கப்படமுடியாத நிதர்சனமாகும்.



https://tamileelamarchive.com/

யோ.சே.யோகி



கிளிநொச்சி அக்கராயன் அணைக்கட்டு வீதியில் ஆற்றின் கரையோரத்தில் எடுக்கப்பட்ட மட்கலங்கள்

# தமிழரின் தொன்மை

## சிறு கண்ணோட்டம்





கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பங்கள்

ஒளிப்படம்: த.திரு

உலகின் தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று என்பதில் யாருக்கும் ஐயமில்லை. ஆனால் அது எவ்வளவு தொன்மையானது என்பதில் பல சர்ச்சைகள் உண்டு. அண்மைக் காலம் வரை சமற்கிருத மொழிக்குத் தந்த முக்கியம் தமிழுக்குத் தரப்படவில்லை. தமிழருக்கோ அவர் தம் மொழியின் தொன்மை குறித்து போதிய அறிவுமில்லை. மொழிமீது பற்றுமில்லை.

மொழி ஓர் ஊடகமே என கூறியோர் பலர் இன்று குறிப்பாக மேற்குலகத்தில் சில நாடுகள் அதனது மொழியைக் காக்க எடுக்கும் முயற்சிகள் கண்டு ஆச்சரியப்படவும் கூடும்.

உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் மூலமாக இருந்தது பழந்தமிழே என்று பல தமிழறிஞர்களும் மேற்குலக அறிஞர்களும் கூறி இருக்கின்றனர். மேலும் முதல் மாந்தனின் பிறந்தகம் குமரிக் கண்டமென்றும் அங்கிருந்து தான் மனிதர்கள் உலகம் முழுதும் பரந்தார்கள் என்றும் நீண்ட காலமாக தமிழறிஞர்கள் சிலர் கூறி வந்துள்ளனர். இக் கூற்றுக்கான எள்ளி நகையாடியோர்களில் பல தமிழறிஞர்களும் உண்டு.

இன்று மாந்தனின் பிறந்தகமாக ஆபிரிக்காவை அறிவியல் அடையாளம் காண்கிறது. அங்கிருந்தே மனிதர்கள் உலகம் முழுவதும் பரந்தார்கள் என்ற முடிவுக்கும் அது வருகின்றது. ஆபிரிக்காவுக்கு அப்பால் ஆய்வு நகர முடியவில்லை. அது நகர வேண்டுமாயின் குமரிக் கண்டத்தை ஆய வேண்டும். அது கடலுள் மூழ்கியதால் அதனை இப்போது ஆய முடியாது உள்ளது. தமிழர்கள் காலம் காலமாகக் கூறி வந்த தொன்மக்கதையில் பெரும் பகுதி இன்று உண்மையென்று ஆகி விட்ட நிலையைக் காண்கிறோம். இன்றும் சில புதிர்கள் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்படுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

திராவிட மொழிகளுக்கு மூல மொழி

https://tamileelamarchive.com/

*இன்று மாந்தனின் பிறந்தகமாக ஆபிரிக்காவை அறிவியல் அடையாளம் காண்கிறது. அங்கிருந்தே மனிதர்கள் உலகம் முழுவதும் பரந்தார்கள் என்ற முடிவுக்கும் அது வருகின்றது. ஆபிரிக்காவுக்கு அப்பால் ஆய்வு நகர முடிய வில்லை. அது நகர வேண்டுமாயின் குமரிக் கண்டத்தை ஆய வேண்டும். அது கடலுள் மூழ்கியதால் அதனை இப்போது ஆய முடியாது உள்ளது. தமிழர்கள் காலம் காலமாகக் கூறி வந்த தொன்மக்கதையில் பெரும் பகுதி இன்று உண்மையென்று ஆகி விட்ட நிலையைக் காண்கிறோம். இன்றும் சில புதிர்கள் தீர்க்கப்பட வேண்டும். தீர்க்கப்படுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.*

பழந்தமிழே என்பது பலர் கருத்து. இன்று 23 இற்கும் மேற்பட்ட திராவிட மொழிகள் உள்ளன. பல அழியும் நிலையிலுள்ளன. அழிந்தவை பலவாகும். கனியாகுமரி முதல் விந்திய மலைவரை இடைவிடாது வாழும் மக்களின் மொழியாகவும் வங்கத்தின் ஓரத்திலும் நேபாள எல்லையிலும் பாகிசுத்தானின் பகுதியாகிய பலுசிசுதானத்திலும் திராவிட மொழி பேசப்படுகின்றது. தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொராகா, (தென் திராவிட மொழிகள்) தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்யி, கதபா, கொண்டா, நாயக்கி, பெங்கோ, மண்டா (நடுத் திராவிட மொழிகள்) குருக், மாலதோ, பிராகூய் (வட திராவிட மொழிகள்) என்பன பொதுவாக அடையாளம் காணப்பட்ட திராவிட மொழிகளாகும்.

ஞானப்பிரகாச அடிகளும் தேவநேயப் பாவணரும் தமிழ்ச்சொல் அ, இ, உ என்னும் சுட்டில் முளையாகி அல் - இல் - உல் என வளர்ந்து மேலும் குல் - கல் - நுல் - புல் - முல் எனக் கிளைத்துருவாகின எனக் கூறினர்.

மாந்தன் பேசத்தொடங்கிய போது, பிறந்த மொழி தமிழ் என்பதைப் பாவாணர் பல எடுத்துக்காட்டுகளோடு விளக்கியுள்ளார்.

வாயை விரிவாயங்காத்தலால் சேய்மையையும் (ஆ) பக்கவாரியாய் கீழ்மேல் ஒடுங்கி யங்காத்தலால் (ஈ) அண்மையையும் இடைநிகர்த்தாய் குவித்தங்காத்தாலால் (ஊ) இடை மையையும் பக்கவாரியாயொடுக்கி கீழ்மேல் நீட்டியங்காத்தலால் (ஓ) உயரத்தையும் முதற்றமிழர் குறித்த தொலித்ததால் முறையே ஆ, ஈ, ஊ, ஓ என்னும் ஒலிகள் பிறந்தன. அந்த, இந்த, உந்த, ஓங்கு என்பன மேற்கூறிய அவரின் கூற்றுக்களுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். ஆ, ஈ, ஊ என்னும் முச்சொட்டுக்களிலிருந்தே இழைத்தல் மொழி பெரும்பாலும் உருவாயிற்று.

மேற்கூறிய பாவாணாரின் கருத்துக்கள் இன்று பல அறிஞர்களால் ஏற்கப்பட்டுள்ளன. உலக மொழிகளுக்கெல்லாம் முதன் மொழியாக ஒரு மொழி இருந்திருக்க வேண்டும் என்றும் பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

இன்றைக்குப் 10,000 ஆண்டுகளுக்கு முன்பு உலகெங்கும் (பனியூழி முடிவில்) கடல் மட்டம் உயர்ந்த போது இன்று நிலப் பகுதியை ஒட்டியுள்ள கண்டத்திட்டுக்கள் (கடலிலிருந்து சில நூறு கல் தொலைவு செல்பவை) கடலுள் மூழ்கின. இந்தப் பகுதியிலேயே பண்டைய நாகரிகங்கள் தோன்றின என்பார் சோவியத் அறிஞர் அலெக் சாந்தர் காந்திரதா. தமிழர்களால் குமரிக் கண்டம் எனக் கூறப்படுவது இந்த நீண்ட நிலப்பரப்பே.

தமிழ் நாட்டில் மயிலாடு துறையில் 2006 பிப்ரவரியில் கண்டெடுக்கப்பட்ட புதுக் கற்காலக் கருவி ஒன்றில் சிந்துவெளி எழுத்துக்கள் நான்கு உள்ளன. அவற்றை ஐ. மகாதேவன் அவர்கள் 'முருகு அன்' (முருகன்) எனப் படித்துள்ளார். புதுக் கற்காலத் தமிழ் மக்களும் சிந்துவெளி மக்களும் ஒரே மொழியைப் பேசினர் என்பதை இந்தக் கண்டுபிடிப்பு எடுத்துக் காட்டுகின்றது என மகாதேவன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 700000 ஆண்டுகளில் 17 தடவைகள் கடல் மட்டம் தாழ்ந்து இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தரைவழித் தொடர்பை ஏற்படுத்தியிருந்தது. இறுதிப் பிரிப்பு 7000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பார் இலங்கையின் முன்னாள் தொல்பொருள் ஆய்வாளர் திணைக்களத்தின் தலைவர் தெரிணியகல அவர்கள். அவர் மேலும் இரணமடுப்படிவங்கள் குறித்த ஆய்வுகள் இங்கு கற்காலத்தை 250.000 ஆண்டுகள் பழைமையான தாக்கும் என்றும் ஆதிவாசிகளான வேடர்களில் மேற்கொள்ளப்பட்ட மரபியல் சார் ஆய்வுகள் புதும மனிதர்கள் தென்னாசியா, தென்கிழக்காசியா, ஒரு வேளை தென் சீனாவிலிருந்தே திரிவாக்கம் அடைந்தனர் என்ற முடிவுக்கு வரச் செய்கின்றன. ஆபிரிக்காவிலிருந்தே புதும மனிதன் திரிவாக்கமடைந்தான் என்ற முடிவுக்கு இந்த முடிவுகள் அறை கூவலிடுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறிய ஆய்வுகள் எல்லாம் ஒரு விடயத்தையே மறைமுகமாகச் சுட்டுகின்றன. அதாவது எம் தாய் மொழியின் தொன்மையைச் சுட்டுகின்றன.


தமிழில் எழுத்துக்கள் எப்போது தோன்றின என்ற சர்ச்சை இப்போதும் தொடர்கின்றது. வடக்கிலிருந்தே (வடபிராமி) எழுத்துக்கள் தெற்கே வந்தன (தென்பிராமி) என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டது. ஆனால் அண்மைக்காலக் கண்டுபிடிப்புக்களும் ஆய்வுகளும் எழுந்து தெற்கேயிருந்தே வடக்கு நோக்கிச் சென்றுள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் தொகுதி - 03 பகுதி - 02 இல் பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது என்றும், குறிப்பாக அவற்றுள் பழமையானதான தமிழுக்காகவே அது தோற்றுவிக்கப்பட்டதென்றும் பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும் நாளடைவில் இந்தியா முழுவதும் அதுவே பழக்கத்தில் நிலவியது என்றும் திரு.டி.என் சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளதை மொழி அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

முற்காலத் திராவிட மொழியே வட நாட்டுப் பிராகிருத மொழி. ஆரியரின் முன்னோர் மொழியும் பிராகிருதமும் இணைந்ததே வேதமொழி. வேத மொழியும் தமிழும் இணைந்ததே சமற்கிருத மொழி எனப் பாவாணர் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரிய ஒரு கூற்றாகும்.

இந்திய இலக்கியங்களுள் தொன்மை மிக்கது சங்க இலக்கியமே. சங்க இலக்கிய

https://tamileelamarchive.com/



கிளிநொச்சி ஆனைவிழுந்தானில் அகழ்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்ட 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்கால மண் உருவச்சிற்பம்

தமிழில் எழுத்துக்கள் எப்போது தோன்றின என்ற சர்ச்சை இப்போதும் தொடர்கின்றது. வடக்கிலிருந்தே (வடபிராமி) எழுத்துக்கள் தெற்கே வந்தன (தென்பிராமி) என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டது. ஆனால் அண்மைக்காலக் கண்டு பிடிப்புக்களும் ஆய்வுகளும் எழுந்து தெற்கேயிருந்தே வடக்கு நோக்கிச் சென் றுள்ளது என்பதை உறுதி செய்கின்றன.

காலம் குறித்தும் சர்ச்சைகள் இல்லாம லில்லை. அதன் காலத்தை கி.மு.500 - கி.பி.200 வரை என்பர். சங்கம் மருவிய காலம் அல்லது நீதி நூல் காலம் கி.பி.100 - கி.500 வரை என்பர்.

சங்க இலக்கியங்களை எட்டுத்தொகை, பத்துப் பாட்டு எனத் தொகுத்துள்ளனர். அக நானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற் றிணை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, கலித் தொகை, பரிபாடல் ஆகிய நூல்களை எட்டுத் தொகையென்பர். பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பா ணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மது ரைக் காஞ்சி, நெடு நல் வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம், திருமுருகாற்றுப்படை ஆகிய நூல்களைப் பத்துப்பாட்டென்பர்.

மன்னன் இளம் பெருவழுதி இந்த உலகம் மெய். அது மாயையல்ல. அமிர்தம் எனினும் தனித்து உண்ணாமல் பிறர்க்குத் தந்து, புகழ் எனில் உயிரைத் தந்து பழி எனில் இந்த உலகே பரிசாகக் கிடைத் தாலும் அதைச் செய்ய மறுத்து ஆசை அற்று, பிறர்க்கு உழைக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள் அவர்களால் இந்த உலகம் வாழ்கிறது எனக் கருத்துப்பட எழுதிய சங்க இலக்கியப் பாடலை தனிநாயகம் அகளார் ஓர் ஒப்பற்ற பாடலாக குறிப்பிட்டுள்ளார்.

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையராகித் தமக்கென
முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

தமிழர் பண்பாட்டின் களஞ்சியங்கள் என தொல்காப்பியப் பொருளதிகாரம், குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரத்தை அடிகளார் குறிப்பிடு வார். அதேபோல் உலக நீதி இலக்கியங் களைச் சிறப்பாக ஆராய்ந்து பெரும் நூல் களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் 'திருக் குறளைப் போல் உயர்ந்த கோட்பாடுக ளைக் கொண்ட ஒரு நூலை இவ்வுலகில் காண்பது அரிது' என்று குறிப்பிட்டுள்ள தையும் இங்கே சுட்டிக்காட்டல் பொருத்த முடையதாகும்.

இந்தக் கட்டுரையில் தமிழின் தொன்மை குறித்து ஓரளவு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. தமிழின் வேர் உலகெங்கும் எவ்வாறு பரந்துள்ளது என்பதற்கு திரு.அர சேந்திரன் எடுத்துக்காட்டியுள்ள ஒரு சிறு விளக்கத்தோடு இக்கட்டுரையை முடிவுக் குக் கொண்டு வருதல் பொருத்தமானதா கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எல் | எல்பு | எம்பு | எம்புதல் | மேலெழுதல் |
| எல் | எல்கு | எக்கு | எக்குதல் | வயிற்றை மேலே உயர்த்தல் |
| எல் | எல்கு | எக்கு | எக்கர் | நீர் நிலைகளில் உயர்ந்திருக்கும் மணல் திட்டு |

கதிரவன் தமிழில் 'எல்' என அழைக்கப் படுவதுண்டு 'எல்' என்பதற்கு உயர்தல், மேலெழுதல் என்பதே மூலப் பொருள்.

கதிரவன் காலையில் கீழ்த்திசைக் கடலில் தோன்றி மேலெழுந்து உயர்ந்து வரும் தோற்றத்தைத் தருவதால் பழந் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அதனை 'எல்' என அழைத்தனர்.

எல் - எலு - எளு - எழு என எழுதல் சொல் தமிழில் பிறந்தது. இந்த 'எல்' எனும் எழுதற்பொருள் வேர் இலத்தீன் மொழியில் 'elevo' என உயர்தல் மேலேழுதல் பொரு ளில் பதிவாகியுள்ளது. 'Israel' என்பதில் உள்ள 'el' என்பதற்கு கதிரவன் என்பதே பொருள். பாபிலோனுக்கு ஈபுரு மொழி வடி வம் 'babel' என்பது 'bab' என்பதற்கு நுழை வாயில் என்றும் 'el' என்பதற்குக் கடவுள் என்றும் பொருள் உரைக்கின்றனர். பாபி லோனின் நுழைவாயிலில் ஞாயிற்றுக் கட வுளுக்க உயரமான கோயில் எழுப்பி யிருந்தார்கள். கிரேக்க ஞாயிற்றுக் கடவு ளுக்க 'Apollo' என்பது பெயர். 'ello' என்ப தற்கு ஒளியுடையது என்பது பொருள். மேற் காட்டிய 'எல்' என்ற சொல்லுக்குத் தமிழில் தான் வேர் உண்டு. இவ்வாறு உலகம் பரவிய தமிழின் வேர் குறித்து அண்மைக் காலத்தில் ஓரளவு விரிவாக ஆராயப்படு கின்றன. அண்மைக் காலத்தில் இவ்வகை ஆய்வில் திரு.அரசேந்திரனின் பங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

உலகின் மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி தமிழே. இன்று கணினி உலகில் கணினி மொழிக்கும் ஏற்ற மொழியாக இருப்பதும் தமிழே. இயல்பாகப் பிறந்த மொழிக்கு உரிமையாளர்களாகிய நாம் அதன் தொன்மையை, பெருமையை, புது மையை அறிந்து போற்றுவோம் எமக்கான தாயகமொன்றை அமைக்க ஒன்று பட்டு நிற்போம்.

கருவிநூல்கள் :

தமிழறிவோம் - முனைவர்.கு.அரசேந்திரன்
தமிழ் இலக்கிய வரலாறு - மு.வரதராசன்
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் - உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
முதற்றாய்மொழி - ஞா.தேவநேயப் பாவாணர்.
ஒப்பியன் மொழிநூல் - ஞா.தேவநேயப் பாவாணர்
சங்க கால நடுகற்கள் கண்டுபிடிப்பு - கா.ராசன்
தமிழ் நாகரிகமும், சிந்துவெளி நாகரிகமும்:
தென்பெருங்கடல் ஆய்வுகள் சோவியத் அறிஞர் அலெக்சாந்தர் காந்திரதாவ் , தமிழாக்கம் பி.இராமநாதன்.
A bridge to srilanka – Vesak Com memoration lecture 2004.
by Dr.R.U. Deraniyagala – Front line 18.06.2004.

https://tamileelamarchive.com/

# « ஈழத்தமிழர்களின் தனியரசுக்கோரிக்கை சாத்தியமானது »

கரன் பாக்கர்





24.02.2008 அன்று பிரான்ஸ் வாழ் தமிழர்களின் தாய்த் தமிழ்ச்சங்கமான தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், மக்கள் தொடர்பாளர் திரு. திருச்சோதி அவர்களின் தலைமையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இதில் மனித உரிமை அமைப்பின் செயற்பாட்டு பிரதிநிதி திரு. கரன் பாக்கர் அவர்கள் கலந்துகொண்டு பேசுகையில், ஈழத்தமிழர்களின் ஜனநாயக அரசியல் அபிலாசைகளின் மக்கள் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் தான் என்பதை சுட்டிக்காட்டினார். மேலும் அவர் பேசுகையில் சிங்கள அரசால் கட்டவிழ்த்துவிடும் ஆயுத ஆக்கிரமிப்பின் கோரத்தாண்டவம் பற்றியும், இந்த ஆயுத ஆக்கிரமிப்பால் ஈழத்தமிழினம் படும் வேதனை, இன்னல்கள் தாங்கமுடியாதவை என்றும் இந்த இன்னல்கள் நிறைந்த ஈழத்தமிழர்களின் மாபெரும் மனித அவலமானது யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத மிகப்பெரிய அப்பட்டமான மனித உரிமை மீறல் எனவும் கூறினார்.

ஈழத்தமிழர்கள் பிரிந்து செல்லக்கூடிய அளவிற்கு தனித்துவமான தேசிய இனம் என்பதுடன், ஈழத்தமிழர்கள் பண்டைய வரலாற்று நாகரீகம் உள்ள இலங்கையின் பரம்பரை இனம் என்பதை, வரலாற்றுத் தொன்மை வாய்ந்த அகழ் ஆராய்ச்சி சான்றுகள் மூலமும் நிரூபணமாகி உள்ளன. ஆகவே இதை உலகம் புரிய வேண்டும். ஈழத்தமிழன் தனியாகப்பிரிந்து செல்ல முடியும் என்பதையும், அதற்கான சகல உரிமைகளையும் கொண்ட இனம்தான் என்பதனையும் அவர் பேசும் போது கூறினார்.

மேலும், இந்த ஈழத்தமிழினம் ஓர் தனியான தமிழ் அரசர்கள் ஆட்சிக்குட்பட்ட முழு இலங்கையையும் ஆண்ட இனம். வேற்றுநாட்டவரின் வருகையின் பின்பே இந்தப்பாரம்பரிய தமிழினம் தங்களுடைய ஆட்சி இறையாண்மையை இழந்து இன்று நிர்க்கதியான, இக்கட்டான போர் சூழ் நிலைக்குள் சிக்குப்பட்டு, பெரும் உயிர் இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. இதிலிருந்து மீள்வதற்கு புதிய வாழ்வாதாரங்கள் கொண்ட, அரசியல் அபிலாசைகளுக்காக போராடிக்கொண்டிருக்கின்றது. என்பதோடு; ஈழத்தமிழர்களின் அரசியல் ரீதியான தனிநாட்டுக் போரிக்கை சரியானது என்றும், ஈழத்தமிழினம் தனித் தமிழீழம் அமைக்க சகலவிதமான அரசியல் தகுதிகளும் இருக்கும் இனம் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

த.ரமணன்

https://tamileelamarchive.com/

# புரிந்துணர்வு

«

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு வாழும் வாழ்க்கை என்பது அருகிக்கொண்டு போவதற்கு அடிப்படையாக உள்ள காரணம் என்ன. வாழ்க்கையே ஒரு போராட்டமாக அமைய இன்றுள்ள வறுமை, போர், இடப்பெயர்வுகள், மட்டும்தான் காரணமா? குடும்ப அமைப்புக்கள் கோவில்கள் போல் இல்லாவிட்டாலும் குழப்பமின்றியாவது இருக்கப் புரிந்துணர்வு மிக அவசியம்.

»



உலகம் எப்போதும் உருண்டு கொண்டிருக்கிறது என்று சொன்னதை பண்டைக்காலத்தில் யாரும் நம்ப வில்லை. உலகம் எப்படி உருளும் அது தட்டையானது என்பதாக இருந்தது. அவர்கள் அறிவு போன்றது தான் உண்மையும் பொய்யும்.

பொய் எப்போதும் உரக்கப் பேசப்படுவதால் அதுவே மெய்யாகி வருகிறது. இன்றைய சமுதாயத்தில் பெருமளவு குடும்பங்களின் வீழ்ச்சிக்கு அதுவே காரணமாகி விடுகிறது. பொய் பேசுதல் என்பது எல்லோருக்கும் கைவந்த கலையாகிவிட்டது. இதனால் உண்மை கூட களங்கப்பட்டுப் போகிறது.

என்னுடன் பணியாற்றும் இளைஞன் ஒருவன் ஒரு வயதுப் பையனுக்குத் தந்தை ஒரு நாள் தனித்தனி உந்துருளிகளில் முறிகண்டி வரை போனோம் வரும் போது சேர்ந்தே வந்தோம் நான் சற்று முன்னுக்கு வந்து விட்டேன் கூட வந்தவனைக் காத்து இரணைமடுச் சந்தியில் நின்றேன். ஒரு ஐந்து நிமிடம் கழித்து வந்தவன் கைக்குழந்தையுடன் ஒரு இளம் பெண்ணைத் தன் பின்னால் ஏற்றி வந்தான் நான் நின்ற இடத்துக்கு சற்று முன்பாக ஒரு மிதிவண்டித் திருத்தகம் அந்தப் பெண் ஓட்டி வந்தவனின் தோளில் ஒரு கையும் மற்றக் கையில் குழந்தையையும் அணைத்தபடிதான் வந்து அந்த மிதிவண்டித் திருத்தகத்தின் முன் வந்து இறங்கினாள்.

அந்த (அந்த அன்னியோன்னியம்) நெருக்கம் எனக்கு அவள் இவனுடைய மனைவி அல்லது தங்கை என்ற உணர்வை ஏற்படுத்தியது. இதற்குள் மிதிவண்டித் திருத்தகத்தில் இருந்த ஒரு இளைஞன் ஓடிவந்து குழந்தையை கையில் வாங்கியவாறு ஏறிக்கொண்டு வந்தவனைப் பார்த்து

"நன்றி அண்ணை"... என்று விட்டு பக்கத்தில் நின்ற பெண்ணிடம் இரங்கலாக, "நான் இந்தா வந்திடலாம்

https://tamileelamarchive.com/

எண்டுதான் வந்தன் சைக்கிள் காத்துப்போட்டுது. இந்தா வேலை முடிஞ்சுது போவோம்" என்று விட்டு மீண்டும் இவனிடம் "பிறகு நல்ல காலம் அண்ணை நீங்க வந்தது ஆஸ்பத்திரிக்குப் போறம்... நேரம் போட்டு..." என்று மீண்டும் சமாதானம் சொன்னான்.

எனக்குள் இருந்த அழுக்காறு என்னும் மலை சரிய நான் என்னுடன் வந்த இளைஞனைக் கேட்டேன்.

"அறிஞ்ச ஆக்களே".... "ச்சீ... பஸ்சில்லத்தானே குழந்தையோட நடந்து வந்தவ ஏத்திக் கொணர்ந்தன்" என்றான்.

என்ன சொல்ல எனக்குள் பெரிய இருள் மெல்ல விலகியது. இது மனிதாபிமானம் இவன் செயல் என்னையே கலங்கமாக எண்ண வைத்த போது அந்தப் பெண்ணின் கணவன் ஒரு சாதாரண விறகு வியாபாரி அவன் மகிழ்வோடு ஏற்றி வந்தவனுக்கு மறுபடி நன்றி சொன்ன பாங்கு என்னை வியப்பிலாழ்த்தப் பெரிய காரணமும் இருந்தது.

ஒரு பெண் தனது கணவனைத் தன்னோடு இனி வாழக்கூடாது என்றொரு கட்டளையைக் கோரி வழக்குத்தாக்கல் செய்ய விரும்பி வந்திருந்தாள். இதற்குஅவள் சொன்ன காரணம் அவன் வேறொரு பெண்ணைத் தன் மிதிவண்டியில் ஏற்றி வந்ததைத் தான் கண்டேன் என்பதாகும் அதாவது அவளுக்கும் அவனுக்கும் ஏற்கெனவே பழக்கம் இருந்ததா?... அது ஒரு கேள்வியாக அவளுக்கு இல்லை.

"அப்படி தெரியாது ஆனால் இவர் மிதிவண்டியில் ஏற்றி வந்தது மெய்"

"அப்படியாயின் நீ அதை அங்கேயே கேட்டிருக்கலாமே...?"

என்றாள் அவள் அதை தான் காணவில்லையாம். அவளுடைய தம்பி வந்து சொன்னானாம்.

"சரி....அந்தப் பெண் யார்?"

"அதுவும் தெரியாதா?"

ஓட்டுமொத்தமாக அவள் தன் கணவனைத் துன்புறுத்த இப்போது கண்டுபடித்த இலகுவான வழி இது என்று தெரிந்தது.

பெண்களுக்கான சட்டங்கள், சலுகைகள், சமத்துவ அறிவுரைகள் என்பன அவர்களது சமுகபொருளாதார அபிவிருத்திகளையும் அதனூடாக வரும் தேசிய நலன்கள் பற்றியே நோக்குகின்றது.

இதுவே தான்தோன்றித்தனமான பாலியல் உறவுக்கும் அதனூடான சந்ததி விருத்திக்கும் கூட வழி செய்கிறது. ஏராளமான பெண்கள் இளவயதிலேயே தமது துணையைத்தேட ஆரம்பித்தும் விடுகின்றனர்.

குமகாயப் போக்கின் படி வரிசலற்ற உறவே விருத்திக்கும் வழியாகும் தாம் எண்ணுவதெல்லாம் அப்படியே நடக்க வேண்டும். என்ற சினிமா மாயை எம்முள் வேரோடியுள்ளது.

எல்லாவற்றிலும் ஏற்றத்தையும் நாகரீகத்தையும் எதிர்பார்க்கும் நாம் ஆணும் பெண்ணும் கூடிப் பேசுவதிலும், பயணிப்பதிலும், இன்னமும் கரவுவைத்துப் பார்க்கிறோம்.

ஆதரவற்ற ஒரு பெண்ணை அவளுக்கு உதவு முகமாக ஒரு ஆண் மிதிவண்டியிலேயோ, உந்துருளியிலோ ஏற்றிச் செல்வது தவிர்க்கமுடியாததே இது தவறாயின் பேருந்தில் பயணிக்கும் போது யார் அருகில் இருக்கிறார். யார் பக்கத்தில் நிற்கிறார்கள் ஏன்றா பார்க்கிறோம். இல்லையே மனங்களில் இன்னும் இருள் போர்த்தேயிருக்கிறது.

ஆண்கள் நிற்கும் திசைக்கே பெண்கள் போகாத காலம் இருந்தது மாமியார் மருமகனுடன் (மகளின் கணவன்) முகம் கொடுத்தும் பேசார் இன்று ஏராளமான மருமகன்கள் மாமியாரை மருத்துவ மனைக்கோ வேறிடங்களுக்கோ மிதிவண்டியில் அல்லது உந்துருளியில். அழைத்துச் செல்வதைக் காண்கின்றோம்.

« எல்லாவற்றிலும் ஏற்றத்தையும் நாகரீகத்தையும் எதிர்பார்க்கும் நாம் ஆணும் பெண்ணும் கூடிப் பேசுவதிலும், பயணிப்பதிலும், இன்னமும் கரவுவைத்துப் பார்க்கிறோம். »

எங்களூரில் ஒரு நபர் மிகவும் சிக்கனக்காரர் உழைப்பென்றால் பேய்போலத்தான். அவருக்கு ஒரு அழகான இளம் மனைவி அவளுக்கு மேலும் அழகு செய்வதில் ஆர்வமாக புடைவை நகை என்று வாங்குவான் ஊரில் தப்பித்தவறி ஏதும் எல்லோரும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியென்றாலும் அவளையே அனுப்புவான் தொலைவாக இருந்தால் சற்றும் கூசாமல் அங்கு செல்லும் நண்பர்களிடம் கேட்பான்.

"சுப்பிரமணியம் நீ போனா தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு போடா எனக்கு நேரமில்லை" என்பான் ஒரு நாள் வேலையை இழக்க விரும்பாமல் இவன் தங்கச்சி என்றது அவன் மனைவியைத் தான் கொஞ்சம் இளையவர் போல் தோன்றினால் அக்காவையும் ஏத்திக் கொண்டு போடா என்பான்.

இப்பிடியே இவன் நடந்து கொள்வது ஊரால் வேடிக்கையாகக் கேலிசெய்யப்படுவதுண்டு.

"ஆரம் கூட்டிக் கொண்டு போயிடுவாங்கள்" என்றால் சற்றும்... தயங்காமல்.

"அக்கா தங்கச்சியை ஆர் கொண்டு போறது" என்றான் அதோட என்ற மனிசிய எனக்கு விளங்கும் என்பான்.

இதுதான் திருமணப்பதிவேயில்லாமல் எண்பது வருடங்களுக்கு மேலாக பேரன், பேத்தி என வாழ்ந்த எமது மூதாதையர்களின் உளப்பண்பு.

ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழும் வாழ்க்கை என்பது அருகிக்கொண்டு போவதற்கு அடிப்படையாக உள்ள காரணம் என்ன வாழ்க்கையே ஒரு போராட்டமாக அமையக் காரணமாக இன்றுள்ள வறுமை, போர், இடப்பெயர்வுகள், மட்டும்தான் காரணமா? குடும்ப அமைப்புக்கள் கோவில்கள் போல் இல்லாவிட்டாலும் குழப்பமின்றியாவது இருக்கப் புரிந்துணர்வு மிக அவசியம். அற்ப விடயங்களுக்காக சட்டத்தை நாடி அதையே பெரிய விடயமாக்கி நாளா வட்டத்தில் நிம்மதியைத் தொலைத்துவிட்டு அலையாமல் இன்றைய சகவாழ்க்கை முறையை ஏற்கப் பழகுவோம் உடையாத குடும்ப அலகுகளால் எமது விடுதலை தேசத்துக்கு அழகு சேர்ப்போம் ஒருவரோடொருவர் மனம் விட்டுப் பேசுவோம்.

https://tamileelamarchive.com

எஸ்.ராஜரத்தினம்

# வரட்சி



பல வருடங்களாக போர்க்காலத்தில் இங்கிலாந்தில் சட்டத்துறையில் பிரகாசித்த எஸ்.ராஜரத்தினம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். மலேசியாவில் வாழ்ந்து வந்த இவர் பின்பு சிங்கப்பூரின் வெளிநாட்டமைச்சராகவும் இருந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின்போது விமானத் தாக்குதல்களுக்கு மத்தியில் கதைகளை எழுதினார். வன்னிப் பகுதியொன்றின் கிராமத்தை பகைப் புலனாகக் கொண்ட இக்கதை நாற்பதுகளில் எழுதப்பட்டது. உயிர்க்களையுடன் கதை எழுதப்பட்டுள்ளது. என ஆங்கிலத் தொகுப்பின் தொகுப்பாசிரியர் கூறுகிறார். ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் நடத்தப்பட்ட ஏசியா சஞ்சிகையிலிருந்து இது அத்தொகுப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.

தனது தன்மையை இழந்து காலியாகிப் போனது நிலம். சலிப்பை ஏற்படுத்தி கண்ணைக் கூசச்செய்யும் வகையில் வெயில் எறித்துக் கொண்டிருந்தது. பூமி வேதனைக்குரலில் புலம்பிக் கொண்டிருந்தது. அடிக்கடி பூமியிலிருந்து வந்த வெப்பம் எரிமலைக்குழம்பை நினைவு படுத்தியது. மூச்சுத் திணறித் துடித்துக் கொண்டிருந்த பல்லி ஒன்று நிழலை நாடி கொதித்துக் கொண்டிருந்த பாறையொன்றின் வெடிப்புக்குள் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது. கால்நடைகளும், நாய்களும், மரங்கள் தந்த அற்ப சொற்ப நிழலில் ஒடுங்கிப் போய் சுருண்டு கிடந்தன. அவை மழைவந்து இந்த வெப்பத்தையும் நீக்கி தாகத்தையும் தீர்க்கும் என எதிர்பார்த்துக் காத்திருந்தன. ஆனால் வெப்பமோ நாளுக்கு நாள் தீவிரமாகி நெருக்கு வாரம் ஒன்றை ஏற்படுத்தியது. கண்ணுக்குத் தெரியாத வெப்ப அலையால் பாதிப்புள்ளாகிய உயிரினங்கள் எல்லாமே விறைத்துப்போய் பொசுங்கியவை போலாகின. மயிரிழைகள் போல் தோன்றிய மழையைத் தராசு பொய்யான முகில்களே வானத்தில் தெரிந்த அவையும் அள்ளுப்பட்டுக் கொண்டிருந்தன. கொடிய விளைவுகள் வரப்போகின்றன என்ற பயப்பிராந்தி விவசாயிகளின் இதயங்களில் நிறைந்திருந்தது. அது அவர்களின் முகங்களில் பிரதிபலித்தது. வயலில் கிடந்த நெல்லை அவர்களால் வெட்டி வரமுடியாது வயல்களுக்கு நீர் போதாமல் போய்விட்டது.

அவை நிலத்தில் மெதுவாக நைந்துபோய்க் கொண்டிருந்தன. இவற்றுக்கெல்லாம் மேலாக வரட்சி தொடர்ந்து நீடிக்குமானால் அவர்களது கால் நடைகளும் நீரின்றி இறந்து போய் விடக்கூடும்.

சில கிராமத்தவர்கள் பயனற்ற நடவடிக்கையாக நிலத்தைத் தோண்டி நீரைத் தேடினார்கள். நிலத்தின் மேலாகவோ அல்லது ஆழத்திலோ நீர் தென்படவில்லை. நீர் இருப்பதென்னவோ. கிராமத்தில் உள்ள இரு குளங்களில்தான். அவற்றின் மட்டம்கூட குறைந்து வருகின்றது. கால்நடைகளுக்கு அதிலிருந்து நீர் எடுக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டு விட்டது.

ஆனால் அங்கு வேறொரு குளமும் இருந்தது. அதனால் கால்நடைகளுக்கு சில நாட்களுக்கு நீர் வழங்கிட முடியும். அந்தக்குளம் வேலமுதலியார் என்ற தனிமனிதருக்குச் சொந்தமானது. கிராமத்தவர்கள் அதிலிருந்து நீர் பெறுவதை அவர் அனுமதிக்கவில்லை. அவர்கள் நீருக்காக பணம் செலுத்தவும் தயாராக இருந்தனர். அதற்கும் முதலியார் ஒத்துவர மறுத்தார். அவர்கள் பல வழிகளில் அவரை மிரட்டிப்பார்த்தனர் ஆனால் முதலியார் படியவில்லை. அவர் இந்தச்

https://tamileelamarchive.com

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மேலும் பணக்காரனாக எண்ணினார். அவர் கிராமத்தவர்களின் கால் நடைகளை அவர்களை முட்டாள்களாக்கும் வகையிலான ஒரு விலைக்கு கேட்டார் அவரது கோரிக்கைகளுக்கு அவர்கள் இணங்காமல் போகவே அவர் ஒரு மனச்சாட்சியற்ற கசப்புணர்வுடன் நீங்கள் உங்களின் கால் நடைகளை ஒரு தோல் பதனிடுபவனிடம் ஒப்படைக்கப் போவதற்கான வழியைத்தான் தேர்தெடுக்க விரும்பினால் அதற்கான சுதந்திரமும் உங்களுக்குண்டு என்றார்.

சிறிது காலம் இப்படியே சென்றது. பின்னர் விவசாயிகள் முதலியாரின் வழிக்கே வந்தனர். வயதான காத்தார் மட்டும் வாழாவிருந்தார் சிறிது காலம் காய்ச்சலால் நோயுற்றிருந்தவர் கொட்டிலில் வேயப்பட்டிருந்தது. ஐம்பது வயதைக் கடந்தாலும் கூட அவர் இப்போதும் பலசாலி போலவே தோற்றமளித்தார். பரம்பரையில் ஏற்பட்டதோ பிறழ்வு அவரையொத்த வயதுடைய விவசாயிகளுக்கு ஏற்படும் கொடுமையான உடல் தாக்கத்திலிருந்து அவரைக் காப்பாற்றி இருந்தது. அவரது வற்றாத பலமும் அதனால் ஏற்பட்ட உயர்ந்தவன் என்ற எண்ணமும் ஒரு விதமான குற்ற உணர்வை அவரில் ஏற்படுத்தியிருந்தன. அவருக்கு தெரிந்த காலம் முதல் தமது வாழ்வை தனது மூதாதையர்களுக்கு சொந்தமான இந்த நிலத்தை இழந்து விடாமல் இருப்பதற்கான வழிகளிலேயே செயல்பட்டு வந்தார். இந்தப்பணியில் அவர் தனக்கு திருப்தி ஏற்படும் வகையில் தன்னை அர்ப்பணம் செய்திருந்தார். தனது மூதாதையர்கள் போலவே அந்தக்கடமையை அவரும் செய்திருக்கிறார். அவர் இறந்த பின்பும் அவரது இரு பிள்ளைகளும் அதனைத் தொடர்வார்கள்.

அவர் மூத்தவனாக ராசுவைப்பார்த்தார். அவன் பிரமாண்டமான தோற்றம் கொண்ட ஒரு மனிதன். அவன் வயலில் கஸ்டப்பட்டு வேலை செய்யும்போது அவனது தசைகள் கடல் அலைகள் போல் மேலேயும் கீழேயும் அசைவதைப் பார்த்துக்கொண்டிருப்பது என்னவோ, உண்மையில் மகிழ்ச்சியையே உண்டு பண்ணும். அவன் நல்ல பண்பாடும் அமைதியும் உடையவன். ஆனால் அலங்கோலமாகவே இருப்பான். அதனால்தானோ என்னவோ அவனது மனைவி சரஸ்வதிகூட எப்போதும் அவனுடன் திமிராக வாக்குவாதம் செய்தபடியிருப்பாள். அவன் ஒரு நல்ல



மகனைப் போலவே செயற்பட்டான். எதிலும் எச்சரிக்கையாக இருக்கும் தன்மை அவனிடம் இல்லாமலிருந்தாலும்கூட அதற்குப் பதிலாக அவனிற்கிருந்த பலம் அவனுக்கு துணையாக இருந்தது.

சூரியரோ எப்போதும் ஒரு பிரச்சனைகுரியவனாகவே இருந்தான். உருவத்தில் மிகவும் மெலிந்தவனாகத் தோற்றமளிக்கும் அவன் ஒடிந்து விடுபவன் போலத் தென்பட்டான். அடிக்கடி வரும் நோய் வேறு அவளை பழிவாங்கிக் கொண்டிருந்தது. அவன் குனிந்து நடப்பதைப் பார்த்தால் காச நோய்க்காரன் போல இருக்கும். அவன் அதிகம் பேசாதவனாகவும் மனநிலை அடிக்கடி மாறுபவனாகவும் இருந்தான். அவன் அளவுக்கதிகமாக வாசித்தான். அவன் பேசும் போது அதில் தெரியும் உணர்வும் உயிர்த்துடிப்பும் கேட்கும். ஒருவனை வியப்பில் ஆழ்த்தி அவனைப் பலவீனமடையப் பண்ணிவிடும் காலங்காலமாக தொடர்ந்து வரும் அவர்களது நம்பிக்கைகளை நையாண்டியுடன்கூடிய தர்க்கத்துடன் அவை வெறும் முட்டாள் தனமானவை என அலட்சியமாக அவன் கூறும்போது விவசாயிகள் வாயடைத்துப் போயிருப்பார்கள்.

அவன் ஒடுக்கப்பட்டவர்களுக்கு கிடைக்க வேண்டிய நீதிபற்றிப் பேசுபவன். அவன் மனதில் முதலியார் போன்றவர்களின் மேல் வெறுப்பு ஆழமாகத் துளையிட்டது போல் பரவிக்கிடந்தது. இது அவனை விவசாயிகளின் பிரச்சனைகளில் ஈடுபடவைத்தது. அவர்களை ஒடுக்குபவர்களுக்கு எதிராகப் போராட வருமாறு அழைப்பு விடுவான். அதைக்கேட்டு அவர்கள் திகைத்துப் போவார்கள்.

ஆச்சி என செல்லமாக அழைக்கும் காளை மாட்டை அவனே முதலியாருக்கு விற்கக்கூடாது என முனைப்பாக நின்றவன் காத்தாரும் ராசுவும் கூறிய காரணங்கள் அவனுக்கு ஆத்திரத்தை மேலும் உண்டு பண்ணின. அந்த திருடனுடன் வியாபாரத்தைச் செய்வதை விட காளை மாடு இறந்து போவதைப் பார்க்கவே அவன் விரும்பினான். அவன் முதலியாரின் மேல் வன்முறையைக்கூட பாவிக்கவேண்டி வந்தாலும் வரலாம் எனச் சூளுரைத்தான். அவன் சொன்னபடி செய்யக்கூடியவன் என்பதால் காத்தரும் தற்காலிமாக மகனின் விருப்பத்திற்கு உடன்படுபவர் போல இருந்தார்.

காத்தார் பாயில் படுத்திருந்தார் அது வியர்வையால் பிசுபிசுத்துக் கிடந்தது. அவர் சூரியனை ஏறிட்டுப்பார்த்தார். ஆச்சி விசயத்தில் எப்படி அவனைச் சரிக்கட்டுவது என்பது தெரியாமல் விழித்தார். சூரியோ புத்தகத்தில் மூழ்கிக் கிடந்தான். வேறு வேலைகள் இல்லாத போதெல்லாம் அவன் செய்வதெல்லாம் இதுதான். ராசு அவனுக்கெதிரே குந்திக் கொண்டிருந்தான். இந்த வெக்கையில் அவனால் சௌகரியமாக இருக்க முடியவில்லை. அவனது வயிற்றிலிருந்து வழிந்த வியர்வையை கைவிரல்களால் தட்டி விட்டான்.

அவருடைய முதுகிலிருந்த வியர்வையை மண்சுவர் உறுஞ்சி கருமையான ஈரம் பொருந்திய அடையாளங்களை சுவரில் ஏற்படுத்தியிருந்தது. வீட்டுக்குள் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்த தனது மனைவியை இடையிடையே ராசு பார்த்தபடியிருந்தான். ஆழ்ந்த அமைதி அறை எங்கும் சிறிதுநேரம் வியாபித்திருந்தது. சூரியர் புத்தகத்தை சட்டென மூடி அந்த அமைதியை அகற்றினான். இந்த வெக்கைக்கு முடிவே இல்லையா.

ஓம் ஓம் என ராசுவும் ஒப்புக் கொண்டான். அவனது உடல் முழுவதும் வெக்கையும் எரிவும் பரவி இருந்தன. நெருப்பில் இட்டதுபோல் உள்ளது. இந்தச் சாணத்தால் மெழுக்கப்பட்ட சுவரில் இருந்துகூட வெப்பமான ஆவி வீசுகிறது. என்னிடம் கருணை உண்டாகட்டும். நான் நீராகிப் போவதற்கு அதிக காலம் எடுக்காது.

எனக்கு இந்த வெக்கையில் மூச்சுத் திணறல் உண்டாகிவிடும் போலிருக்கிறது என சூரியர் கத்தினான் தனது தோளிலிருந்து இப்போது மட்டும் மழை ஒன்று பெய்தால் அது ஒரு வெள்ளத்தை உண்டாக்கினால்கூட பரவாயில்லை. இந்த வெக்கையில் காய்ந்து உலர்ந்து போய் தண்ணீர் விடாயாய் இறந்து போவதை விட

https://tamileelamarchive.com/

வெள்ளத்தில் மூழ்கிவிடுவது மேல். அவை எல்லாவற்றையும் பார். பேச்சு மூச்சற்றுக் கிடக்கின்றன. தமது விதிப் பயன்படி அவை அடங்கிப் போயுள்ளன.

சூரியர் இப்படிக் கொட்டித் தீர்த்ததைப் பார்த்த ராசு அதனை நன்கு ரசித்து கோமாளித்தனமாகச் சிரித்தான். தனது தம்பி ஒரு மாதிரியானவன் எனத் தெரிந்திருந்தாலும் ராசு அவனை மிகவும் நேசித்தான். ஆச்சி நடை தளர்ந்து பனை மரத்தடிக்குச் சென்றது. தனது தாகத்தை தணிப்பதற்கு ஏதாவது அதில் இருக்கிறதா என்ற நினைப்புடன் மாடு பனை மரத்தை நக்கியது. வரட்சியுடன் கூடிய சத்தம் சூரிக்குக் கேட்டது. பின்கொட்டிலின் திசையைப் பார்த்தபடி தீவனம் இருந்த இடத்தை மாடு அடைந்தது. தனது வறண்டு போன வீங்கிய வாயால் காய்ந்த புல்லை கிண்டிகிளறியது.

பாவம் இந்த ஆச்சி என ராசு தனது தலையை சிறிது அசைத்தபடி கூறினான். அது தாகத்தால் விரைவில் இறக்கப் போகிறது. அவன் தனது நாக்கால் அனுதாபத்தை உண்டாக்கும் கிளிக் என்ற சத்தத்தை உண்டாக்கினான்.

சூரி சடுதியாகத் திரும்பி தனது சகோதரனைப் பார்த்தான். ஆச்சியைப் பற்றி புலம்பாமல் சிறிதளவு நீர் அதற்குக் கொடுத்தால் என்ன? ஒ சிறிதளவு ஆயினும் கொடுக்கலாம்.

எனது தம்பியே, சொல்வற்கு மிகவும் எளிதாகவே நீ சொல்வது இருக்கிறது என ராசு மறுத்துரைத்தான். இனிமேல் குளத்திலிருந்து முன்பை விட குறைவாக நீர் எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். வீட்டுப் பாவனைக்கே நீர் போதாமல் இருக்கும் போது எங்கிருந்து நீர் வரும். ஆக இன்று காலையில் சிறிதளவு நீர் ஆச்சிக்கு கொண்டு போன போது என்ன தான் நடந்தது என நீ நினைக்கிறாய்? ஒரு தேங்காய்ச் சிரட்டையில் அதற்கு நீர் கொண்டு சென்றேன். பாவப்பட்ட அந்தப் பிறவிக்கு இருந்த தாகத்தில் நீரைக் கண்டவுடன் அது அமைதியை இழந்து விட்டது. ஒரே எட்டில் சிரட்டையைத் தட்டிவிட்டது. புத்தி கெட்ட அது நிலத்தில் சிந்திய நீரை நக்கி திருப்திப் படவேண்டியதாயிற்று பாவப்பட்ட ஆச்சி.

தனது பெரிய தலையை ராசு ஆட்டினான். சூரியர் அவனுக்கு அப்பால் கிடந்த எதையோ வெறுத்துப் பார்த்தபடியிருந்தான். காத்தார் அமைதியைக் குலைத்தார். அவரது கால் காய்ச்சலால் பலவீனமடைந்திருந்தது.

சூரி ஏன் ஆச்சியை அந்தப் பணக்கார முதலியாருக்கு விற்க வேண்டாம் எனக் கூறுகிறாய்? நீ பிழைவிடுகிறாய். அது சாவதை எம்மால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதை விற்று விட்டால் அது உயிரோடாவது இருக்கும். ராசு தனது தலையை தகப்பனாரின் கூற்றை ஆமோதிப்பது போல் ஆட்டினான். அப்பா கூறுவதும் சரியானதுதான் சூரி. ஆச்சியை இறந்து போக விடுவதால் யாருக்குமே எந்த லாபமும் ஏற்படப் போவதில்லை. பாவம் ஆச்சி அது படும் வேதனைகளை அதனால் கூறமுடியாது. பாவம் வாயில்லாத ஜீவன்.

சூரி அவர்கள் இருவரையும் பார்த்தான். திறந்து கிடந்த அவனது இதழ்கள் துடித்துக் கொண்டிருந்தன. நீங்கள் என்னதான் கூறுகிறீர்கள்? உங்களுக்கென்று எந்த வகையான பெருமைகளும் இல்லையா? மிகவும் நல்லது நல்லது. அந்தக் கயவனுக்கு ஆச்சியை விற்பதன் மூலம் நாம் வீழ்த்தப்பட்டுவிட்டோம் என்பதை அனுமதிக்கப் போகிறீர்களா? நாம் முதலியாரின் முன் நெளிந்து வளைந்து நிற்பது பார்ப்பதற்கு ஒரு நல்ல காட்சியாகத்தான் இருக்கும். வசதிக்கு இவை எல்லாம் ஒரு பொருட்டாகமாட்டா.

நாம் ஆரவாரம் செய்யாமல் மாட்டை அவருக்கு விற்றிருந்தால் எமக்கு சிறிது மதிப்பாவது மிஞ்சியிருக்கும்.

சூரியர் இடை மறித்தான். நான் எதைக் குறித்துக் கதைக்கின்றேன் என உங்களுக்கு விளங்கவே இல்லையா? நாம் முதலியார் போன்றவர்கட்கு எதிராக நிற்க வேண்டிய காலம் இது அவர்கள் நினைத்த எல்லாவற்றையும் அவர்களால் பெற்று விடமுடியாது என்பதை அவர்களுக்கு காட்டவேண்டும். முதலியாரின் ஆசைகளை நிறைவேற்றித் தருவதற்காகவே வாழும் ஏழைகள் நாங்கள் இல்லை என்பதை அவர்களுக்குக் காட்ட வேண்டும்.

ஆனால் மகனே நீ காற்றுடன் போராடுவது போல் ஆகப்போகிறாய். எந்த வகையான ஆயுதங்களை அவருக்கு எதிராகப் பிரயோகிக்கப் போகிறாய்? அவரின் பக்கதில் எல்லாமே உள்ளன. அதற்கு மாறாக உன்னிடம் இளமையின் கனல் மட்டுமே உள்ளது.

சூறாவளி போல் ஏற்பட்ட உணர்வால் சூரி நடுங்கினான். நான் பன்றி ஒன்றைக் கொன்று அதனை நாய்களுக்குக் கொடுப்பேன். எனது கைகளால் அவனை கொல்வேன். இந்த உலகிலிருந்து பன்றி ஒன்று இல்லாமல் போய் விட்டது என்று சந்தோசம் அடைவேன்.

"சூரி சூரி" என தகப்பன் கத்தினார். நீ என்ன கூறுகிறாய் என்பது உனக்கே விளங்கவில்லை. வெறும் துக்கத்தையே சந்தித்துக் கொண்டிருக்க பரிதாபத்துக்குரிய எனது அருமை மகனே மடத்தனமான காரியம் எதையும் செய்து விடமாட்டேன் என்று எனக்கு உறுதி மொழி கூறு இவையெல்லாம். பயனற்ற செயல்கள். தனிப்பட்ட வன்முறைகளால் முதலியார் போன்றவர்களை வழிக்குக் கொண்டு வரமுடியாது அவர்கள் பலம் பொருந்தியவர்களாகவும், ஆட்துணை உடையவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை கடவுளால் தான் அழித்தொழிக்க முடியும்.

சூரியர் இடைமறிக்க முற்பட்டான். ஆனால் காத்தார் தொடர்ந்து பேசினார். இவற்றிற்கு மேலாக ஆச்சி எப்படி வேதனைப்படுகிறது என்பதைப் பார் அது வாயில்லாப் பிராணி சூரி உனக்கு அதனை வதைப்பதற்கான உரிமை எதுவும் இல்லை. அது இறந்து விட்டால் அந்தப் பாவம் எமது தலைமேலேயே விழும்.

சோர்வுடன் முதலில் தகப்பனாரையும் பின்பு அண்ணனையும் சூரி பார்த்தான் அவனது உதடுகள் நடுங்கின. அவை கவிந்திருந்தன.

"சரி தான் அப்பா" எனக் கூறிய சூரி எழுந்தான். உங்களின் விருப்பம்போல் செய்யுங்கள்.

"எப்படியாயினும் அது உங்கள் காளை மாட்டை முதலியாரிடம் கொண்டுசெல்லெனச்சொல்ல மாட்டீர்கள் என நம்புகிறேன்" என்றான் சூரி.

ராசு அதனைக் கொண்டு செல்வது தான் நல்லது என்றே எனக்குத் தோன்றுகிறது என தகப்பனார் அன்புடன் கூறினார். சூரியர் திரும்பி நடந்து கொட்டிலை அடைந்தான். அவனுக்குத் தாகமாக இருந்தது. ஒரு கோப்பையை மண்ணாலான

https://tamileelamarchive.com/

குடுவைக்குள் செலுத்தினான். கவனமாக நீரைப் பாவி என சரஸ்வதி கத்தினாள். அவன் சிறிதளவு நீரை மட்டுமே அருந்தினான். பின்பு கோப்பையை உரிய இடத்தில் வைத்தான். ஒரு சால்வையை தலையில் சுற்றிக் கொண்டு அவன் வீட்டை விட்டு வெளியேறினான் நடக்கும் போது பாதங்களை நிலம் சுட்டது. சூரியனின் கதிர்கள் அவனது கண்களை குருடாக்கும் வகையில் உறுத்தின. இயற்கைக் காட்சிகள் அசைவற்ற நிலையிலும் ஒரு நனைந்த கண்ணாடியால் பார்ப்பது போலவும் தோற்றமளித்தன. அவன் புழுதி நிறைந்த ஒரு ஒழுங்கையால் நடந்து தனது நண்பனான நாதனின் வீட்டையடைந்தான்.

சூரியன் ஒரேஞ் வர்ணமாக காட்சி தந்த வானத்தில் விரைவாக கீழே இறங்கிக் கொண்டிருந்தது. திக்குமுக்காடவைத்த அன்றைய உஷ்ணம் தணிந்தாலும்கூட வரண்ட தன்மையுடன் கூடிய காற்றே எங்கும் வியாப்பித்திருந்தது. அவனது வெறுமையான கால்களில் கும்பலாகப் படிந்திருந்த புழுதியை களைவதற்காக நிலத்தில் கால்களை உதைத்துக் கொண்டான். இப்போது கிராமப்புறம் பார்ப்பதற்கு நன்றாகவும், அமைதியாகவும் இருந்தது. ஒருவேளை நாளைய தினம் கூட வானத்தின் கீழ் உள்ள முகில்கள் பலமாகச் சுழன்று நீராவியை பிழிந்து உவப்புடன் கூடிய மழையைத் தரலாம். அப்போது வானத்தின் கீழ் உள்ள சீவராசிகள் எல்லாம் கடவுளின் கருணையை எண்ணி வியப்படைந்து போவார்கள்.

எப்படியோ சூரியருக்கு திருப்தி அடைவதற்கான நல்ல காரணங்கள் பல இருந்தன. தான் முதலியாருக்கு செய்துள்ளதை எண்ணிய போது அவனது முகத்தில் புன்னகை சுடர் விட்டது.

நாளை சிலவேளைகளில் இரவு சரியாக காவிப்பதற்கு முன்னரே முதலியாரின் எல்லாக் கால்நடைகளும் கற்குவியல்கள் போல் செத்துக் கிடக்கும். நாதன் சூரியிடம் முதலியாரின் குளத்தை நஞ்சாக்குவதற்கான அளவுக்கு நஞ்சு கொடுத்திருந்தான். அது போதுமானது எனவும் கூறியிருந்தான். பலம் பொருந்திய மிகவும் கெட்டிக்காரனான ஒரு காவல்காரனை குளத்தை காவல்காக்க முதலியார் நியமித்துள்ள நிலையில் தவழ்ந்து சென்று நஞ்சை குளத்தில்



கொட்டுவது என்பது ஆபத்தான காரியம் தான். விழிப்புடனிருக்கும் அந்தக் காவல்காரனை மறைந்து சென்று ஏமாற்றி எப்படியோ சூரி குளத்துக்குள் நஞ்சை கொட்டிவிட்டான். விரைவில் கால்நடைகள் நீரைக்குடித்து விட்டு இறந்து விடும்.

அவன் பழிதீர்ப்பதற்காகவே இந்தக் கெட்ட காரியத்தை செய்துள்ளான். தனக்கு வந்த கேட்டுக்கு பொறுப்பு உடையவராகவே முதலியார் இருக்கிறார். ஒருவர் கூட அவருக்காக வருத்தப்பட மாட்டார்கள். குற்றம் செய்தவன் கண்டு பிடிக்கப்பட்டாலும் கூட சூரியர் கிராமத்தவர்களது ஆதரவையும் அனுதாபங்களையும் பெறத்தான் போகின்றான். ஆனால் அவன் யாரையும் என்ன நடந்தது எனக் கண்டறிய விடமாட்டான். அவனுக்கு தெரிந்த அளவில் நாதனைத் தவிர எவருக்குமே அவன் குளத்தில் நஞ்சை கலந்தது தெரியாது. நாதன் இந்த இரகசியத்தை எப்படியும் காப்பாற்றுவான் என்பதில் சூரியர் நம்பிக்கையுடன் இருந்தான்.

அவன் தாழ்ந்த குரலில் இனிமையாக பாடினான் அவனது நடைவிரைவாகியது. வெற்றியால் கிடைத்த உணர்வு அவனது முகத்தில் பிரகாசித்தது.

அவன் வீட்டின் படலையைத் திறந்து கொண்டு உள்ளே சென்றபோது அழுகுரல் கேட்டது. அவன் அப்படியே நின்று விட்டான். உடல் நடுங்கியது. அவனுக்கே தெரிந்தது நேற்று தான் குளத்தில் நஞ்சைக் கொட்டியதை யாரோ கண்டு விட்டார்கள் போலும். அதனை விசாரிப்பதற்காக தன்னை அழைத்துச் செல்ல வந்துள்ளார்களோ என்ற எண்ணமே முதலில் அவனுக்கு ஏற்பட்டது. அவன் உற்றுக் கேட்டான் சரஸ்வதியின் குரல் மற்ற எல்லோருடைய குரல்களிலும் மேலாகக் கேட்டது. அவன் மேலும் கூர்ந்து கவனித்துக் கோட்டான். எழும் அழுகுரல் துக்கம் காரணமாகவே அங்கு அப்போது ஏற்பட்டிருக்கிறது என்ற எண்ணம்.

மெதுவாக அவனுக்கு தோன்ற ஆரம்பித்தது. அவனது இதயத்தையும் வயிற்றையும் ஏதோ இனம் புரியாத வலி பற்றிக் கொண்டது அவனது வீட்டில் யாரோ இறந்து விட்டார்கள். அது யாராக இருக்கும் என அவனுக்கு புரிய ஆரம்பித்தது.

அவன் அவசரமாக வீட்டுக்குள் சென்றான். தனது தகப்பனாரின் உயிரற்ற உடலின் பக்கமாக அவனது கால்கள் போயின எல்லோரும் ஒதுங்கி அவனுக்கு இடம் விட்டனர். சரஸ்வதி அவனைக் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினாள். சூரியரின் கண்களில் கண்ணீர் வரவில்லை. அவை அவனது தகப்பனாரின் உடலின் மேல் படிந்திருந்தன அவற்றைப் பார்க்க பயங்கரமாக இருந்தது.

ராசுவின் கண்கள் சிவந்தும் அழுத வண்ணமுமாக இருந்தன. அவனது கைகள் அன்புடனும் ஆதரவுடனும் தம்பியை சுற்றியிருந்தன.

ஏப்படி.... என்னால் நம்ப முடியவில்லை நான் நேற்று அவரை விட்டுப் பிரியுமுன்னர் ஓரளவுக்கு நல்ல சுகமடைந்தவர் போலத்தானே இருந்தார். என சூரியர் கூறினான்.

சடுதியாக ராசு பலமாக தேம்பி அழத் தொடங்கினான். சூரியர் அண்ணனின் கைகளை இறுக்க பற்றிக் கொண்டான். அவர் இறந்த விதம் மிகவும் கொடுமையானது. சூரி மரணம் அவருக்கு அமைதியுடன் வரவில்லை. அவரது முகத்தைப் பார். அது வலியால் திருகியது போல் ஆகி உள்ளது. ஒருவர் சாதாரணமாக இறப்பது போல் சாகவில்லை அவர் இறப்பதற்கு முன் சொல்ல முடியாத வேதனையால் அவதிப்பட்டார்.

ராசு தாங்க முடியாத வேதனையால் தேம்பி அழுதான். இது நடைபெற்றிருக்க முடியாத ஒன்று எப்படி இது நடந்தது.

தனது தேம்பலுக்கிடையே அப்பாவும் நானும் உன்னைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்தோம் என்றான் ராசு. அப்போது அவர் நன்றாகவே இருந்தார். நான் அவருக்கு ஒரு கோப்பை தண்ணீர் கொடுத்தேன். அவர் சிறிது நேரத்தில் வருத்தத்தால் கத்தினார். அவர் புரண்டார். கால்களை அடித்துக் கொண்டார். திருகியது போலானார். ஓ.... சூரி

https://tamileelamarchive.com/










சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் விமானக்குண்டு வீச்சு, தமிழ் அரசியற்கட்சியினரை படுகொலை செய்தல் என்பவற்றை கண்டித்தும் சர்வதேச நாடுகள் தலையீட்டு சிறீலங்கா அரசின் மனிதஉரிமை மீறல்களை தடுத்துநிறுத்த வேண்டும் எனக்கோரியும் 16.03.2008 சனிக்கிழமை யேர்மனி டுசல்டோ  நகரில் கண்டனப்பேரணி நடைபெற்றது. இக்கண்டனப்பேரணியில் 2000க்கும் மேற்பட்டு தமிழ்மக்கள் கலந்து கொண்டதுடன் சிறீலங்கா அரசின் படுகொலைகளை தெரியப்படுத்தும் புகைப்படங்கள் மற்றும் யேர்மன் மொழியிலான பதாதைகளையும் தாங்கிச்சென்றனர். இப்பேரணி யேர்மனிய பாராளுமன்ற முன்றலில் நிறைவுபெற்றது. கண்டனப்பேரணியின் முடிவில் யேர்மன் மொழியிலான மகஜர் ஒன்றும் யேர்மனிய பாராளுமன்றத்திடம் கையளிக்கப்பட்டது.



https://tamileelamarchive.com/


# எரிமலை
# ERIMALAI

கலை பண்பாட்டு
அரசியல்
சமூக இதழ்

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

Tel: 01 43 58 11 42
Fax: 01 43 58 11 91
e-mail: info@erimalai.info

ERIMALAI,
c/o T.C.C France, 341, Rue Des Pyrenees,
75020, Paris, FRANCE



https://tamileelamarchive.com/

எரிமலை
ERIMALAI

ஏப்ரல் - 2008



1985ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்... வசாவிளான்

# இராணுவ உயர்பாதுகாப்பு வலயம்